கல்கி

KALKI 17-5-1970 40காசு







காலமெதுவாயினும் கோலாகலம் தரும் கோகா-கோலா!

பிறருடன் கூடித் தின்பண்டங்கள் உண்ணும் ஆனந்தமே அலாதிதான்!
கூடவே கோகா-கோலாவும் அருந்தினால் அந்த இன்பத்துக்கு இணையே
இல்லை! கோகா-கோலாவின் சுவை, உள்ளத்தைக் கிளுகிளுக்க வைக்கும்
விறுவிறுப்பான சுவை... பருகப் பருகத் தெவிட்டாத தீஞ்சுவை!
கோகா-கோலா... மீண்டும் கோகா-கோலா... மறுபடியும் கோகா-கோலா!
உலகெங்கும் கோகா-கோலா அருந்துவோரின் எண்ணிக்கை பெருகி
வருகிறது. ஏனெனில், கோகா-கோலாவைப் போல
புத்துணர்வூட்டுவது வேறு எதுவுமே இல்லை!

Enjoy Coca-Cola

கோகா-கோலா, கோகா-கோலா கம்பெனியின் ரெஜிஸ்டர்டு ட்ரேட்மார்க்.

CMCC-17-162 TAM



1970 உண்மையில் உங்களுக்கு செல்வமான வருடம்......
அஞ்சலக சேமிப்புப் பாங்கில் முதல் இருந்தால்,
100-ஆல் பெருக்கக்கூடிய ஒரு தொகையை 3-வருடம் தேக்கி
வைத்தால் போதும்...... 4½% வரி நீக்கம் கொண்ட வட்டி ... !
தேக்கி வைத்த 100 ரூபாய் 3-வருடங்களுக்குப் பிறகு
ரூ. 114-ஆகப் பெருகும். 2-வருடத்திற்கு தேக்கினால்
4½% வட்டி... தேக்கப்பட்ட ஒவ்வொரு 100 ரூபாயும்
109-ஆகப் பெருகும்.

இன்னுமொன்று ......ஆண்டு பூராவும் ரூ. 100க்குக் குறையாமல் டெபாசிட்டிலிருக்கும் நிலுவைக்கு (தனிக் கணக்கு, கூட்டுக் கணக்கு, ப்ராவிடண்ட்ஃபண்ட் கணக்கு ஆகியவற்றிலிருக்கும் நிலுவையுள்பட) 4% வரி நீக்கம் கொண்ட வட்டி பெறலாம். இது உங்களுக்கு ‘சாதாரண’ வருடமில்லை.



அஞ்சலகங்கள், மாவட்ட தேசீய சேமிப்பு நிறுவனங்களிலிருந்து முழு விவரங்களும் பெறலாம்.

தேசீய சேமிப்பு நிறுவனம்

davp 70/30

கல்கி


பொருளடக்கம்

சாதாரண, வைகாசி, 3 – 1970, மே 17

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



பறக்க முடியாத பகட்டுப் பறவை; சர்க்கார் தொழிலுக்குச் சரியான சின்னம்.



கம்போடியா குறித்து இந்தியாவின் கொள்கை



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ❊ இதழ் 42

சுதந்திரப் பிரியர்களுக்கு வேண்டுகோள்

கம்போடியாவில் அமெரிக்கா குறுக்கிடலாகாது என்பது இந்திய சர்க்காரின் விருப்பம். வட வியட்நாமும் வியட்காங்கும் அதைத் தம் வசப்படுத்திக்கொள்ளட்டும் என்பதுதான் இதன் பொருள். இந்தக் கருத்து எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

கம்யூனிஸ்ட் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக ஆசிய நாடுகளும், ஆஸ்திரேலியாவும் ஒரு புது உடன்படிக்கை செய்துகொள்ளும்வரை கம்யூனிஸ்டுகள் காத்திருக்கப் போவதில்லை. இச்சமயத்தில் இப்போதைய இந்திய சர்க்கார் நம் நாட்டின் சுதந்திரத்துக்குப் பேராபத்தான வகையில் நடந்துகொள்கிறது.

நமது மக்கள் சுலபத்தில் எதையும் நம்பிவிடக் கூடிய அப்பாவிகள். எனவே புனிதமான உடன்படிக்கைகளை நிராகரிப்பது போன்ற தமாஷாக் காட்சிகளை மக்களுக்கு அரசு ஏற்பாடு செய்கிறது. தேசிய நலனை முன்னிட்டோ நிதி நிலைமை காரணமாகவோ இந்திய சர்க்கார் கொடுத்த வாக்கை மீறவில்லை. எனவே இச்செயல் வெளியுலகில் இந்தியாவின் மதிப்பைக் குறைக்கிறது.

தனது அடிப்படையான பொறுப்பை இந்திய சர்க்கார் தட்டிக் கழிக்கிறது. அமைதியைச் சீர்குலைத்து, வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை செய்து, அந்நிய ஆக்கிரமிப்பாளருக்குத் துணை புரியும் ரீதியில் தேசத் துரோகம் செய்வோரை அடக்குவதற்குப் பயனுள்ள செய்முறை எதிலும் சர்க்கார் ஈடுபடவில்லை. தமது தந்தைக்குரிய பெருமை யெல்லாம் தம்மிடம் இருப்பதாகக் கருதுகிறார் ஸ்ரீமதி இந்திரா காந்தி. ஆனால் இந்தியாவை அச்சுறுத்துகின்ற நிலையையோ அபாயங்களையோ சரிவரப் புரிந்துகொள்ள அவரால் முடியவில்லை. இன்றைய நிலைமைக்குச் சம்பந்தமில்லாத காரியங்களில் அவர் கெட்டிக்காரராக நடந்து கொள்கிறார்.

கம்யூனிஸ்ட் சீனாவின் தலைவர் மாசே-துங், ஆசியா அனைத்தையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதென உறுதி பூண்டிருக்கிறார். பூமியைச் சுற்றி வருகின்ற அவரது விண்வெளிக் கோள் இதைப் பிரசாரப்படுத்தி வருகிறது. மக்களைத் தம் வசப்படுத்தும் கலையில் அசாதாரண ஆற்றல் படைத்தவர் மாவ். அவர் அஹிம்சைக்குக் கட்டுப்பட்டவர் அல்லர். செயலில் இறங்க இதுவே தருணம் என்று அவர் நினைக்கிறார். இந்தியாவில் உள்ள அவரது நண்பர்கள் அவரது துராசைக்குத் தூபம் போடுகிறார்கள்.

ஜனாதிபதி நிக்ஸன் அமெரிக்க உணர்வின் உண்மையான பிரதிநிதி. ஆசிய நாடுகளின் சுதந்திர வாழ்வு பற்றிய போராட்டத்தில் அமெரிக்கா ஈடுபட வேண்டாம் என விலகிவிட விரும்புகிறவர்கள் அமெரிக்க உணர்வின் உண்மையான பிரதிநிதிகள் அல்லர். கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பினின்று கம்போடியாவை விடுவிப்பதில் அமெரிக்கத் துருப்புகள் வெற்றி பெறுமாயின், சண்டை கூடாது என்று இப்போது கூறுபவர்கள்கூடத் தமது வெற்றியினால் நம்பிக்கை பெற்று நிக்ஸனைப் பாராட்டுவார்கள். ஜனநாயகத்தையும் அரசியல் சாஸனத்தையும் உறுதியுடன் ஆதரித்து நிற்போரின் சார்பில், தீரரான ஜனாதிபதி நிக்ஸனுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கம்யூனிஸ்ட் உலகில் ரஷ்யா இன்று ஆதிக்கம் வகித்து வருவது சீனாவுக்கு உகப்பாக இல்லை. இப்பொழுது சீனாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே விரோதம் இருந்து வருகிறது. ஆனால் இது நிரந்தரமான விரோதம் என்று நம்பி ஏமாறலாகாது. உலகமனைத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பது தான் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் பொதுவாக உள்ள கம்யூனிஸ்ட் கனவு. இப்போதைய விரோதம் நீங்கி இவ்விரு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு உருவாகலாம்; கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளுக்கு எதிராக அவை கூட்டு நடவடிக்கையிலும் ஈடுபடலாம். உலகின்

முக்கியமான சமாதானக் காவலனாக அமெரிக்கா பணியாற்ற வேண்டியதில்லை என ரஷ்ய — சீன விரோதத்தின் காரணமாக, அமெரிக்காவிலேயே பலர் தவறாக நினைக்கின்றனர். நிக்ஸன் மறுமுறை ஜனாதிபதியாக வரமாட்டார் என்று அவர்களில் ஒருவர் கூறினார். இதற்கு நிக்ஸன் அளித்த பதில் நம்பிக்கை தருவதாக இருக்கிறது. ''நான் மறுமுறை ஜனாதிபதியாக வருவேனா இல்லையா என்பது அற்ப விஷயம். நெருக்கடியான இந்தத் தருணத்தில், சமாதான சக்திகளுக்குத் தலைமை வகித்து இட்டுச் செல்வதற்கான தகுதியை அமெரிக்கா தன் செயலாற்றாமையால் இழந்துவிட்டது என்ற பழி நம்மைச் சாரலாமா என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்'' என்று கூறியுள்ளார் ஸ்ரீ நிக்ஸன்.

இந்தியாவின் சுதந்திரத்துக்கு இப்போதைய நமது சர்க்கார் பேராபத்தாகிவிட்டது என்று நான் கூறினேன். இரு வகைகளில் இது உண்மை. அரசியல் சாஸனத்தில் செப்பியுள்ள அடிப்படை உரிமைகளை ரத்துச் செய்யப் பார்ப்பதன் மூலம் பிரஜைகளின் சுதந்திரத்தைப் பறிப்பதாக அது பயமுறுத்துகிறது. இது முதல் உண்மை. தேசத் துரோகமான காரியங்களை அடக்குவதற்குப் போதிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறுவதன் மூலம் இந்தியாவின் சுதந்திரத்துக்கு அபாயம் விளைவிப்பதுடன் அன்னியரின் பேராசைகளையும் அது வளர்க்கிறது. அந்நிய ஆக்கிரமிப்பு விஷயமாக நான் பீதியை அனாவசியமாக விளைவிக்கிறேன் என்று கருதலாம். பிரஜைகளின் சுதந்திரம் வரவர அதிகமான அளவில் ஆபத்துக்கு உள்ளாகி வருவது தெளிவாகப் புலனாகிறது. இதை அலட்சியம் செய்ய முடியாது. பிரஜைகளின் உரிமையைக் குறைக்கின்ற கொள்கையும், மக்கள் சுதந்திரத்தின் இடத்தை அரசாங்க ஆதிக்கத்தால் நிரப்புவதும் தோல்வியுறத்தான் செய்யும். ஆனால் இந்தத் தோல்விகளின் விளைவாக இதே தவறுகள் மேலும் வளர்கின்றன, ''கண்ட்ரோல்கள் பலிக்கவில்லையா? மேலும் கண்ட்ரோல்களைப் போடுங்கள்'' என்பது போல்.

தகுதியற்ற இந்திய சர்க்காரை, மேலே குறிப்பிட்ட இரட்டை அபாயம் மேலும் வளருவதற்கு முன்பு, அகற்றியாக வேண்டும். சுதந்திரத்தை முழு அளவில் மதிக்கும் கட்சிகள் தமது தனித் தனி உருவத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் அகம்பாவத்தைக் கைவிட்டு இதற்காக ஒன்றுபட வேண்டும்.

ஆங்காங்கு தலைதூக்கும் சண்டைகள் உலக யுத்தமாக வளர்ந்துவிடக் கூடாதே என்று மேலை நாடுகள் அஞ்சுகின்றன. எதைச் செய்தாவது உலக யுத்தத்தைத் தவிர்ப்பதே அவற்றின் விருப்பம். தென் வியட்நாம் கம்யூனிஸ்ட் நாடாகிவிட்டால் பரவாயில்லை என்று அவை நினைக்கின்றன. கம்போடியாவும் கம்யூனிஸ வழியைப் பின்பற்றினால் பரவாயில்லை என்று அவை நினைக்கலாம். உலக யுத்தம் வராமல் தடுப்பதற்குள்ள ஒரே வழி இந்தியா கம்யூனிஸ்டுகள் வசமாகி விடுவதுதான் என்றாலும், மேலை நாடுகள் அதைப் பொருட்படுத்த மாட்டா. ஆனால் உலக யுத்தம் என்ற பீதியை அகற்றுவதற்காக இவ்வளவு பெரிய விலை கொடுப்பதற்கு நம் நாட்டவர் உடன்பட முடியாது. கம்போடியாவும் தென் வியட்நாமும் வட வியட்நாம் வசமாகி, மாவின் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டால், இந்தியாவின் சுதந்திரம் பேராபத்துக்குள்ளாகி விடும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மேலை நாடுகளின் அரசுகள் மூன்றாவது உலக யுத்தத்தைப் பற்றிய பீதியில் சொல்வதையே தில்லியிலுள்ள நம் அயல்நாட்டு அமைச்சகமும் கிளிப்பிள்ளை போலக் கண்மூடித்தனமாகக் கூறிக்கொண்டிருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நமது கவலையெல்லாம் இந்தியாவின் சுதந்திரத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். கம்யூனிஸ்ட் சர்வாதிகாரம் ஏற்பட்டு அதற்கு நாம் இரையாகாதபடி காத்துக்கொள்ள வேண்டும். மூன்றாவது உலக யுத்தத்தைப் பற்றிய பீதியின் காரணமாக கம்யூனிஸப் படுகுழியில் விழுந்துவிடக் கூடாது.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

ராஜாஜியின் கருத்துக்கள்

மத்திய சர்க்காரின் அதிகாரங்களைக் குறைத்துத் தமக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று மாநிலங்கள் கோருகின்றன. தர்க்க ரீதியில் இதற்குச் சாதகமாக எவ்வளவோ கூற முடியும். ஆனால் கம்யூனிஸ்ட் நடவடிக்கைகள் ஆசியாவில் அபாயமாக வளர்ந்து வருகின்ற இன்றைய நிலவரத்தில் இம்மாதிரி செய்வதைப் பற்றி மனிதனும் நினைக்கவும் முடியாது. தில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் ஸ்ரீ மொரார்ஜி தேசாய் தமது நிலைமையைத் தெளிவுபடுத்திக் காட்டிய உறுதி போற்றுதற்குரியது. இப்பிரச்னை விஷயமாக ஸரொட்டான மனப்பான்மை கொள்வதற்கு இது தருணமல்ல. தேசத்தைச் சின்னாபின்னப் படுத்துவது மக்கள் நலனோ சோஷலிஸமோ ஆகாது.

விசேஷ சக்தி வாய்ந்த ஆயுதங்களின் வலிமையை விட, மனித உள்ளத்தின் உறுதி அதிக சக்தி வாய்ந்தது. ஆசியாவில் அமெரிக்காவின் ஈடுபாடுகள் இதைத் தெளிவுபடுத்தியுள்ளன. தமது உயிரைத் திருணமாக மதித்துப் போரில் குதிப்பதற்கு மக்கள் தயாராக இல்லை என்றால், பயங்கரமான ஆயுதங்களால் மட்டும் அனைத்தையும் சாதித்துவிட முடியாது. ஆயுதங்கள் முதல்தரமானவையாக இல்லாமல் இருந்தபோதிலும் அவை எண்ணிக்கையில் குறைவாக இருந்தபோதிலும் நெஞ்சுறுதியுடன் போரில் குதிப்பவர்களால் வெற்றி காண முடியும். திருத்தமான ஆயுதங்கள் இருப்பது முக்கியம்தான்; ஆனால் போரின் பிரதானமாக விளங்க வேண்டியது மனிதன் காட்டக்கூடிய நெஞ்சுறுதிதான்.

என்ன சேதி?

கவிஞானியருக்குக் கவின் மண்டபம்

அம்பிகையின் ஞானப்பாலைப் பருகி ஞானச் சொற் களஞ்சியம் தந்த மகான்கள் இருவர். ஒருவர் பகவத் பாத ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியர்; மற்றவர் முத்தமிழ் விரகராகிய திருஞானசம்பந்த சுவாமிகள். இவ்விரு மகா புருஷர்களுமே வைதிகத்தைப் பரப்பியவர்களாவர். எனவே இவர்களுக்கு ஒவ்வோர் ஆலயத்திலும் சந்நிதி எடுத்துப் பூஜிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நல்ல காரியத்தில் திருவேற்காடு யோக கருமாரியம்மன் அதிஷ்டானத்தார் ஈடுபட்டிருப்பது ஆஸ்திகருலகின் பூரண ஆதரவுக்கு உரியது. யோக கருமாரிஅம்மன் ஆலயத்தில் எழுப்பப் படவிருக்கும் ஸ்ரீ ஆதி சங்கரர்—திருஞானசம்பந்தர் மணிமண்டபத்துக்குப் பொருளுதவி செய்வோர் கீழ்க் கண்ட விலாசத்துக்குத் திரவியம் அனுப்பவும்: பொருளாளர், ஸ்ரீ யோக கருமாரியம்மன் அதிஷ்டானம், திருவேற்காடு, சென்னை-56.

மகத்தான வெற்றி!

மே மாதம் ஐந்தாந் தேதி இந்திய டென்னிஸ் சரித்திரத்தில் பொன்னுள் தான். பெங்களூர் கப்பன் மைதானத்தில், டேவிஸ் கோப்பை கிழக்குப் பகுதி இறுதி ஆட்டத்தில் பிரேம்ஜித்லாலும் முகர்ஜியும் வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறார்கள். டென்னிஸில் ஆஸ்திரேலியாவை நாம் முறியடித்தது இதுவே முதல் தடவை. எதிர்க் கட்சி காப்டனும், விம்பிள்டன், டேவிஸ் கோப்பை வீரருமான பிரேஸர், ''திறமை மிக்கது இந்திய கோஷ்டி; கண்ணுக்கினிய டென்னிஸ் விருந்து!'' என்று மனமுவந்து பாராட்டி யிருக்கிறார்.


எளிதாகக் கிட்டிய வெற்றியல்ல. மிகவும் சிரமப்பட்டுப் பெற்ற மகத்தான வெற்றி. ஆஸ்திரேலிய டென்னிஸ் வீரர்கள் ராபின் ஸன் கிரீனும் ஸ்டோனும் அலெக்ஸாண்டரும் தம் கடுமையான எதிர்ப்பைக் கடைசி வரை காட்டிப் போராடினார்கள். அதனால் இந்த வெற்றி பன்மடங்கு முக்கியத்துவம் பெற்றதாகிறது.

மே மாதம் ஐந்தாந்தேதி தேசிய சாம்பியன் லால், கிரீனைத் தோல்வியடையச் செய்து இந்தியாவுக்கு மாபெரும் வெற்றியைத் தேடிக் கொடுத்தார். லாலின் அபார சாதனையைப் போற்றாதவர் இல்லை. 'ஆடாத' காப்டன் கிருஷ்ணன் ஓடி வந்து லாலைத் தழுவிப் பாராட்டினார். லாலின் அழகான மனைவி தம் கணவரது வெற்றியைக் கண்டு பூரித்ததில் அதிசயமில்லை, பாரத நாடே பெருமிதப் பூரிப்படைந்திருக்கிறதல்லவா?

லால் கல்கத்தாவில் ரஷ்ய ஆட்டக்காரர் மெட்ரேவெல்லியை இறுதி ஆட்டத்தில் வென்றது நம் நினைவை விட்டு அகலவில்லை. முன்னுள் விம்பிள்டன் சாம்பியன் சந்திரன்



ஸ்ரீ பிரேம்ஜித் லால்



ஸ்ரீ முகர்ஜி

'திறமை மிக்கவர்களையும் தோல்வி யடையச் செய்யும் வல்லமை படைத்தவர் லால்' என்று பாராட்டியதும் நம் நினைவுக்கு வருகிறது.

இந்திய டென்னிஸ் கோஷ்டியினர் இனி ஐரோப்பியப் பகுதி வெற்றி வீரர்களோடு செமி பைனலில் கலந்து கொள்ளும் நிலையை அடைந்திருக்கிறார்கள். இந்தப் போட்டிகளிலும் இந்திய டென்னிஸ் கோஷ்டியினர் சளைக்காமல் ஆடி, இந்தியாவுக்குப் புகழுக்கு மேல் புகழ் கொணர்ந்து தர வேண்டும். அவர்களுக்கு நம் நல்வாழ்த்துக்கள்!

ஆதி சங்கரர் லட்சார்ச்சனை

தேசமெங்கும் ஸ்ரீமத் ஆதி சங்கரரின் ஜயந்தி கொண்டாடப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் சிரோபூஷணமாக, ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி ஆலயத்தில் பூரண சாந்நித்தியத்துடன் குடிகொண்டுள்ள ஸ்ரீ சங்கரரின் திருமூர்த்தத்துக்கு லட்சார்ச்சனை நடத்தப்படுகிறது. பரமேசுவரனின் திருநாமங்களைக் கூறுவதும், வேதத்திலேயே இடம் பெற்றதுமான ருத்ர த்ரிசதியின் மூலம் லட்சார்ச்சனை நடப்பது விசேஷமாகும். காஞ்சிபுரம் ஸ்ரீ காமாக்ஷி தேவஸ்தானத்துக்கு ரூபாய் எட்டு அனுப்பி வைத்துப் பெயர், கோத்திரம், நட்சத்திரம் தெரிவித்தால் அர்ச்சனைப் பிரசாதம் பெறலாம்.



"ஸ்டேட் பாங்க் பிரயாணிச் செக்குகளைப் பற்றி யாராவது அவரிடம் தெரிவித்தால் தேவலை!"

ஆயுதமேந்திய காவலாளர்களை அமர்த்திக் கட்டுப்படியாகுமா? தேவைப்படும் எல்லா ரொக்கத்தையும் நீங்கள் ஸ்டேட் பாங்க் பிரயாணிச் செக்குகளாக எடுத்துச் செல்லலாமே. பாதுகாப்புக்கு முழுப் பாதுகாப்பு, வசதிக்கு வசதி.

ரூ. 50, ரூ. 100 ஆகிய இனங்களிலே பிரயாணி ரூபாய்ச் செக்குகளை வெளியிடுகின்றது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா. 2600 க்கு மேற்பட்ட அலுவலக, துணையகங்கள் ஸ்டேட் பாங்கிற்கு உள்ளன; எதில் வேண்டுமானாலும் நீங்கள் அந்தச் செக்குகளை ரொக்கப் பணமாக மாற்றிக்கொள்ளலாம். தவிர, இந்தியாவிலும் சரி, பிற நாடுகளிலும் சரி, விமான நிலையங்களிலும், ஓட்டல்களிலும், கடைகளிலும் உள்ள ரொக்கமாற்று ஏஜெண்டுகளிடம் மாற்றிக்கொள்ளமுடியும். எங்கெங்கும், எந்த சமயத்திலும்—பாங்கு மூடியிருக்கும் நேரத்தில்கூட—உற்றதுணையாக உதவக்கூடிய செக்குகள் அவை.

நடைமுறைத் தொல்லைகள் இல்லை. ஆபத்தே இராது. செக்கு தொலைந்து போனால் வேறொன்றைப் பெறுவதும் எளிதே.

ஆபத்தை ஏற்காதீர்கள். ஸ்டேட் பாங்க் பிரயாணிச் செக்குகளை ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஸ்டேட் பாங்க்—மிகச் சிறிய மனிதருக்கும் பணிபுரியும் மிகப் பெரிய பாங்க்

AIYARS-5.91 TM



பொன்னியின் செல்வன்

நாற்பத்திமூன்றாம் அத்தியாயம்

நந்தி மண்டபம்

மறுநாள் பிற்பகல் மீண்டும் பெரிய பிக்ஷு பொன்னியின் செல்வனைப் பார்ப்பதற்கு வந்தார். அவரிடம் பல கேள்விகள் கேட்பதற்கு இளவரசன் துடித்துக் கொண்டிருந்தான். சின்ன பிக்ஷுவிடம் அவன் கேள்வி கேட்டு விவரம் அறிந்து கொள்ளச் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. ''ஐயா! எல்லாம் குருதேவர் தெரிவிப்பார்'' என்ற ஒரே வித மறுமொழிதான் திரும்பத் திரும்ப வந்தது.

குருதேவர் வந்ததும், ''இளவரசே! இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார்.


''ஐயா! உடம்பு என்னை மிகவும் தொந்தரவுபடுத்துகிறது. 'எதற்காகச் சோம்பிப் படுத்திருக்கிறாய்? எழுந்து ஓடு! குதிரை மேல் ஏறு! நதியில் குதித்து நீந்து! யானையுடன் சண்டை போடு! வெறுமனே படுத்திராதே!' என்கிறது. வயிறும் வெகு சுறுசுறுப்பாயிருக்கிறது. சின்ன பிக்ஷு கொண்டு வந்து கொடுத்த உணவெல்லாம் போதவில்லை. ஆச்சாரியரே! இத்தனைநாள் நான் கடும் சுரம் பிடித்து நினைவு தவறியிருந்தேன் என்பதையே நம்ப முடியவில்லை. தங்களுடைய மருந்து அவ்வளவு அற்புதமான வேலை செய்திருக்கிறது!'' என்று சொன்னான் பொன்னியின் செல்வன்.

''ஐயா! உடம்பின் பேச்சை ரொம்பவும் நம்பிவிடக் கூடாது. சுரம் தெளிந்ததும் அப்படித்தான் இருக்கும். கொஞ்சம் அசட்டையாயிருந்து, இரண்டாந் தடவை சுரம் வந்து விட்டால், உயிருக்கே ஆபத்தாகப் போய் விடும்!''

''குருதேவரே! என்னுடைய உயிருக்கு வரக் கூடிய ஆபத்தைப்பற்றி நான் அவ்வளவாகப் பயப்படவில்லை..''

அமரர் கல்கி

''தாங்கள் கவலைப்படவில்லை; சரிதான்! ஆனால் இந்தச் சோழ நாட்டில் உள்ள கோடி கோடி மக்கள் சென்ற நாலைந்து நாட்களாக எவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், தெரியுமா? நாடு நகரங்கள் எல்லாம் அல்லோலகல்லோலப்படுகின்றன. சின்னஞ் சிறு குழந்தைகள் முதல் வயோதிகர்கள் வரையில் கண்ணீர் விடுகிறார்கள்...''



''ஐயா! தாங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. ஜனங்கள் எதற்காக அவ்வளவு வருத்தப்பட வேண்டும்? ஒரு வேளை நான் இந்தச் சுரம் குணமாகிப் பிழைக்க மாட்டேன் என்ற எண்ணத்தினாலா? சூடாமணி விஹாரத்தில் தாங்கள் எனக்குச் சிகிச்சை செய்து வருகிறீர்கள் என்று தெரிந்திருக்கும் போது ஜனங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?''

''இளவரசே! தங்களுக்குச் சுரம் என்பதும், தாங்கள் சூடாமணி விஹாரத்தில் இருந்து வருவதும் ஜனங்களுக்குத் தெரியாது. இந்த நகரத்தின் மாந்தர்களுக்கு அது தெரிந்திருந்தால், இந்த விஹாரத்தில் இவ்வளவு அமைதி குடிகொண்டிருக்குமா? மதில் சுவர்களையெல்லாம் இடித்துத்தகர்த்துக்கொண்டு அத்தனை ஜனங்களும் தங்களைப் பார்க்க இங்கு வந்திருக்கமாட்டார்களா? அன்று காலையில் தாங்கள் கடலில் மூழ்கிவிட்டதாகச் செய்தி வந்தபோது இந்த நகரின் மாந்தர் எழுப்பிய ஓலத்தையும் பிரலாபத்தையும் தாங்கள் கேட்டிருந்தால்... ஏன்? இந்த விஹாரத்துக்குள்ளேயே அன்று காலை கண்ணீர் விட்டுக் கதறாதவர் யாரும் இல்லையே?''

பொன்னியின் செல்வர் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து, ''குருதேவரே! இது என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே? நான் கடலில் முழுகி விட்டதாகச் செய்தி வந்ததா? எப்போது வந்தது? யார் அத்தகைய பயங்கரச் செய்தியைக் கொண்டு வந்தது? எதற்காக?'' என்று கேட்டார்.

''யார் கொண்டு வந்தார்களோ, தெரியாது! ஒரு நாள் காலையில் அந்தச் செய்தி இந்த நகரமெங்கும் பரவி விட்டது. தங்களை இலங்கையிலிருந்து கோடிக்கரைக்கு ஏற்றி வந்த கப்பல் சுழற் காற்றில் அகப்பட்டு முழுகி விட்டதாக ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். கோடிக் கரையோரமாகத் தனாதிகாரி பழுவேட்டரையர் தங்களை எவ்வளவோ தேடியும் தங்கள் உடல் கூட அகப்படவில்லை யென்றும், ஆகையால் கடலில் முழுகிப் போயிருக்க வேண்டும் என்றும் பராபரியாகச் செய்தி பரவிவிட்டது. அதைக் கேட்டு விட்டு நான்கூட இந்த விஹாரத்தின் வாசலில் நின்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்போது இன்னொரு பிக்ஷு வந்து, நோயாளியை ஏற்றிக் கொண்டு ஒரு படகு விஹாரத்தின் பின்புறத்துக் கால்வாயில் வந்திருப்பதாகத் தெரிவித்தார். நான் உடனே வந்து பார்த்த போது படகில் உள்ள நோயாளி தாங்கள்தான் என்பதைக் கண்டேன். பிறகு, மூன்று நாட்களாகச் சிகிச்சை செய்து வந்தோம். நேற்றுத்தான் தங்களுக்கு நினைவு வந்தது.''

''ஆச்சாரியரே! என்னைப் படகில் ஏற்றிக் கொண்டு வந்தது யார், சொல்ல முடியுமா?''

''ஒரு இளைஞனும் ஒரு யுவதியும் படகு தள்ளிக் கொண்டு வந்தார்கள்.''

''ஆம், ஆம்; எனக்குக்கூடக் கனவில் கண்டது போல் நினைவுக்கு வருகிறது. அந்த இளைஞனும் யுவதியும் யார் என்று தெரியுமா? இளைஞன் வாணர் குலத்து வந்தியத்தேவனா?''

''இல்லை, ஐயா! அவன் பெயர் சேந்தன் அமுதன் என்று சொன்னான். சிவ பக்தி மிக்கவன் என்று தோன்றியது. பெண்ணின் பெயரை நான் அறிந்து கொள்ளவில்லை. தேக திடமும் மனோ வலியும் வாய்ந்தவள்....''

''அவள் யார் என்று நான் ஊகிக்க முடியும். ஓடக்காரப் பூங்குழலி; தியாக விடங்கரின் மகள். அவர்கள் என்னை எதற்காக இங்கே அழைத்து வந்தார்கள் என்று சொல்ல வில்லையா?''

''இல்லை, இளவரசே! நான் அவர்களிடம் அதைப் பற்றிக் கேட்கவும் இல்லை.''

''நான் இங்கு பத்திரமாயிருக்கிறேன் என்று தாங்கள் யாருக்கும் தெரியப்படுத்த வில்லையா?''

''இல்லை, ஐயா! யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று தங்களை அழைத்து வந்தவர்கள் சொன்னார்கள். தங்கள் உடல் நிலையை முன்னிட்டுச் சொல்லாமல் இருப்பதே நல்லது என்று நானும் எண்ணினேன்.''

''ஆச்சாரியரே! இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது. என்னைச் சிறைப் படுத்திக் கொண்டு வரும்படி என்



தந்தை – மும்முடிச் சோழ மகாராஜா கட்டளையிட்டிருந்தார். அதற்கிணங்கவே நான் இலங்கையிலிருந்து புறப்பட்டேன். நடுவில் ஏதேதோ சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. சக்கரவர்த்தியின் கட்டளைக்கு விரோதமாக நான் நடந்தேன் என்று குற்றம் சாட்டுவதற்காக இந்தச் சூழ்ச்சி நடந்திருப்பதாகத் தோன்றுகிறது. நான் கடலில் மூழ்கி இறந்து விட்டதாகவும் கதை கட்டி விட்டிருக்கிறார்கள். குருதேவரே! என்னைத் தாங்கள் இந்தச் சூடாமணி விஹாரத்தில் ஏற்றுக் கொண்டதே இராஜத் துரோகமான காரியம். மேலும் வைத்திருப்பது பெருங் குற்றமாகும். உடனே என்னைத் தஞ்சாவூருக்கு அனுப்பி விடுங்கள்....''

''இளவரசே! தங்களுக்கு இடங் கொடுத்ததற்காக எனக்கு இராஜ தண்டனை கிடைப்பதாயிருந்தால் அதைக் குதூகலத்துடன் வரவேற்பேன். அதன் பொருட்டு இந்தப் புராதனமான சூடாமணி விஹாரத்தை இடித்துத் தள்ளி மண்ணோடு மண்ணாக்கி விடுவதாயிருந்தாலும் பாதகம் இல்லை....''

''தங்களுடைய பரிவைக் குறித்து மகிழ்கிறேன், குருதேவரே! ஆனாலும், என்னைக் கொண்டு வந்தவர்களிடம் ஒன்றும் விசாரியாமல் எப்படி என்னை ஏற்றுக் கொண்டீர்கள் ?''

''விசாரிப்பதற்கு அவசியம் என்ன? கடும் சுரத்தோடு வந்த தங்களை வரவேற்றுச் சிகிச்சை செய்வதைக் காட்டி



னும் என்னைப் போன்ற பிக்ஷுக்களுக்கு வேறு என்ன உயர்ந்த கடமை இருக்க முடியும்? மேலும், தங்களுடைய திருத் தமக்கையார், குந்தவை தேவியார், தாங்கள் இங்கு வந்து சில நாட்கள் தங்கக்கூடும் என்று முன்னமே எனக்குத் தெரிவித்திருந்தார்கள்....''

''ஓ! அப்படியா? இளையபிராட்டியா அவ்விதம் சொல்லி அனுப்பியிருந்தார்? எப்போது?''

''தாங்கள் இங்கு வருவதற்குச் சில நாளைக்கு முன்பு. தங்களைக் கொண்டு வந்த சேந்தன் அமுதனும் இளைய பிராட்டியின் விருப்பம் என்றுதான் கூறினான்.''

''குருதேவா! என்னை அழைத்து வந்தவர்கள் இருவரும் உடனே திரும்பிப் போய் விட்டார்களா? அவர்களைக் கண்டு பிடிக்க முடியுமா? அவர்களைப் பார்த்தாவது சில விவரங்கள் எனக்குத் தெரிந்துகொள்ளவேண்டும்.''

''ஐயா! பதற்றம் வேண்டாம். அவர்கள் இருவரும் இந்த நகரத்திலே தான் இருக்கிறார்கள். தினம் ஒரு முறை வந்து தங்கள் உடல் நிலையைப் பற்றி விசாரித்துப் போகிறார்கள். இன்றைக்கு ஏனோ இதுவரையில் வரக் காணோம்...''

அச்சமயத்தில் சின்ன பிக்ஷு வந்து குருதேவரைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்தார். ஆச்சாரிய பிக்ஷு, ''இதோ வந்து விட்டேன், ஐயா!'' என்று கூறி விட்டு வெளியே சென்றார். சற்று நேரத்துக்கெல்லாம் அவர் திரும்பிவந்தபோது இளவரசன் அருள்மொழி வர்மனுடைய பரபரப்பு மேலும் அதிகமாகியிருப்பதைக் கண்டார்.

''ஆச்சாரியரே! இனி ஒரு கணமும் நான் இங்கே தங்கியிருக்க முடியாது. சக்கரவர்த்தியின் கட்டளையை மீறி நான் இங்கே வந்து ஒளிந்திருந்தேன் என்ற பழியை ஏற்க நான் விரும்பவில்லை. என்னால் இந்தப் புராதனமான சூடாமணி விஹாரத்துக்கு எந்தவிதமான தீங்கு நேரிடுவதையும் விரும்பவில்லை'' என்றான் இளவரசன்.

பெரிய பிக்ஷு மலர்ந்த முகத்துடன், ''இளவரசே! உண்மையில் அத்தகைய பெரும் பொறுப்பை நானும் இனி வகிக்க முடியாது. தங்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக ஒரு கணமும் தங்களை நான் இங்கு வைத்திருக்க விரும்பவில்லை. இந்தக் கணமே தாங்கள் புறப்படலாம். கால்வாயில் படகு ஆயத்தமாய்க் காத்திருக்கிறது!'' என்றார்.

''எங்கே போவதற்கு?''

''அது தாங்கள் தீர்மானிக்க வேண்டிய காரியம். தங்களை இங்கே கொண்டு வந்து சேர்த்த இருவரும் படகுடன் தங்களை அழைத்துப் போக வந்திருக்கிறார்கள்.''

இளவரசன் சிறிது தயங்கினான். ஆச்சாரிய பிக்ஷுவின் முகத்தில் மர்மமான புன்னகை பொலிவதைக் கண்டு, 'இதில் இன்னும் ஏதேனும் சூழ்ச்சி இருக்கக் கூடுமோ?' என்று வியந்தான்.

''அவர்கள் இருவருமே திரும்ப வந்திருக்கிறார்களா? எதற்காக என்று சொல்லவில்லையா?''

''சொன்னார்கள். இந்த விஹாரத்திலிருந்து ஒரு நாழிகை தூரத்தில், கால்வாயின் கரையில் நந்தி மண்டபம் ஒன்று இருக்கிறது. அதில் தங்களைப் பார்ப்பதற்காக இரண்டு பெண்மணிகள் வந்து காத்திருக்கிறார்களாம்.''

இளவரசன் அவசரமாகக் கட்டிலிலிருந்து இறங்கினான். ''ஆச்சாரியரே! உடனே படகுக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள்! இவ்வளவு தாமதம் ஆகிவிட்டதே?'' என்றான்.

பிக்ஷு இளவரசனைக் கையினால் தாங்கிக் கொண்டு கால்வாய்க் கரை வரையில் சென்றார். ஆனால் இளவரசனுடைய நடையில், நாலு நாளைக்கு மேலாகக் கடும் சுரத்தினால் பீடிக்கப்பட்டிருந்ததின் அறிகுறி ஒன்றும் தென்படவில்லை. ஏறு போல் நடந்து பொன்னியின் செல்வர் கம்பீரமாக வருவதைக் கண்டு சேந்தன் அமுதன், பூங்குழலி இருவருடைய முகங்களும் மலர்ந்தன.

அருள்மொழி வர்மன் படகில் ஏறி உட்கார்ந்ததும் பிக்ஷு அவனைப் பார்த்து. ''ஐயா! தங்களுக்கு ஏதேனும் சேவை செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அதை இந்தச் சூடாமணி விஹாரத்துப் பிக்ஷுக்கள் அனைவரும் பெரும் பாக்கியமாகக் கருதுவோம். தாங்கள் திரும்பவும் இங்கு வந்து ஒரு வாரம் தங்கி உடல் வலிவு பெற்றுப் போவது நலம்!'' என்றார்.

''குருதேவரே! நான் திரும்பி வருவேன் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது. இல்லாவிடில் இவ்வாறு மற்ற பிக்ஷுக்களிடம் சொல்லிக் கொள்ளாமல் அவசரமாகப் புறப்பட்டிருக்க மாட்டேன்!'' என்றான் இளவரசன்.

படகு நகரத் தொடங்கியதும், சேந்தன், பூங்குழலி இருவரையும் மாறி மாறிப் பார்த்து, ''இக் கால்வாயின் வழியாக நீங்கள் என்னை அழைத்துக் கொண்டு வந்த போது, நீங்கள் தேவலோகத்தவர்கள் என்றும், சொர்க்கத்துக்கு என்னை அழைத்துப் போகிறீர்கள் என்றும் எண்ணியிருந்தேன். என்னை ஏமாற்றி விட்டீர்கள். சந்நியாசி மடத்

துக்குக் கொண்டு போய்ச் சேர்த்தீர்கள். போனால் போகட்டும். கடலில் நீந்திக் கை சளைத்து நினைவிழந்து போனதிலிருந்து நடந்ததையெல்லாம் உங்களிடம் கேட்க வேண்டும். அதற்கு முன்னால், நந்தி மண்டபத்தில் எனக்காகக் காத்திருப்பவர்கள் யார் என்று சொல்லுங்கள்!'' என்றான் இளவரசன்.

இருவரையும் பார்த்து அருள்மொழிவர்மன் கேட்ட போதிலும் பூங்குழலி வாய் திறக்கவில்லை. சேந்தன் அமுதன்தான் மறுமொழி கூறினான். குந்தவைப் பிராட்டியும் கொடும்பாளூர் இளவரசியும் ஆனைமங்கலத்துக்கு வந்திருப்பதையும், அங்கிருந்து நந்தி மண்டபத்துக்கு வந்து காத்திருப்பதையும் தெரிவித்தான்.

''ஆகா! எடுத்ததற்கெல்லாம் மூர்ச்சை போட்டு விழும் அந்தப் பெண்ணை எதற்காக இளையபிராட்டி இங்கேயும் அழைத்து வந்திருக்கிறார்?''

சேந்தன் அமுதன், ''ஐயா! தமிழ் நாட்டுப் பெண்களிடையே இப்போது ஒரு சுரம் பரவிக் கொண்டிருக்கிறது. புனிதமான சைவ சமயத்தை விட்டுவிட்டுப் புத்த மதத்தைச் சேர்ந்து பிக்ஷுணிகள் ஆகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றான்.

''அப்படி யார் யார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்?''

''கொடும்பாளூர் இளவரசி அவ்விதம் சொல்லிக் கொண்டிருக்கிறாராம். இதோ இந்தப் பெண்ணரசியும் அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கிறாள்.''

''இரண்டு பேர்தானே, அமுதா! அதனால் சைவ சமயத்துக்கு நஷ்டம் வந்து விடாது! இலங்கையில் பிக்ஷுணிகள் தவ வாழ்க்கை நடத்தும் மடங்கள் பலவற்றை நான் அறிவேன். வேண்டுமானால் நானே இவர்களை அழைத்துப் போய்ச் சேர்த்து விடுகிறேன்!'' என்று பொன்னியின் செல்வன் கூறவும், சேந்தன் அமுதன் நகைத்தான்.

பின்னர், கடலிலிருந்து இளவரசனும் வந்தியத்தேவனும் கரையேறியதிலிருந்து நிகழ்ந்தவற்றையெல்லாம் சேந்தன் அமுதன் தான் அறிந்த வரையில் கூறினான். பொன்னியின் செல்வன் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டு வந்ததுடன், தன்னுடைய ஞாபகங்களையும் ஒத்துப் பார்த்துக் கொண்டு வந்தான்.

''அதோ நந்தி மண்டபம்!'' என்று பூங்குழலி கூறியதும், இளவரசன் அவள் சுட்டிக் காட்டிய திசையை நோக்கினான்.

நாற்பத்திநான்காம் அத்தியாயம்

நந்தி வளர்ந்தது!

படகு அப்போது சென்று கொண்டிருந்த இடத்தில் கால்வாயின் கரைகள் இருபுறமும் ஓங்கி உயர்ந்திருந்தன. பூங்குழலி சுட்டிக் காட்டிய இடத்தில் கால்வாயின் ஓரமாகப் படித்துறை மண்டபம் ஒன்று காணப்பட்டது. படிகள் முடிந்து மண்டபம் தொடங்கும் இடத்தில் இரண்டு ஓரங்களிலும் இரண்டு நந்தி விக்கிரகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சிறந்த வேலைப்பாட்டுடனும் ஜீவகளையுடனும் விளங்கிய அந்த நந்தி பகவானுடைய சிலைகளை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். இந்தச் சிலைகளின் முக்கியம் பற்றியே அம்மண்டபத்துக்கு 'நந்தி மண்டபம்' என்ற பெயர் ஏற்பட்டிருந்தது. வருஷத்துக்கு ஒரு முறை வஸந்த உற்சவத்தின் போது திருநாகைக் காரோணத்துக் காயாரோகண சுவாமியும் நீலாயதாட்சி அம்மனும் அந்த மண்டபத்துக்கு விஜயம் செய்து கொலு வீற்றிருப்பது வழக்கம். அப்போது மக்கள் திரள் திரளாக அங்கே வந்து சேர்வார்கள். உற்சவம் பார்த்து விட்டு, நிலா விருந்தும் அருந்தி விட்டுத் திரும்பிச் செல்வார்கள். நகரத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்தபடியால் மற்ற சாதாரண நாட்களில் இங்கே ஜனங்கள் அதிகமாக வருவதில்லை.

படகு மண்டபத்தை நெருங்கியது. மண்டபத்தில் இருந்த இரு பெண்மணிகளையும் பார்த்த பிறகு இளவரசனுக்கு வேறு எதிலும் பார்வையும் செல்லவில்லை; கவனமும் செல்லவில்லை.

படகு நெருங்கி வந்தபோது இளைய பிராட்டி குந்தவை படிகளில் இறங்கிக் கீழ்ப் படிக்கு வந்தாள். வானதியோ மண்டபத்திலேயே தூண் ஒன்றின் பின்னால் பாதி மறைந்தும் மறையாமலும் நின்று கொண்டிருந்தாள்.

படித் துறை அருகில் வந்து படகு நின்றது. இளவரசன் இறங்குவதற்குப் படகிலிருந்தபடி சேந்தன் அமுதனும் படியில் நின்றபடி இளையபிராட்டியும் உதவி செய்தார்கள்.

சேந்தன் அமுதனும் பூங்குழலியும் படகைப் பின்னுக்குச் செலுத்திக்

கொண்டு போய்ச் சிறிது தூரத்தில் நிறுத்தினார்கள்.

''தம்பி! எப்படி மெலிந்து விட்டாய்?'' என்று குந்தவை கூறிய போது அவளுடைய கனிந்த குரலிலே கண்ணீர் கலந்து தொனித்தது.

பொன்னியின் செல்வன், ''என் உடல் மெலிவு இருக்கட்டும், அக்கா! உன் முகம் ஏன் இப்படி வாடியிருக்கிறது? என்னைக் கண்டதும் உன் முகம் தாமரை போல் மலருவது வழக்கமாயிற்றே? இன்றைக்கு ஏன் உன் முக சந்திரனை மேகம் மறைத்திருக்கிறது? உன் கண்கள் ஏன் கலங்கியிருக்கின்றன? ஆகா! உன் உள்ளத்தைப் புண்படுத்தி வேதனையளித்த எத்தனையோ காரியங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். இல்லாவிடில் எனக்கு அவ்வளவு அவசரமாக ஓலை அனுப்பியிருக்க மாட்டாய்!'' என்றான்.

''ஆம், தம்பி! எத்தனையோ அவசரமான விஷயங்கள் சொல்ல வேண்டும்; கேட்க வேண்டும். இலங்கையின் தங்கச் சிம்மாசனத்தை வேண்டாம் என்று தள்ளிய வள்ளலே! இந்தக் கருங்கல் சிம்மாசனத்தில் சிறிது நேரம் உட்கார்ந்து கொள்!'' என்றாள்.

பொன்னியின் செல்வன் உட்காரும் போது தமக்கையின் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டான். குந்தவை அவனுடைய தலையைக் கரத்தினால் தொட்டு, உச்சிமுகர்ந்தாள், அவளுடைய கண்களில் மேலும் கண்ணீர் ததும்பியது.

இருவரும் உட்கார்ந்தபிறகு குந்தவை ''தம்பி! உன்னை இன்றைக்கு நான் இங்கு வருவித்திருக்கவே கூடாது. சூடாமணி விஹாரத்தின் தலைவர் உனக்கு உடம்பு நன்றாகக் குணமாகி விட்டது என்று செய்தி அனுப்பினார். அது சரியல்ல; சுரம் உன்னை வாட்டி எடுத்திருக்கிறது. ஆனால் உன்னைப் பார்க்காமலிருக்கவும் என்னால் முடியவில்லை. ஆனைமங்கலம் வந்த பிறகு ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாகச் சென்று கொண்டிருந்தது!'' என்றாள்.

''அக்கா! என்னை இங்கு வருவித்தது பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நீ மட்டும் படகு அனுப்பாமலிருந்தால் நான் இத்தனை நேரம் பழையாறைக்கே புறப்பட்டிருப்பேன். கடுமையான சுரத்திலேயும்கூட உன்னுடைய ஓலைதான் என் மனத்தை வருத்திக் கொண்டிருந்தது. அந்த ஓலையை ஒருவரிடம் அனுப்பியிருந்தாயே? அந்த வாணர் குலத்து வந்தியத் தேவரைப் போன்ற வீரரை நான் பார்த்ததேயில்லை. எத்தனையோ விதமாக அவரைச் சோதித்தேன். எல்லாவற்றிலும் தேறி விட்டார். அவர் இப்போது எங்கே, அக்கா?''

குந்தவையின் முக சந்திரனை மறைத்திருந்த மேகத் திரை சிறிது அகன்றது. பவள இதழ்கள் திறந்து முத்துப் பற்கள் தெரியும்படி புன்னகை பூத்து, ''தம்பி! அவரைப் பற்றி இப்போது என்ன கவலை? வேறு எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன!'' என்றாள்.

''என்ன அப்படிப் பேசுகிறாய் அக்கா! உனக்கு அதிருப்தி அளிக்கும்படி நடந்து கொண்டாரா?''

''இல்லை, இல்லை! நான் ஏன் அதிருப்தி அடைய வேண்டும்? உன்னை அழைத்துக் கொண்டு வந்து சேர்ப்பதாக வாக்களித்தார். அந்த வாக்கை அவர் நிறைவேற்றி விட்டார்.....''

''அதற்காக அவர் செய்த தந்திர மந்திரங்களையும் கைக்கொண்ட சூழ்ச்சி வித்தைகளையும் நினைக்க நினைக்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது! அவர் எங்கே அக்கா? நீ இங்கு வந்திருக்கிறாய் என்று தெரிந்ததும், வந்தியத்தேவரும் உன்னுடன் வந்திருப்பார் என்று எண்ணினேன். எடுத்ததற்கெல்லாம் மூர்ச்சை போட்டு விழும் இந்தப் பெண்ணரசி அல்லவா வந்திருக்கிறாள்!''

''இவள் எவ்வளவு தைரியசாலி ஆகி விட்டாள் என்பது உனக்குத் தெரியாது, தம்பி! நேற்று நமது முதன் மந்திரியின் யானை இவளைத் தன் துதிக்கையால் தூக்கி எறிந்தது. மேலே அம்பாரியில் இருந்த என் மடியிலேதான் எறிந்தது. ஆனால் அது அவளுக்குத் தெரியாது. அப்போது எவ்வளவு தைரியமாக இருந்தாள் என்பதை நீ பார்த்திருந்தால்...''

''போதும், உன்னுடைய தோழியின் புகழை நிறுத்திக் கொள்! என் நண்பரைப் பற்றிச் சொல்!''

''அவரைப் பற்றி என்ன சொல்வது? அவர் வந்த காரியம் ஆகிவிட்டது. திரும்பி அவருடைய எஜமானன் ஆதித்தகரிகாலனிடம்போய்விட்டார்.''

''அப்படியானால், அவர் வாக்குத் தவறி விட்டார். தான் காஞ்சிக்குப் போகப் போவதில்லையென்றும், சோழ நாட்டிலேயே இருந்து விடப் போவதாகவும் கூறினாரே?''

''அது எப்படிச் சாத்தியம்? சோழ நாட்டில் இருந்து அவர் என்ன செய்வது? இங்கே உள்ளவர்களின் கதியே நாளைக்கு என்ன ஆகும் என்று தெரியாமலிருக்கிறது. அவர் பேரில் உனக்கு அவ்வளவு பிரியமிருந்தால், சக்கரவர்த்தியிடம் தெரிவித்து அவருடைய முன்னோர்கள் ஆண்ட சிற்றரசை அவ

ருக்குத் திருப்பிக் கொடுக்கும்படி செய்துவிட்டால் போகிறது!''

''சிற்றரசை வைத்துக்கொண்டு அந்த மகாவீரர் என்ன செய்வார், அக்கா?''

''எல்லாச் சிற்றரசர்களும் என்ன செய்கிறார்களோ, அதை அவரும் செய்கிறார்! நீதான் இலங்கா ராஜ்யம் வேண்டாம் என்று மறுத்தாய்; அதுபோல் அவரும் வேண்டாம் எனச் சொல்லுவார் என நினைக்கிறாயா?''

இளவரசன் இளநகை புரிந்த வண்ணம், ''அக்கா! இலங்கை இராஜ்யம் வேண்டாம் என்று நான் சாட்சிகள் வைத்துக் கொண்டு மறுத்திருக்கிறேன். அப்படியிருந்தும் என் மீது குற்றம் சாட்டிச் சிறைப்படுத்திக்கொண்டு வரத் தந்தை கட்டளையிட்டிருக்கிறார்.......'' என்றான்.

''தம்பி! நீ இராஜ்யத்தை ஒப்புக்கொண்டிருந்தால் உன்னைச் சிறைப்படுத்திக் கொண்டு வரக் கட்டளை பிறந்திருக்காது! நீ சுதந்திர மன்னன் ஆகியிருப்பாய்! அப்போது உன்னை யார் சிறைப்படுத்த முடியும்?''

''தந்தையின் விருப்பத்துக்கு விரோதமாக நான் அவ்விதம் நடந்து கொண்டிருக்க வேண்டுமா?''

''பொன்னியின் செல்வா! நீ இலங்கை இராஜ்யத்தை ஒப்புக்கொண்டிருந்தால் தந்தை மகிழ்ச்சி அடைந்திருப்பார்! மிச்சமுள்ள சோழ சாம்ராஜ்யத்தை உன் தமையனுக்கும் மதுராந்தகனுக்கும் பிரித்துக் கொடுத்து மன நிம்மதி அடைந்திருப்பார். இப்போதும் அதற்குத்தான் முயற்சி நடக்கிறது. தம்பி! கொள்ளிடத்துக்கு வடக்கே ஒரு ராஜ்யமாகவும் தெற்கே ஒரு ராஜ்யமாகவும் பிரித்துவிடப் பிரயத்தனம் நடக்கிறது. நீ வந்தால் இது விஷயத்தில் தந்தைக்கு உதவியாயிருப்பாய் என்று அவருக்கு நம்பிக்கை. முன்னால் உனக்குச் சொல்லி அனுப்பி நீ வராதபடியால் இப்போது சிறைப்படுத்திக் கொண்டு வரச் சொன்னார். இலங்கை இராஜ்யத்தை நீ மறுத்து விட்டாய் என்பது சக்கரவர்த்திக்கு நன்றாகத் தெரியும்.''

''இராஜ்யத்தைப் பிரிப்பதற்கு நான் ஒரு நாளும் உதவியாயிருக்க மாட்டேன். அதைப் போல் பெரிய குற்றம் வேறொன்றுமில்லை. அதைவிடச் சித்தப்பா மதுராந்தகருக்கே முழு ராஜ்யத்தையும் கொடுத்து விடலாம்.''

''அப்படியானால் முதன் மந்திரியும் நீயும் ஒரே மாதிரி அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள்!''

''ஆம்; முதன் மந்திரியும் அப்படித்தான் கருதுகிறார். இலங்கைக்கு அவர் வந்ததே இதைப் பற்றி என்னுடன் கலந்து பேசுவதற்காகத்தான் அக்கா! இலங்கை இராஜ்யத்தை நான் வேண்டாம் என்று மறுத்ததன் உண்மைக் காரணத்தைச் சொல்லட்டுமா?''

''என்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வாய், தம்பி!''

''ஆம்; என் அந்தரங்கத்தைச் சொல்வதற்கு வேறு யாரும் இல்லைதான். இலங்கைக்குப் போவதற்கு முன்னால் அந்நாட்டைப் பற்றிப் பிரமாதமாக எண்ணியிருந்தேன். போன பிறகுதான் அது எவ்வளவு சிறிய நாடு என்று தெரிந்தது. குதிரையில் அல்லது யானையில் ஏறிப் புறப்பட்டால் ஒரே நாளில் அந்நாட்டின் மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரை வரை போய்விடலாம்.''

''சோழ நாடு மட்டும் அதை விடப் பெரியதா தம்பி! இந்த நாட்டையும் அப்படி ஒரே நாளில் குதிரை ஏறிக் கடந்துவிட முடியாதா?''

''சோழ நாடும் சிறியதுதான். ஆகையினால் சோழ நாட்டுக் கிரீடத்தை எனக்கு யாரே

ஒரு கோப்பை தண்ணீரின் மதிப்பு 7500 பவுன்கள்



வின்ஸ்டன் சர்ச்சில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த போது மஸெசூஸெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னலஜிக்காக ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார்.

அந்த ரேடியோ பிரசங்கம் முடியும் தறுவாயில் ஒரு கோப்பைத் தண்ணீரை வாங்கி மெதுவாகக் குடித்தார். இதனால் அவரது ரேடியோ பிரசங்கம் ஒரு நிமிடம் கூடுதலாகி விட்டது! இதனால் வின்ஸ்டன் சர்ச்சிலின் நிகழ்ச்சிக்குப் பிறகு நடக்க இருந்த ஒரு விளம்பரதாரரின் நிகழ்ச்சி ஒரு நிமிடம் குறைவானதாக ஆகிவிட்டது.

அதன் பலன்:

நிலையத்தினர் விளம்பரதாரருக்கு ஏழாயிரத்து ஐந்நூறு பவுன்கள் அபராதம் கட்ட நேர்ந்தது!

ஆதாரம்: கதம்பம் தகவல்: ஏ. சுவாமிநாதன்

னும் அளித்தாலும் வேண்டாம் என்று தான் சொல்லுவேன். இந்தத் தெய்வத் தமிழகத்தைச் சோழநாடு பாண்டிய நாடு, சேர நாடு என்று பிரித்தார்களே! அவர்கள் பெரிய குற்றம் செய்தார்கள். அதனாலேயே தமிழகத்தில் வீராதி வீரர்கள் பிறந்தும், இந்த நாடு சோபிப்பதில்லை. வட நாட்டிலே சந்திரகுப்தர் என்ன, அசோகர் என்ன, சமுத்திரகுப்தர் என்ன, விக்ரமாதித்யர் என்ன, ஹர்ஷவர்த்தனர் இப்படி மகா சக்கரவர்த்திகள் தோன்றி மகா சாம்ராஜ்யங்களை ஆண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் அவ்விதம் யாரேனும் பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து ஆண்டது உண்டா? காஞ்சி பல்லவர் குலத்தில் மகேந்திர சக்கரவர்த்தியும், மாமல்லரும் இருந்தார்கள். பிறகு அந்தக்குலமும் க்ஷீணித்து விட்டது. அக்கா! நான் இராஜ்யம் ஆளுவதாயிருந்தால் இம்மாதிரி சின்னஞ் சிறு இராஜ்யத்தை ஆள மாட்டேன். இலங்கை முதல் கங்கைவரையில் பரவி நிலைபெற்ற இராஜ்யத்தை ஆளுவேன். மாலத் தீவிலிருந்து சாவகத் தீவு வரையில் தூர தூர தேசங்களில் புலிக்கொடி பறக்கும் மகா சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பேன்!... என்னைப் பைத்தியக்காரன் என்றுதானே எண்ணுகிறாய்?''

''இல்லை, அருள் வர்மா! என்னைப் போல் ஆகாசக் கோட்டைகள் கட்டுவதற்கும் கற்பனைக் கனவுகள் காண்பதற்கும் நீயும் ஒருவன் இருக்கிறாயே என்று எண்ணி மகிழ்கிறேன். நீ பைத்தியக்காரனாயிருந்தால் நான் உன்னைவிடப் பெரிய பைத்தியக்காரி. நம்முடைய தந்தையின் பாட்டனார் பராந்தகச் சக்கரவர்த்தி அப்படியெல்லாம் மனோராஜ்யம் செய்திருந்தார் என்பதை நான் அறிவேன். அவர் காலத்தில் அது பூரணமாய் நிறைவேறவில்லை. ஆனால் என்னுடைய ஆயுட் காலத்தில் நான் அதைப் பார்க்கப் போகிறேன். சோழ சாம்ராஜ்யம் இலங்கை முதல் கங்கை வரையிலும் மாலத் தீவு முதல் சாவகம் வரையிலும் பரந்து விஸ்தரிப்பதைப் பார்த்துவிட்டுத்தான் நான் சாகப் போகிறேன். இந்த எண்ணம் நம் தமையன் ஆதித்த கரிகாலனால் நிறைவேறும் என்று ஒரு காலத்தில் நம்பினேன். அந்த நம்பிக்கை எனக்கு இப்போது போய்விட்டது. ஆதித்த கரிகாலன் மகா வீரன்; ஆனால் மனத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அவனிடம் இல்லை. அதனால் அவன் பெரிய காரியங்களைச் சாதிக்க முடியாது. என் மனோரதம் உன்னால் நிறைவேறும் என்ற ஆசை எனக்கு இன்னும் இருக்கிறது. ஒருவேளை அதுவும் கைகூடாமல் போகலாம். அதனாலும் நான் நிராசை அடையமாட்டேன். உன்னால் கைகூடாவிட்டால் உனக்குப் பிறக்கும் பிள்ளையினால் கைகூடும் என்ற உறுதி கொண்டிருக்கிறேன். உனக்குப் பிறக்கும் புதல்வனை, பிறந்த நாளிலிருந்து நானே எடுத்து வளர்ப்பேன். அவனை இந்த உலகம் கண்டறியாத மகா வீரன் ஆக்குவேன். அற்ப ஆசைகளில் அவன் மனத்தைச் செலுத்த விடாமல் அற்புதங்களைச் சாதிக்கக் கூடிய புருஷ சிங்கமாக்குவேன்...''

''அக்கா! நீ என்னைவிடப் பெரிய பைத்தியம் என்பது நிச்சயம். எனக்குக் கலியாணம் செய்து கொள்ளும் எண்ணமே இல்லை. எனக்குப் பிறக்கப் போகும் புதல்வனைப் பற்றி நீ பேச ஆரம்பித்து விட்டாய். நீ செல்லம் கொடுத்து வளர்க்கும் தோழிகளில் யாருக்காவது அத்தகைய எண்ணமிருந்தால், என்னை மணந்து கொண்டு மணி மகுடம் சூடிச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கலாம் என்ற ஆசை இருந்தால், அது ஒரு நாளும் நிறைவேறப் போவதில்லை. இதை நிச்சயமாய் அவர்களுக்குச் சொல்லிவிடு!'' என்று பொன்னியின் செல்வன் கூறியபோது அவனுடைய பார்வை ஒரு கணம், மண்டபத்தின் தூணுக்குப் பின்னால் நின்றிருந்த வானதியின்பால் சென்றது. மறு கணம் அவன் திரும்பியபோது, அவனுக்கெதிரே இருந்த படித்துறை நந்தி விக்கிரகத்தைப் பார்த்தான்.

''அக்கா! ஒரு செய்தி! இலங்கை சிறிய இராஜ்யமாயிருந்தாலும் அந்த இராஜ்யத்தை முற்காலத்தில் ஆண்ட மன்னர்கள், மகா புருஷர்கள், பெரிய உள்ளங்களைப் படைத்தவர்கள். அவர்கள் பெரிய பெரிய திட்டங்களைப் போட்டுப் பெரிய பெரிய காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். செங்கற்களைக் கொண்டு மலை போன்ற மேக மண்டலத்தை அளாவிய புத்த ஸ்தூபங்களை நிர்மாணித்தார்கள். ஆயிரம் இரண்டாயிரம் அறைகள் உள்ள புத்த விஹாரங்களைக் கட்டினார்கள். பதினாயிரம் தூண்கள் உள்ள மண்டபங்களை எழுப்பினார்கள். புத்த பகவான் எவ்வளவு பெரியவர் என்பதைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளும்படியாக அதோ அந்தத் தென்னை மர உயரமுள்ள புத்தர் சிலைகளை அமைத்தார்கள். அக்கா! இதோ நமக்கு முன்னாலிருக்கும் நந்தி விக்கிரகத்தைப் பார்! எவ்வளவு சின்னஞ் சிறியதாயிருக்கிறது! அடியும் முடியும் காண முடியாத மகாதேவரின் வாகனமாகிய நந்தி இவ்வளவு சிறியதாகவா இருக்கும்? கைலாசத்தில்



விளையாட்டுக்குள் ஒரு விளையாட்டு

'அட பாவி நீயா?'

மேற்கிந்தியக் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்காக ஆட்ட முடிவுக்குப் பிறகு விருந்தும் இன்னிசையும் நடனமும் நடந்து கொண்டிருந்தன. மேற்கிந்திய கிரிக்கெட் காப்டன் ஸ்டோல்மேயர் காரில் வந்து இறங்கினார். அவரை வரவேற்க மேற்கிந்திய ஆட்டக்காரர்களான காட்பிரேயும், ஜான் வார்டிலும் வந்தார்கள். "என் காரின் டிக்கியில் உடைகளும், அணிகளும் வைத்திருக்கிறேன். அவற்றை நீங்கள் இருவரும் அணிந்து கொள்ளுங்கள். விருந்தில் என்ன நடக்கிறது, பார்க்கலாம்!" என்றார் காப்டன் ஸ்டோல்மேயர்.

பெண்களுக்கான உடைகளையும் அணிகளையும் காட்பிரேயும் வார்டிலும் அணிந்து கொண்டனர். முகத்தை இலேசாக மறைக்கும் வலையையும் அணிவித்தார் காப்டன் ஸ்டோல் மேயர். அசல் பெண் மணிகளைப் போல் தோற்றமளித்தனர் வார்டிலும், காட்பிரேயும்.

விருந்து மண்டபத்தில் காப்டன் ஸ்டோல்மேயரோடு நுழைந்த இரு பெண் மணிகளையும் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் கண் கொட்டாமல் பார்த்தார்கள். இவ்விரு பெண் மணிகளும் தங்களோடு நடனமாட வேண்டும் என்று ஆலனும், வட்டிலும் வருந்தி அழைத்தனர்.

பாண்ட் வாத்தியங்கள் முழங்கின. ஆட்டமும் பாட்டமும் தொடங்கின. ஜோடி ஜோடியாகக் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் இசைக்கேற்ப நடனமாடினார்கள். திடீரென்று தரையில் யாரோ ஒரு பொருளை நழுவ விடவே, ஆலனோடு நடனமாடிய 'பெண்மணி' குனிந்து அந்தப் பொருளை எடுத்தாள். ஆலன், "அட பாவி! காட்பிரே! நீயா?" என்று கூவினார். அப்புறமென்ன? வேஷம் வெளிப்பட்டதும் மண்டபமே நகையொலியில் கிடுகிடுத்தது. — குண்டுமணி

பரமசிவனுடைய பரிவாரங்களோ பூத கணங்கள். அந்தப் பூத கணங்கள் அடிக்கடி வந்து தொந்தரவு செய்யாமல் கைலாசத்தின் வாசலில் நின்று காவல் புரிகிறவர் நந்தி தேவர். அவர் இவ்வளவு சிறிய உருவத்துடன் இருந்தால் பூத கணங்களை எப்படித் தடுத்து நிறுத்த முடியும்? அதோ பார், அக்கா! என் கண் முன்னால் இதோ இந்த நந்தி வளர்கிறது. வளர்ந்து, வளர்ந்து, வளர்ந்து பெரிதாகிறது. பிரம்மாண்ட வடிவம் பெற்று இம்மண்டபத்தின் மேற் கூரையை முட்டுகிறது. மேற் கூரை இப்போது போய் விட்டது. நந்தி பகவான் வானமளாவ நிற்கிறார்! பூத கணங்கள் வருகிறார்கள். நந்தி பகவானைப் பார்த்து பய பக்தியுடன் நின்று சிவனைத் தரிசிக்க அநுமதி கேட்கிறார்கள்! நந்தி பகவான் அவ்வளவு பெரியவரா யிருந்தால் சிவபெருமான் வீற்றிருக்கும் ஆலயம் எப்படி இருக்க வேண்டும்? தக்ஷிண மேரு என்று சொல்லும்படி வானை அளாவிய கோபுரம் அமைக்க வேண்டாமா? அதற்குத் தக்க படி பிராகாரம் இருக்க வேண்டாமா? இப்போது சோழ நாட்டில் உள்ள கோயில்கள் அகஸ்திய முனிவர் கோவில் கொள்வதற்குத்தான் ஏற்றவை. சிவபெருமானுக்கு உகந்தவை அல்ல. எனக்கு இராஜ்யமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். சோழ சிம்மாசனத்தில் யார் அமர்ந்தாலும் ஆலயத் திருப்பணி அதிகாரியாக என்னை நியமிக்கும்படி கேட்டுக் கொள்வேன்..."

"தம்பி! நம் இரண்டு பேரில் பைத்தியம் யாருக்கு அதிகம் என்று போட்டி போட வேண்டியதுதான். தற்சமயம் இந்தச் சோழ நாட்டைப் பேரபாயம் சூழ்ந்திருக்கிறது. உட்பகைவர்களாலும் வெளிப் பகைவர்களாலும் சிநேகிதர்கள் போல் நடிக்கும் பகைவர்களாலும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. சில காலமாக நான் அடிக்கடி ஒரு பயங்கரமான கனவு காண்கிறேன். மின்னலென ஒளி வீசும் கூரிய கொலை வாள் ஒன்று என் அகக் கண்முன்னால் தோன்றுகிறது. அது யார் மேலேயோ விழப் போகிறது. அது யார் என்பது எனக்குத் தெரியவில்லை. சோழ குலத்தைச் சேர்ந்த யாராவது அந்தக் கொலை வாளுக்கு இரையாகப் போகிறார்களா அல்லது இந்த சோழ ராஜ்யத்தை இரண்டாகத் துண்டு செய்து நாசமாக்கப் போகும் கொலை வாளா அது என்று தெரியவில்லை. நீயும் நானும் யோசித்து முயற்சி செய்துதான் அத்தகைய அபாயம் இந்நாட்டுக்கு ஏற்படாமல் தடுக்க வேண்டும்!" என்றாள் இளைய பிராட்டி.

"ஆம், அக்கா! வல்லவரையர் கூறிய விவரங்களிலிருந்து எனக்கும் அவ்வாறு தான் தோன்றுகிறது. முக்கியமான அபாயம் சோழ குலத்துக்கு யாரிடமிருந்து வரப் போகிறது என்பதை அறிவாயல்லவா?" என்றான் இளவரசன்.

"பழுவூர் இளையராணி நந்தினியைத் தானே குறிப்பிடுகிறாய், தம்பி!"

"ஆம், அக்கா! அவள் யார் என்பதையும் அறிவாயல்லவா?"

"வந்தியத் தேவர் கூறிய விவரங்களிலிருந்து அதையும் தெரிந்து கொண்டேன். ஆகையினாலேயே இவ்வளவு அவசரமாக உன்னைப் பார்க்க வந்தேன்!" என்றாள் குந்தவை. **(தொடரும்)**



2001 கில்லிக்ஸ்

7 லிட்டர் பிரஷ்ஷர் குக்கர்

6 ஆண்டு உத்தரவாதம் தரும், புகழ்பெற்ற குக்கர்

3 ஸபரேட்டர்கள், துணைக்கருவிகள், கில்லிக்ஸ் [70 பக்க] சமையல் நூல் யாவும் உள்ளிட்டது— முதல் 2001 சரியான விடைகளுக்கு!

அதோடுகூட

முதல் பரிசு: கெல்வினேட்டர் ரெப்ரிஜிரேட்டர் அல்லது ரூ. 3000 ரொக்கம்!
இரு 2ம் பரிசுகள்: ரேடியோகிராம் அல்லது ரூ. 2000 ரொக்கம்!
மூன்று 3ம் பரிசுகள்: ஓம்கார் 6-வால்வு 4-பாண்டு ஏ.ஸி.ரேடியோ அல்லது ரூ. 600 ரொக்கம்!

முந்துங்கள்! முடிவு தேதி 30 ஜூன் 1970


பங்குகொள்க

ஹிமாலயா புக்கே டால்கம்
ஏது எந்தப் பூ போட்டி

A,B,C,D,E, என்ற எழுத்துக் குறிகளோடு வெறும் வரைகோட்டுப் படமாக இங்கே 5 பூக்களைக் காண்க. இந்த 5 பூக்களும் யாவை? கீழே எண் குறிகளோடு உள்ள 12 பூக்களின் பட்டியலிலே இந்த 5 பெயர்களும் உள்ளன. பட்டியலிலுள்ள எந்தப் பெயர் சரியானதோ அதன் நம்பரை (கட்டமிட்ட பகுதிக்குள்ளே) அந்தந்தப் பூவின் எழுத்துக் குறியின் பக்கத்திலே எழுதுக. (இத் தாளின் மூலம் 4 வகை விடைகளை நீங்கள் அனுப்பலாம்).

உதாரணம்: A குறியிட்ட பூவைக் கசகசா என்று நினைத்தீர்களானால், கட்டமிட்ட விடைப் பகுதிக்குள் A–யை அடுத்து 1 எனக் குறிப்பிட்டு, பிறவற்றையும் இதே போல் பூர்த்தி செய்க. (எழுதும் முறைக்குத்தான் இது உதாரணமே தவிர, அந்தப் பூ கசகசா தான் என்று பொருள்படுத்திக்கொள்ள வேண்டாம்).

இதையே நுழைவுத் தாளாகக் கொள்க.



1. காகரட். 2. அரளி. 3. அல்லி. 4. அந்தி மந்தாரை. 5. இரவு ராணி. 6. ரோஜா. 7. தாமரை. 8. சண்பகம். 9. முல்லை 10. செவ்வந்தி. 11. குண்டு மல்லிகை. 12. மயில் கொன்றை.

	முதல் விடை	இரண்டாம் விடை	மூன்றாம் விடை	நான்காம் விடை
A				
B				
C				
D				
E				

பெயர்...

முகவரி...

ஊர்............................ மாநிலம்............................

வாங்க உதவிய கடையின் பெயர்..............................

....

ஹிமாலயா புக்கே டால்கம் பவுடர் 5 வகை மணங்களில் வருகிறது: வசந்தம், சந்தனம், ரோஜா, மல்லிகை, கார்னேஷன்—இவற்றுள் எது உங்களைக் கவர்ந்தது? ஏன் அதை விரும்புகிறீர்கள் என்பதை 20 வார்த்தைகளுக்கு மேற்படாத ஒரு வாக்கியமாக ('ஏனெனில்', 'காரணம்' போன்ற எவ்வித சொற்களையும் உபயோகிக்காமல்) எழுதுக. அழகு, சுய சிந்தனை, பொருத்தம்... இவற்றின் அடிப்படையிலேதான் இது மதிப்பிடப்படும்.

விதிமுறைகள்: 1. எத்தனை விடைகளாயினும் அனுப்பலாம், ஆனால் ஹிமாலயா புக்கே டால்கம் (பெரிய டப்பா) வாங்கின ரசீது ஒன்று, ஒவ்வொரு விடையுடனும் அனுப்பப்படவேண்டும். அதிக டப்பாக்கள் வாங்கின ரசீதாயிருந்தால் எத்தனை டப்பாக்களோ அத்தனை விடைகள் அனுப்பலாம். இத் தாள்மீது நீங்கள் 4 வகை விடைகள் அனுப்பலாம். 2. உங்கள் பெயரும் முழு முகவரியும் அதற்கான இடத்திலே கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட வேண்டும். 3. நுழைவுத் தாள்களை 1970 ஜூலை 1-க்கு முன்னதாகவே வந்து சேரும்படி இம் முகவரிக்கு அனுப்புக: ஹிமாலயா புக்கே டால்கம் 'பிக்-தி-ஃப்ளவர்' காண்டெஸ்ட், போஸ்ட் பாக்ஸ் நம்பர் 11076, பம்பாய் 20. 4. ரிஜிஸ்டர் தபால் வழியே வரும் நுழைவுத் தாள்களை ஏற்கமாட்டோம். 5. கைப்பட நேரில் சேர்ப்பிக்கப்படும் நுழைவுத் தாள்களை ஏற்கமாட்டோம். 6. தொலைந்துபோன, தாமதித்த, சேதமான நுழைவுத் தாள்களுக்குப் பொறுப்பேற்கமாட்டோம். 7. 5 பூக்களையும் சரியாக இனங்கண்டு பார்த்தோரிலே, தலைசிறந்த வாக்கியம் எழுதிய தகுதிப்படி, முதல், 2ம், 3ம் பரிசுக்கு உரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்த நடுவர் குழுவினால் நுழைவுத் தாள்கள் சீர்தூக்கப்படும்; அக் குழுவின் தீர்ப்பே முடிவானது, கட்டுப்படுத்துவது. 8. பரிசு வென்றவை உள்பட, எல்லா வாக்கியங்களும் இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் உடைமையாகும்; விளம்பரத்தில் அவற்றை உபயோகிக்கும் தனி உரிமை இக் கம்பெனியினதே. 9. சரியாக 5 பூக்களையும் இனங்காண்பித்த, முதல் 2001 நுழைவுத் தாள்களுக்கான பரிசுகள் 2001 கில்லிக்ஸ் 7-லிட்டர் பிரஷர் குக்கர். எத்தனை நுழைவுத் தாள்கள் அனுப்பியிருப்பினும் ஒரு குடும்பத்திற்கு இப் பரிசு ஒன்றே ஒன்றுதான். எது குடும்பம் என்பதிலே, இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் வரையறுப்பே தீர்ப்பாகும். 10. யாதொரு கடிதப் போக்குவரத்தும் ஏற்கப்படமாட்டாது. 11. பரிசுகள் பகிர்வு பெறா. 12. முதல், 2ம், 3ம் பரிசு வெல்வோரின் பெயர்கள், போட்டி முடிவடைந்த 3 மாதங்களுக்குள் முக்கிய தினப் பத்திரிகைகளில் வெளியிடப்படும். 13. வெல்பவர்கள் தபால்மூலம் அறிவிக்கப்படுவர். 14. இந்துஸ்தான் லீவர் லிமிடெட், இதன் விளம்பர நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊழியர்களும் இவர்களின் குடும்பத்தினரும் நீங்கலாக, இந்தியாவில் வாழும் யாவரும் போட்டியிடலாம். 15. நுழைவுத் தாள் அனுப்புவதற்கான முடிவு தேதியை ஒத்திப்போட இக் கம்பெனிக்கு முழு உரிமை உண்டு.

1970 பைபர் 1-க்கு முந்தைய தேதியிட்ட ரசீதுகள், இப் போட்டியில் பயன்படுத்தத் தகுதியற்றவை.



“உங்களை நேற்று எழும்பூர் ஸ்டேஷன் பக்கமாகப் பார்த்தேனே!”

“ஆமாம்! ஆமாம்!... ஹைதர் அலியையும் திப்புசுல்தானையும், வாரன் ஹேஸ்டிங்ஸையும் வெல்லஸ்லியையும் பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தேன்.”

“இருக்கட்டுமே, சுவாமி. அதற்கென்ன? என்னமோ ஆண்டவனையே பார்த்துவிட்டு வந்தது போலல்லவா கர்வத்துடன் பேசுகிறீர்?”

“அதுவா, இந்த ஆவணக் காப்பகத்துக்குள் நுழைந்து திரும்பியதிலிருந்தே கொஞ்சம் ஆணவம் மிகுதியாகத்தான் இருக்கிறது” என்றேன் நான்.

ஆவணக் காப்பகத்தைப் பார்த்துவிட்டு வரும் யாருக்குமே பெருமையாகத்தான் இருக்கும். கௌடில்யர் தம் அர்த்த சாஸ்திரத்தில் ‘அக்ஷபாதாள’ என்ற பதத்தைப் பிரயோகிக்கிறார். இதற்குக் கணக்கு வழக்கு சம்பந்தமான சர்க்கார் தஸ்தாவேஜுகளைப் பத்திரப்படுத்தும் அறை என்று பொருள். ஆங்கிலத்தில் ‘ரிகார்டு ரூம்’ என்று குறிப்பிடலாம். சோழ அரசர்கள் இந்தத் தஸ்தாவேஜு அறையை ஆவணக்களரி என்று அழைத்தார்கள். இதை ஒட்டித்தான், 1909ல் ‘ரிக்கார்ட் ஆபீஸ்’ என்று நாமகரணம் சூட்டப்பட்ட இடத்தைத் தமிழக அரசு சமீபத்தில் ‘தமிழ் நாடு ஆவணக் காப்பகம்’ என்று மாற்றியிருக்கிறது.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை இப்போது இருக்கும் இடத்தை, கிழக்கிந்தியக்

கட்டுக் கட்டாகக் கடிதக் குவியல்கள்


கம்பெனியைச் சேர்ந்த ஐரோப்பிய வியாபாரிகள் தங்களுக்கென்று 1639ம் ஆண்டில் வாங்கினார்கள். இங்கிலாந்திலிருந்த தங்கள் எஜமானர்களுக்குத் தாங்கள் இருக்கும் இடம் பற்றி, தாங்கள் பழகும் மக்கள் பற்றி, தங்கள் திட்டங்கள் பற்றி நகல் எடுத்து வைத்துக் கொண்டு குண்டு குண்டான கையெழுத்தில் கடிதங்கள் எழுதினார்கள். பல உத்தரவுகளையும் உபதேசங்களையும் தாங்கிப் பதில் கடிதங்களும் வந்தன. இந்த முறையில்தான் முதன் முதலில் தஸ்தாவேஜுகள், கடிதங்கள் அமைப்பில் சேரத் தொடங்கின. ஆனால் இவற்றை யெல்லாம் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும் என்ற எண்ணம் அந்தக் கம்பெனிக்காரர்களுக்கு 1670ல், அதாவது இவ்வளைக்குச் சரியாக முந்நூறு ஆண்டுகளுக்கு முன்தான் தோன்றியது. அவ்வளவுதான். அதன் பிறகு அவர்கள் ஒரு துண்டுக் கடிதத்தைக்கூட அலட்சியப்படுத்தித் தூரப் போட்டுவிட வில்லை; பத்திரப்படுத்த ஆரம்பித்தார்கள்.

அவர்கள் வியாபாரம் பெருகியது. உள் நாட்டு உறவுகளும் சச்சரவுகளும் பெருகின. ஆர்ஜிதம் செய்து கொண்ட இடங்களின் விஸ்தீரணமும் பெருகியது. அந்த இடங்களை நிர்வாகம் செய்து கட்டிக் காக்கும் பொறுப்பும் பெருகியது. இவையெல்லாம் சேர்ந்து அவர்களுடைய தஸ்தாவேஜுகளையும் பெருக்கின. டைப்ரைட்டரும் அச்சு இயந்திரமும் அமுலுக்கு வராத காலமாகையால் எல்லாவற்றையும் அழகான கையெழுத்தில் எழுதி வைத்தார்கள்.


1670லிருந்து 1909 வரை இந்தத் தஸ்தாவேஜுகள் எல்லாம் செயின்ட் ஜார்ஜ் கோட்டைப் பகுதியிலேயே சந்தர்ப்பத்திற்கேற்ப அங்கேயும் இங்கேயும் இடம் மாறிக் கொண்டிருந்தன. 1909ல் இந்தத் தஸ்தாவேஜுகள் பாதுகாப்புக்கென்று எழும்பூர் ரயில் நிலையத்தின் எதிர்ப்புறம் தனிக் கட்டடம் எழுப்பப் பட்டது. 1867ம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் ஒன்றின் பிரகாரம், எந்த மொழியிலும் அச்சிடப்படும் புத்தகமானாலும் ஒரு பிரதி இந்த ‘ரிக்கார்ட்’ ஆபீஸுக்கு வர வேண்டும். அந்தப் புத்தகங்களுக்கும் இங்கே இடம் பண்ண வேண்டியிருந்தது.


தஸ்தாவேஜுகள் என்றதும், ஏதோ மக்கிப் போன கடிதக் குவியல் என்றுதான் பலர் நினைக்கிறார்கள். விஷயம் அறிந்தவர்களோ சரித்திர சாசனப் பொக்கிஷம் என்று போற்றுகிறார்கள்.

ஆந்திரப் பிரதேசத்தைச்சேர்ந்த டாக்டர் ரெட்டி என்பவர் ‘தற்கால மருந்துகள் தோன்றிய விதம்’ என்று ஆராய்ச்சி நூல் எழுத முற்பட்டார். அவருடைய ஆராய்ச்சிக்கு இந்தச் சென்னை ஆவணக் காப்பகம் வெகுவாக உதவியது. கடந்த முந்நூறு வருடங்களாக, மாவட்டக் கலெக்டர்கள், தங்கள் பிரதேசங்களில் பரவி வந்த நோய்களின் குறிப்புகள், சுகாதாரப் பரிசோதகர்களின் அறிக்கைகள், தலைமை மருத்துவ,



- ஆவணக்காப்பகத்திலுள்ள சில அபூர்வ தஸ்தாவேஜுகளை, அதன் டைரக்டர் திரு சிங்கராஜன், தமிழக கவர்னருக்குக் காண்பிக்கின்றார்.
- தஸ்தாவேஜுகள் வைக்கப்படும் இரும்பு ஷெல்புகள்.
- தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.





இயக்குனரின் உத்தரவுகள். இவற்றையெல்லாம் இங்கு அனுப்பியிருக்கிறார்கள்.... அவற்றைத் திரு ரெட்டி தீவிரமாக ஆராய்ந்து பல அபூர்வ விஷயங்களைச் சேகரித்தார்.

காவிரி நதி டெல்டாவை இன்னும் எப்படி எப்படி வளப் படுத்தலாம் என்று சென்ற நூற்றாண்டிலேயே திட்டம் போட்டு ஆராய்ச்சிகள் நடத்தியதற்கான எத்தனையோ குறிப்புகள் உள்ளன. ஏன்? திப்புசுல்தானுக்கு எத்தகைய பெண் மனைவியாக வரவேண்டும் என்று அவர் தாயார் விரும்பினாள் என்பதைக்கூட ஒரு தஸ்தாவேஜிலிருந்து அறிய முடிகிறது. இவை எல்லாம் ஒரே குவியலாக இல்லை. அத்தனையையும் தனித் தனிப் பிரிவுகளாக, சுலபமாகக் கண்டு பிடித்து எடுத்துப் படிக்கக் கூடிய விதத்தில் பகுத்து இரும்பு ஷெல்புகளில் அழகாக அடுக்கி யிருக்கிறார்கள். சில தஸ்தாவேஜுகளைத் தொகுத்துப் புத்தகங்களாக வெளியிட்டிருக்கிறார்கள். அன்றாட நடைமுறை விவகாரங்களில் சர்க்காருக்குச் சந்தேகம் ஏற்படக் கூடிய சில இனங்களில் முன்பு இப்பிரச்னை எப்படித் தீர்க்கப்பட்டிருக்கிறது என்று அறிய இப் புத்தகங்கள் உதவும்.

இத்தனை தஸ்தாவேஜுகளையும் பாதுகாப்பது என்பது சாதாரணமான விஷயமில்லை. இவை இருக்கும் பெரிய கூடங்களின் சுவர்களில் ஈரம் கசியக் கூடாது என்று சலவைக் கற்களையே அந்த நாட்களில் பதித்திருக்கிறார்கள். தரையெல்லாம் கடப்பைக் கற்கள். பாச்சை, கரையான்போன்ற பூச்சிகள் அண்டாமலிருக்க, பெரிய பெரிய செங்கற்கள் உருவில் அந்து 'ருண்டை' வாங்கி ஆங்காங்கே கணிசமாக வைத்திருக்கிறார்கள். இந்த அந்து 'ருண்டை' செங்கற்களுக்காக ஆண்டுதோறும் செலவாகும் தொகை சுமார் லட்ச ரூபாய்!

சிதிலமடைந்த தஸ்தாவேஜுகளைப் புதுப்பித்து ஒட்டிச் சரி செய்வதற்கென்றே ஒரு பகுதி இயங்குகிறது. அவர்களுக்கு ஓய்ச்சல் ஒழிவே இல்லாத வேலை!

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் டைரக்டர் திரு சிங்கராஜன் ஓர் உற்சாகமான மனிதர். ஆனால் அதே அளவுக்கு அவர் மனத்தில் கவலையும்நிறைந்திருக்கிறது. ஒரு சிறந்த ஆவணக் காப்பகத்தை நிர்வகிக்கும் பொறுப்பு கிடைத்திருக்கிறது என்பதில் உற்சாகம். ஆனால் இந்த ஆவணக் காப்பகத்தில் கிடைக்கும் ஏராளமான வசதிகளையும் தஸ்தாவேஜுகளையும் ஆராய்ச்சி மாணவர்கள் போதுமான அளவு பயன்படுத்திக்கொள்ளாமல் இருக்கிறார்களே என்பதில் கவலை. அவருக்குத் தெரியும், ஆராய்ச்சியின் அருமை. எம்.லிட் பட்டம் வாங்கியவரல்லவா!

இந்தத் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் வைர விழா சமீபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

— பட்டினத்தார்

ராமாயணம்

ராஜாஜி



பஞ்சவடியில் சந்நியாசி வேஷம் பூண்டு, சீதை வைத்த காய் கிழங்குகளுக்கு முன் உட்கார்ந்து ராவணன் தன் குலத்தையும் வீரத்தையும் பேசினான் அல்லவா? அதற்கு எதிரொலிபோல் இப்போது சிறையில் கிடந்த சீதை பேசினாள்:

''நான் யார் என்பதை அறிந்து கொள். தசரத ராஜர் மூவுலகங்களிலும் புகழ் பெற்ற அரசர். தருமத்துக்கு ஓர் அசையா அணையாகப் பல்லாண்டு அரசு புரிந்த மகாராஜர். சத்தியம் காத்தவர். அவருடைய குமாரர் ராமன் என் புருஷர். தேவனைப் போன்ற அந்த ராமன் என் நாதனாவார். சிம்மத்தின் பலம் பெற்ற வீரர். அவரும் அவர் தம்பி லக்ஷ்மணனும் உன்னுடைய உயிரை வாங்கக் காத்திருக்கிறார்கள். கரனும் அவன் சேனையும் ஜனஸ்தானததில் என் நாதனால் நிர்மூலமாக்கப்பட்டார்கள் என்பதை அறிவாய். கருடன் விஷப் பாம்பைத் தூக்கிக் கொண்டு போவது போல் அவ்வளவு சுலபமாக உன்னுடைய பெருஞ்சேனை ஜனஸ்தானத்தில் ராமனால் ஒரு முகூர்த்த நேரத்தில் அழிக்கப் பட்டது. அந்த ராமனைத் தேவாசுரர்களால் கொல்லப்படமாட்டாய் என்று வரம் பெற்ற நீ உன் விரோதியாக்கிக் கொண்டாயல்லவா? அவரால் நீ உன் மரணத்தை அடைவாய் என்பது நிச்சயம். தப்ப மாட்டாய். நீ பெற்ற வரம் உன்னைக் காக்க மாட்டாது. வேள்வியில் யூத ஸ்தம்பத்தில் கட்டிய ஆட்டைப்போல் நிற்கிறாய் என்பதை அறிந்து கொள். ராமனுடைய கோபப் பார்வை உன் மேல் படுவதுதான் தாமதம். கடலை உலரச் செய்தும் சந்திரனை ஆகாயத்திலிருந்து கீழே இறக்கியுமாவது என்னை என் நாதன் மீட்பார். நிச்சயம், நீ செய்த தீவினை உன்னையும் உன் லங்கையையும் அழித்துப் பாழாக்கப் போகிறது.

''என் வீர புருஷர் அரக்கர்களுக்கிடையில் தைரியமாகத் தண்டகா வனத்தில் தனியாக வசித்தார். எதிர்த்து வந்த அரக்கர்களை வீரரைப் போல் யுத்தம் செய்து கொன்றார். அவரில்லாத சமயம் பார்த்து நீ திருடனைப் போல் தூக்கி வந்தாய். இந்தத் தீச் செயலின் பயனை அனுபவிப்பாய். தப்ப மாட்டாய். நீயும் உன் குலமும் அழிந்து போகும் காலமானது அருகில் வந்து விட்டபடியால் விதி உன்னை இந்தப் பாபத்தில் தூண்டித் தள்ளிற்று. அழிந்து போகும் காலத்திலேதான் இத்தகைய துர்ப்புத்தி உண்டாகிறது.



"உன்னை விரும்பும்படி என்னைக் கேட்கிறாய். இது ஆகாத காரியம் என்பதை நீ அறியவில்லையா? அன்னப் பட்சி காக்கையிடம் அணுகுமா? வேள்வி செய்யும் வேதிகையண்டை ஒழுக்கம் தவறிச் சண்டாளனான ஒருவன் கிட்டப் போக முடியுமா? உயிரையாவது உடலையாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று எனக்குக் கொஞ்சமும் ஆசையில்லை. உலகத்தாரால் இகழப்பட்டு உயிர் வைத்துக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. நான் பயப்பட்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ள உன் வசமாவேன் என்று எண்ணாதே."

இவ்வாறு சொல்லி விட்டு மௌனம் அடைந்தாள்.

"அப்படியா?" என்றான் ராவணன். "சரி. பன்னிரண்டு மாதம் கெடுவு உனக்குத் தருகிறேன். நீ என்னை மணந்தால் நல்லது. இல்லையென்றால் அந்தத் தவணை முடிந்ததும் என் சமையற்காரர்கள் என்னுடைய காலை ஆகாரத்துக்கு உன் உடலைச் சமைப்பார்கள்." இவ்வாறு சீதையை எச்சரித்துவிட்டுக் காவற்கார ராக்ஷஸிகளுக்குத் தனியாக உத்தரவிட்டான்.

"இவளுடைய பிடிவாதத்தையும் கர்வத்தையும் நீங்கள் எப்படியாவது

அழிக்க வேண்டும். அசோக வனத்தில் தனியாக வைத்து, பயத்தாலும் நயத்தாலும் சாமர்த்தியமாக இவளைத் திருத்துங்கள். காட்டில் பிடித்த பெண் யானையை எப்படி வசப்படுத்துகிறோமோ அதுபோல் இவளைச் சீக்கிரம் நீங்கள் திருத்த வேண்டும்'' என்று உத்தரவிட்டுக் கடுஞ் சினத்தோடு சென்றான்.

சீதையை அழைத்துக் கொண்டு, ராக்ஷசிகள் அசோக வனம் சென்றார்கள். அது மிக ரம்மியமான அந்தப்புர உத்தியான வனம். பறவைகளும் புஷ்பங்களும் நிறைந்த தோட்டம். அங்கே சீதை கோரமான அரக்கிகளின் காவலில் சிறைப்பட்டுத் துயரக் கடலில் மூழ்கிக் கிடந்தாள். ராமனும் லக்ஷ்மணனும் எப்படியாவது விஷயம் தெரிந்து கொள்வார்கள், தன்னை மீட்பார்கள். அரக்கர்களின் மிரட்டல்களுக்குப் பயப்படாமல் உயிர் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். வீரனாகிய தன் நாதன் அரக்கனை அழித்துவிடுவான். மறுபடியும் ராமனுடன் சேர்ந்து வாழும் நாள் சீக்கிரத்தில் வரும் என்று நம்பி, ராக்ஷசிகளின் மிரட்டலுக்குப் பயப்படாமலும், எவ்வளவு நயமாகப் பேசினாலும் அதனால் மோசம் போகாமலும் இருந்து வந்தாள்.

சீதை பல மாதங்கள் இப்படி அநாதையாகத் துன்பப்பட்டாள்.

மகா வீரன் ஹனுமான் கடல் தாண்டி வந்து தேவியின் துயரத்தைப் பார்த்து, அந்தத் துன்பத் நிலையயே கொண்டு லங்காபுரியை எரித்துவிட்டு, ''ராமன் வருவான், பயப்படாதே!'' என்று சீதைக்குச் சொல்லும் நாள் பின்னால் வரும்.

நம் நாட்டில் துயரப்படும் பெண்கள் அனைவரும் சீதாதேவியின் அம்சம். ஆண்களாகப் பிறந்தவர்கள் அனைவரும் ஹனுமானைப் போன்று பெண்ணைக் காக்கும் சுத்த வீரர்கள் ஆவார்களாக.

இப்போது மறுபடியும் ராம லக்ஷ்மணர்களை விட்ட இடத்துக்குப் போவோம்.

52. துக்கசாகரம்

இஷ்டப்பட்ட வடிவம் எடுத்துக் கொள்ளும் சக்தியைப் பெற்றிருந்த மாரீசன், மானாக வந்து ஏமாற்றிச் சீதையின் ஆசையைக் கிளப்பி, அது காரணமாகத் தன்னை வெகு தூரம் இழுத்துக் கொண்டு போய், அங்கே தன்னுடைய அம்புக்கு இரையாகி உயிர் விடும் போது, தன் சுய உருவத்தை வெளிப்படுத்தி, 'ஹா சீதா! ஹா லக்ஷ்மணா!' என்று பொய்க் குரலில் பலமாகக் கத்தினதை நினைத்து ராமன் கவலை கொண்டான்.

''ஓகோ! இது பெரிய மோசம்: இந்த மோசத்தால் லக்ஷ்மணன் ஏமாற்றமடைந்து சீதையைத் தனியாகக் காட்டில் விட்டு விட்டு என்னைத் தேடிக் கொண்டு வந்திருந்தால் பெரிய அபாயமாகுமே! சீதையை அபகரித்துக் கொண்டு போகவோ, கொன்று தின்று விடவோ அரக்கர்கள் இந்த மோசத்தைச் செய்திருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. 'ஹா சீதா!' என்று என்னுடைய குரலைக் கேட்டதாக எண்ணி, உடனே சீதை பயந்து லக்ஷ்மணனை என்னிடம் அனுப்பி விடுவாள். நரிகள் அவலக்ஷணமாக ஊளையிடுகின்றன. பறவைகளும் மிருகங்களும் துரதிருஷ்டக் குறிகளைக் காட்டுகின்றன. உள்ளத்தில் தைரியத்துக்குப் பதில் நடுக்கமாக இருக்கிறது. நான் காண்பதெல்லாம் அபசகுனங்களாகவே இருக்கின்றன. பெரிய ஆபத்தை அடைவேன் என்றே நினைக்கிறேன்.''

இவ்வாறு தனக்குள் கவலைப்பட்டுக் கொண்டு ராமன் மிக வேகமாக ஆசிரமத்தை நோக்கிச் சென்றான். எதிரே லக்ஷ்மணன் வருவதைக் கண்டான். கண்டதும், ''ஐயோ! நான் நினைத்த வாறே ஆயிற்று'' என்று கத்தினான்.

''சீதையைக் காட்டில் தனியாக விட்டு விட்டு வந்து விட்டாயே, லக்ஷ்மணா! அவளை ராக்ஷசர்கள் கொன்று தின்று விடுவார்கள் என்பது நிச்சயம். தவறான காரியம் செய்து விட்டாயே! ஜானகி தப்ப மாட்டாள்!'' என்று ராமன் லக்ஷ்மணனுடைய கையைப் பிடித்துக் கொண்டு மிக வருத்தத்துடன் சொன்னான். (தொடரும்)







அக்கிரமத்தை அடக்க அரசு இல்லையா?

சேவலது கூவுமுன்னே கழனிசென்று
செயுமுறையால் ஏருழுது பண்படுத்தி
நடவுநட்டு நீர்பாய்ச்சிக் களையெடுத்து
நல்லபலன் எதிர்பார்த்துக் காத்திருந்தான்
நெல்மணிகள் முற்றித்தலை சாயும்போது
கல்நெஞ்சர் நக்சல்பாரி என்னுங்கூட்டம்
கதிரறுத்துச் சூறையாடிச் சென்றேவிட்டார்

இதன்பெயரா சமதர்மம்? சோஷலிசம்?
இதுவளரின் நாட்டினிலே என்னவாகும் ?

பாரதத்தின் புகழுக்குச் சிகரம்போலே
பண்பாட்டைக் காத்துநிற்கும் கிராமமக்கள்
வாழ்ந்துவரும் குடிசைகட்கு இரவிற்சென்று
வன்னெஞ்சர் நக்சல்பாரி தீயைவைத்தார்
வதைபட்டு ஏழைமக்கள் அழுதகாட்சி
வாய்திறந்து சொல்வதற்கு வார்த்தையில்லை

இதன் பெயரா சமதர்மம் ? சோஷலிசம் ?
இதுவளரின் நாட்டினிலே என்னவாகும் ?

நாட்டினிலே தலைமறைவாய் ஒளிந்திருந்து
ஈட்டி கம்பு கோடரிகள் கரத்திலேந்தி
நோட்டமிட்டு மக்களுயிர் குடித்துவிட்டு
நொடிப் பொழுதில் மறைந்துவிடும் நக்சல்பாரி
கூட்டமதை அடக்கும் அரசில்லைதானோ ?
வோட்டிட்ட மக்களின்று கேட்கின்றார்கள்

இதன் பெயரா சமதர்மம் ? சோஷலிசம் ?
இதுவளரின் நாட்டினிலே என்னவாகும் ?

பாரதத்து இளைஞரெலாம் உயர்வதற்கும்
பட்டங்கள் பெற்றுயர்ந்து வாழ்வதற்கும்
கல்லூரி பலப்பலவே கட்டி வைத்தார்
காலிகளும் கூலிகளும் உட்புகுந்து
கட்டடத்தை அழித்ததுடன் நின்றிடாமல்
உத்தமரும் காந்திபடம் எரித்தாரந்தோ !

இதன் பெயரா சமதர்மம் ? சோஷலிசம் ?
இதுவளரின் நாட்டினிலே என்னவாகும் ?

உழைப்புக்கு மதிப்பளிக்கக் கோரிப் பின்பு
உழைப்போரைத் தாக்குவது என்ன நியாயம் ?
சீனாவில் நடப்பதுவும் இதுவா, இல்லை
சின்ன புத்தியாளர் செயும் செயலே அன்றோ !
வெள்ளையனின் வெறிச் செயலை ஒழித்த நாம்தான்
சீவத்துவேட்டுக் கும்பலுக்குப் பணிவோம்அல்லோம்
பொறுத்திருந்து பார்த்திடுவோம்--அடங்காவிட்டால்
போர்க் கொடியை உயர்த்திடுவோம் பாரீர், வாரீர்!

ஆ. கிருஷ்ணன்



அவர் ஒரு வழக்கறிஞர். அவர் எழுதிய நாவல்கள் இருநூற்றுக்கு மேற்பட்டவை. அனைத்தும் மர்மக் கதைகள். அவற்றில், அமெரிக்காவில் மட்டும் விற்பனையான பிரதிகள் மொத்தம் பதினேழு கோடி. அவற்றின் மூலம் அவருக்குக் கிடைத்த வருமானம் ஆண்டு ஒன்றுக்கு இருபது லட்சம் ரூபாய்.

தமது நாவல்களில் கதாநாயகனாகப் பெரி மேஸன் என்ற பிரபல வழக்கறிஞரை சிருஷ்டித்து அவரையும் தம்மையும் உலகப் பிரசித்தப்படுத்திய கார்ட்னர், ஒரு சுரங்க வேலை என்ஜினியரின் மகன். 1889ம் ஆண்டு பிறந்த இவர் பள்ளி நாட்களின் போது குறைந்த சிரத்தை காட்டியது படிப்பில். அதிகமாகக் கற்றுக் கொண்டது குத்துச் சண்டை.

குத்துச் சண்டையை ஆதரிப்பது சட்டத்துக்குப் புறம்பானதாகக் கருதப்பட்டு வந்தது அக்காலத்தில். அதைத் தடை செய்ய வழக்குத் தொடுத்த சர்க்கார் தரப்பு வக்கீலுக்கு எதிராகச் சிறந்த முறையில் வாதங்கள் தயாரித்ததற்காக கார்ட்னருக்கு மாதம் நூற்றி ஐம்பது ரூபாய்



ரொம்பப் பிரபலமான ஒருவரைப்பற்றி அதிகமாகப் பிரபலமடையாத சில விவரங்கள் :

மர்மக்கதை மன்னன்

சம்பளத்தில் சட்டக் குமாஸ்தா வேலை அளிக்கப்பட்டது.


இருபத்தியோராவது வயதில் வழக்கறிஞர் சமுதாயத்தில் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கார்ட்னர் வக்கீலாக 'பிராக்டிஸ்' செய்யத் தொடங்கினார். 1921ம் ஆண்டிலிருந்து ஓய்வு நேரங்களில் மர்மக் கதைகள் எழுதி வரத் தொடங்கினார். **The case of the velvet claws** என்ற தலைப்பில் இவர் தமது முதல் புத்தகத்தை எழுதி முடிப்பதற்கு எடுத்துக் கொண்ட நேரம் மூன்றரை தினங்கள். தொடர்ந்து, கதை எழுதுவதில் உள்ள ஆர்வம் அதிகமாகவே 1938ம் ஆண்டிலிருந்து வக்கீல் தொழிலை விட்டு விட்டு மர்மக் கதைகள் எழுதுவதிலேயே தீவிரமாக ஈடுபட்டார் கார்ட்னர்.

ஆரம்பத்தில் கார்ட்னர் தமது கதைகளைத் தாமே ''டைப்'' செய்து வந்தார். தமது கற்பனையின் வேகத்துக்குத் தகுந்தபடி ஆவேசத்துடன் 'டைப்' செய்ததின் காரணமாக கார்ட்னரின் கைவிரல்கள் சிவந்து ரத்தம் கட்டிப் போனதுண்டு! ஆகவே, கார்ட்னர், ஜீன் பெதல் **(Jean Bethell)** என்ற பெண்ணைத் தமது காரியதரிசியாக நியமித்துக் கொண்டார். ரொம்பப் பிரபலமான பிறகு, அவர் எங்கு சென்றாலும் அவருடன் அவரது எட்டு காரியதரிசிகளும், அலுவலக நிர்வாகி மற்றும் பல குமாஸ்தாக்களும் உடன் செல்வதுண்டு.

கார்ட்னர் ஒவ்வொரு நாவலையும் எழுதும்போது ஒரு துப்பாக்கியை வாங்குவது வழக்கம். இதற்கு ஒரு காரணம் உண்டு. கதையில், கொலைக் குற்றம் சாட்டப்படும்போது சர்க்கார் வக்கீல் தமது குற்றச்சாட்டில் கொலையாளி உபயோகித்த துப்பாக்கியின் எண்ணைக் கூற வேண்டியிருக்கும். அந்த எண்ணுள்ள துப்பாக்கியின் அசல் சொந்தக்

(முன் பக்கம்) எர்ல் ஸ்டான்லி கார்ட்னர்.
(இந்தப் பக்கத்தில்)
காரியதரிசி டெல்லா ஸ்ட்ரீட்டுடன் பெரிமேஸன்.
நீதிமன்றத்தில் விசாரணை.
கொலை நடந்த இடத்தில் ஆராய்ச்சி.







ரிக்கர் ஒருவர் போர்ட்டருக்குத் தாம் படித்து முடித்துவிட்ட பெரி மேஸன் நாவலின் மலிவுப் பதிப்பைக் கொடுத்தார். பின்னர் போர்ட்டரின் வேலை முடிந்ததும் கூலியுடன் 'டிப்' சேர்த்துத் தந்தபோது போர்ட்டர் 'டிப்' வாங்க மறுத்தார். தமது கோட்டுப் பையிலிருந்த பெரி மேஸன் நாவலைத் தட்டிக் காட்டி அது கிடைத்ததிலேயே திருப்தி அடைந்து விட்டதாய்க் கூறி விட்டார்.

கார்ட்னர் தமது நாவல்களில் மட்டுமின்றி வாழ்க்கையிலும் — வக்கீல் தொழில் புரிந்து வழக்காடிய காலத்தில் — நாடககாரர் கார்ட்னர் மீது வழக்குத் தொடரக் கூடும். ஆகவே, கார்ட்னரின் அலுவலகத்தில் பல ரகத் துப்பாக்கிகள் பூட்டி வைக்கப்பட்டிருக்கும். பலவித துப்பாக்கிகளைக் கையாள்வதில் கார்ட்னர் திறமையுள்ளவர்.

கார்ட்னர் வில் வித்தையிலும் தேர்ச்சி பெற்றவர். இருபத்தைந்து அடி தூரத்திலிருந்து அம்பு எய்து பூக்களைக் காம்புடன் கிள்ளி எறிவதில் அவர் திறமை வாய்ந்தவர்.

வெளிநாடுகளில் மொழிபெயர்ப்புக்களாக வெளிவந்த இவரது புத்தகங்களைப் பற்றிய முழு விவரங்களை எவரும் கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை. தமிழ் உள்பட மொத்தம் இருபத்து மூன்று மொழிகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கலாம் என்று உத்தேசமாகக் கருதப்படுகிறது.

பெரி மேஸன் துப்பறியும் நாவலுக்கு உலகின் மூலைமுடுக்குகளிலெல்லாம் கிடைக்கும் வரவேற்புக்கு ஓர் உதாரணம் கூறலாம். செக்கோஸ்லோவாகியாவுக்குச் சென்ற அமெபாணியில் பல காரியங்களைச் செய்து எல்லாரையும் திகைக்க வைப்பார். ஒரு சமயம் கார்ட்னர் விசாரணை மன்றத்துக்குள் பல சீனக்காரர்களை அழைத்து வந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் கூட வரிசையாக நிறுத்தினார். சர்க்கார் தரப்பு சாட்சிகளிடம் குற்றச்சாட்டிலுள்ள பெயர்களையும், அந்தச் சீனக்காரர்களையும் இணைத்து இனம் காட்டச் சொன்னார். சீனர்கள் பலரும் ஒரே மாதிரி இருக்கவே சாட்சிகளால் துல்லியமாக அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. சூதாடியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட சீனக்காரர்கள் விடுதலை பெற்றனர். மற்றொரு சமயம் குறுக்கு விசாரணையின் போது சாட்சியாக வந்த ஒரு மனோதத்துவ நிபுணரையே திணற அடித்தார். சாட்சி கூற வந்த அவர் பின்வாங்கி வெளியேறினார். வேறொரு வழக்கில் தமக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு விட்டதாக வாதித்து, பதினெட்டு லட்சம் ரூபாய்களுக்கு நஷ்டஈடு

கோரியிருந்தாள் ஒரு பெண். இந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது எவரும் எதிர் பாராத வகையில் ஒரு செயற்கை பூகம்பத்தையே ஏற்படுத்தி நீதி மன்றத்தை அதிரச் செய்தார் கார்ட்னர். அந்த நில அதிர்ச்சியின் போது நஷ்டஈடு கோரி வழக்குத் தொடுத்த அந்தப் பெண் ஒருத்தி மட்டுமே மனம் தளராமல் உறுதியுடன் இருப்பதைக் கோர்ட்டார் கண்டனர். அவள் கட்சி தோற்றது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?

பெரி மேஸன் மர்ம நாவல்கள், புத்தகங்களாக வெளிவந்தது மட்டுமின்றி, டெலிவிஷனிலும் வாரந்தோறும் சனிக்கிழமையன்று கார்ட்னரின் மேற்பார்வையில் நடிக்கப்பட்டு வந்தன. இந்த நாடகங்களில் வழக்கறிஞர் பெரிமேஸனை நடித்த ரேமாண்ட் பர் என்ற நடிகரை வீதியில் பலர் சந்தித்துத் தமது தரப்பில் வழக்காடும்படி அழைப்பு விடுத்திருக்கின்றனர். மக்களுக்குப் பெரிமேஸனிடம் அத்தனை ஈடுபாடு; பெரிமேஸன் அத்தனை உயிர்த் துடிப்புள்ள ஒரு பாத்திரம்; ரேமாண்ட் பர் அவ்வளவு சிறந்த நடிகர்!

பொறாமை காரணமாகச் சிலர் பெரி மேஸன் கதைகள் முழுவதையும் கார்ட்னர் பெயரில் வேறு எவரோ எழுதி உதவுகிறார் என்று கூறி வந்தனர். இதை அறிந்த கார்ட்னரின் பிரசுரிப்பாளர்களான வில்லியம் மாரோ ஸ்தாபனத்தினர் இந்தக் கூற்றை நிரூபிப்பவருக்கு எழுபத்தைந்து லட்சம் ரூபாய் இனாமாகத் தர முன்வந்தனர். இத்தொகையை இது வரை யாரும் பெற முடியவில்லை.

ஏ. ஏ. ஃபேர் (A. A. Fair) கார்ல்டன் கென்டிரேக் (Carleton Kendrake) சார்ல்ஸ் ஜே. கென்னி (Charles J. Kenney) என்ற புனைபெயர்களிலும் கார்ட்னர் பல மர்ம நாவல்கள் எழுதியதுண்டு. பதின்மூன்று பிரயாணப் புத்தகங்களையும் கார்ட்னர் எழுதியிருக்கிறார்.

மர்மக் கதை மன்னன் கார்ட்னரின் மனைவி, ஒக்லந்து என்ற இடத்தில் தனியாகத்தான் இருந்து வந்தார். அவரை கார்டினர் மாதம் ஒரு முறைதான் சென்று பார்த்து வருவார். இது இருவருமே மனம் ஒப்பிச் செய்து கொண்ட ஓர் ஏற்பாடு.

எர்ல் ஸ்டான்லி கார்ட்னர் நாளொன்றுக்குப் பன்னிரண்டு மணி நேரம் உழைப்பது வழக்கம். விடுமுறை எடுத்துக் கொண்டது கிடையாது. வெளியூர்களுக்குச் செல்ல நேர்ந்தாலும் திரும்பி வரும் பொழுது மற்றொரு புதிய புத்தகத்தின் கருப் பொருள் அவர் மனத்தில் உதயமாகியிருக்கும். இவ்வாறு சலியாமல் உழைத்த காரணத்தால் கார்ட்னர் தூங்காமல் விழித்திருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் அவருக்கு ஒரு டாலர் பெறுமானமுள்ளதாக இருந்தது! இதை அவரே கணக்கிட்டிருக்கிறார்.

—ஜனார்த்தனன்



கல்லுக்குள் ஈரம்

புரட்சி வீரன் ரங்கமணி, அவனைத் தன் வழிக்குத் திருப்ப முயன்று தோற்றுவிட்ட செல்வச் செருக்குமிக்க கமலவாசினி, ரங்கமணி அறவே வெறுத்த காந்தி நெறியில் நின்று சாத்விகப் போரில் பங்கு கொண்டும் அவன் உள்ளம் கவர்ந்த கன்னி - தேச பக்த வீராங்கனை திரிவேணி ஆகிய பாத்திரங்களை வைத்துக் கொண்டு தமிழ் நாட்டின் விடுதலைப்போரின் பின்னணியில் வரலாற்றுச் சான்றுகள் நிறைந்த நாவலை உருவாக்கியிருக்கிறார் நூலாசிரியர்.

மகாத்மா காந்தி, கப்பலோட்டிய தமிழன், மகாகவி பாரதியார், வீர தேசபக்தர் சுப்பிரமணிய சிவா ஆகிய பாரதத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க தியாக புருஷர்களை இந்நாவலில் மிகவும் பொருத்தமாக உலாவ விட்டிருப்பது இந்நூலின் தனிச் சிறப்பு.

கொள்கையளவில் வெவ்வேறு துருவங்களில் இருக்கும் ரங்கமணியும், திரிவேணியும் அற்புதமான பாத்திரங்கள். முன்னது - புரட்சி, போர், சதி என்று முழக்கமிடுகிறது. பின்னது -- அன்பு அடக்கம், அஹிம்ஸை, அறிவு -- எல்லாவற்றுக்கும் மேலாகத் தேச பக்தி என்று உரிமைக் குரல் கொடுக்கிறது. இந்த இரு வேறு இயல்புகளை நாவலின் கருப்பொருள்களாகப் பிணைத்திருக்கின்றன.

இந்நாவலின் பாத்திரங்கள் யாவும் விசித்திரமானவை; சுவையானவை; ஆனால் ஒன்றுகூட அநாவசியமானதல்ல.

அண்ணல் காந்தியடிகளின் அறவழி செல்லும் ஆரணங்கு திரிவேணியின் தந்தை ஒரு தீவிரவாதி. பயங்கரப் புரட்சிக் கூட்டத்தின் தலைவர் சாதுசொக்கலிங்கம்; அவர் நண்பர் பழுத்த காந்தி பக்தர், சங்கரராம தீட்சிதர்; அன்புள்ளம் கொண்ட போலீஸ் அதிகாரி சிவானந்தம்; அதிகார ஆணவமும், பணத் திமிரும் படைத்த அவன் மனைவி கமலவாசினி; அசடானாலும் கதைக்கு இன்றியமையாத பாத்திரமாயிருக்கும் வெங்கு; தாய்க் குலத்தின் தனி விளக்கான திரிவேணியின் அத்தையம்மாள்; பாசத்தின் பிறப்பிடமான ரங்கமணியின் தாத்தா; வீரத்தின் விளைநிலமான உயிர்த் தியாகி சாமிநாதன்; ரங்கமணியின் தந்தை -- இப்படிப் பல்வேறு மனத் தியல்புகளைக் கொண்டு வளையவரும் இக்கதா பாத்திரங்கள் அனைத்தும் நாவலின் முடிவு வரையில் தத்தம் பொறுப்புக்களை நன்கு நிறைவேற்றியிருப்பது தான் இந்த நூலாசிரியரின் வெற்றி.

ரங்கமணியும் திரிவேணியும் மிகவும் நெருங்கிப் பழகியும் தங்கள் உள்ளத்தில் பொங்கி வரும் காதல் உணர்வை வெளியிட்டுக் கொள்ளாமலே இறுதி வரையில் இருந்தனர் என்பது இந்நாவலின் சுவைமிக்க உத்தி.

நாட்டுப் பற்றை வளர்க்கும் நல்லதொரு நாவலான இந்நூலில் கல்லுக்குள் ஈரம் கசிவதைக் காண முடிகிறது. எவ்வளவோ கடினத் தன்மை கொண்டிருந்த ரங்கமணியின் உள்ளமும் கடைசியில் அன்பின் ஈரம் படிந்ததுதான் என்பதை ஆசிரியர் வெகு அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

கல்கி வெள்ளி விழாப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற நாவல் இது. இப்பொழுது அழகிய நூலாக வெளிவந்திருக்கிறது.

ஆசிரியர்: ர. சு. நல்லபெருமாள்; பிரசுரம்: வானதி பதிப்பகம், சென்னை-17; விலை: ரூ. 12-00.

காணக் கிடைக்காத தங்கம்

அத்தியாயம் ஆறு

“என்னடா தம்பி! இங்கே உட்கார்ந்திருக்கிறே ?''

திடுக்கிட்டு எழுந்தான் அருணகிரி. உடைந்து நொறுங்கிய சட்டிப் பானை ஓடுகளை வாரிக் கொண்டு வந்து தெருவோரம் போட்டு விட்டுத் தன் அருகில் நின்ற அக்கா முத்தம்மாவைத் திகிலுடன் ஏறிட்டுப் பார்த்தான் அவன். ''கொஞ்சம் களைப்பா யிருந்தது, அக்கா! அதான் இப்படியே உட்கார்ந்துட்டேன்'' என்று சொல்லிச் சிரித்தான்.

ஆனால் வீட்டில் நடந்த ரகளையைக் கேட்டு விட்டே அவன் உள்ளே வரப் பயந்து தெரு வாசலில் உட்கார்ந்திருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட முத்தம்மாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. தம்பியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ஒரு குறை அழுது தீர்க்க வேண்டும் என்ற ஆதங்கமும் ஏற்பட்டது. ''வாப்பா ! வந்து சாப்பிடு !'' என்று கம்மிக் கரகரத்த குரலில் சொன்னாள் அவள்.

சற்றே தயங்கிய அருணகிரி, ''ஏங்கா, அத்தான் சத்தம் போடறாரு?'' என்று இரகசியக் குரலில் வினவினான்.

''என்னடா இது புதுசா கேட்கிறே? தினத்துக்கும் நடக்கிற கூத்துதான்னு உனக்குத் தெரியாதா ? கருவாட்டுக் குழம்பு வைக்கலேன்னு கத்துது, காமாட்டி!'' என்று உள்ளடங்கிய ஆத்திரத்துடன் சிடுசிடுத்த முத்தம்மா தன் தலையில் ஓங்கி அறைந்து கொண்டு விருட்டென்று உள்ளே சென்றாள்.

சட்டைப் பித்தானைத் திருகியவாறு தயங்கித் தயங்கி வீட்டினுள் சென்ற அருணகிரி குழாயடியில் கை, கால், முகம் கழுவிக் கொண்டு நுழைந்தான்.

ஜெகசிற்பியன்

அது 'ட' வடிவிலான கற்றுக்கட்டு வீடு. மச்சு ஓடு வேய்ந்தது. அவ்வீட்டில் மொத்தம் ஐந்து குடித்தனங்கள் இருந்தன. கடைசி போர்ஷன் முத்தம்மாவினுடையது. இரண்டு அறைகளும் ஒரு சிறு சமையற்கட்டுமே கொண்டது. மாதம் இருபது ரூபாய் வாடகை. அந்த வட்டாரத்தில் இது மிகவும் குறைந்த வாடகை தான். ஆனாலும் முத்தம்மாவுக்கு இதுவே மாதா மாதம் ஒரு பெரிய கண்டம் !

சற்றுமுன் ஏகமாய்க் கூச்ச லிட்டு அமர்க்களம் பண்ணிக் கொண்டிருந்த ரத்தினவேலு எங்கே? அவர் பழைய



காலத்து இரும்புக் கட்டில் ஒன்றில் கை ஒரு பக்கம், வேட்டி ஒரு பக்கம், சட்டை ஒரு பக்கம் கிடக்க, நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். காற்று இறங்கிப் போன டயரின் நிலை! தூக்கக் கலக்கத்தில் சிணுங்கிக்கொண்டிருந்த குழந்தைப் பிள்ளைகளும் மூலைக்கொன்றாய் உருண்டு விட்டன.

''உட்காருடா தம்பி, சாப்பிடுவே!'' என்றாள் முத்தம்மா.

ஓசையின்றித் தட்டத்தை எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்தான் அருணகிரி. முத்தம்மா அவனுக்கு உணவு பரிமாறினாள்.


உணவுத் தட்டில் பார்வையைச் செலுத்தாமல் அவள் முகத்தையே சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்தான் அருணகிரி. ''ஏங்க்கா! இன்னிக்கு மத்தியானம் என்னைப் பார்க்கிறதுக்குச் சைக்கிள் கடையண்டை வந்தாயாமே?'' என்று தணிந்த குரலில் கேட்டான்.

''ஆமா.'' — அவனுடைய முகத்தைப் பார்க்காமலே பதிலிறுத்தாள் முத்தம்மா.

''எதுக்கு?''

''சும்மாத்தான் வந்தேன்.''

மெல்லத் தலையாட்டிக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தான் அருணகிரி.





''பள்ளிக் கூடத்துக்குச் சாப்பாடு எடுத்துக்கிட்டு வந்தேன். ஓர் அஞ்சு நிமிஷம் லேட்டாயிடுச்சு. அதுக்கு அந்தப் புள்ளை ஒரேயடியா கோவிச்சுக்கிட்டுச் சாப்பாடு வேண்டாம்னு வீட்டுக்குக் கிளம்பிப் போயிடுச்சு.''

''எந்தப் பிள்ளை?''

''உனக்குத் தெரியாது. அந்த இஞ்சினியர் வீட்டுப் பெரிய பொண்ணு. அது எப்பவும் இப்படித்தான். அதிகாரம் பண்ணறதிலே கெட்டி. சின்னதுக்கெல்லாம் சுறுக்குனு கோவம் வந்துவிடும்!''

சாப்பாட்டு ருசியில் அருணகிரியின் கவனம் திரும்பியது.

''ஆனாலும் அது நல்ல புள்ளைதான்! அவ்வளவு கோபமாய் வீட்டுக்குப் போனது தன் அம்மாகிட்டே எதுவும் கோள் வைக்கலே! என்னமோ புத்தகம் எடுத்துக்கிட்டுப் போக வந்ததாச் சொல்லி, வீட்டிலேயே சாப்பிட்டுட்டுக் கிளம்பிடுச்சு !''

முத்தம்மா மெல்லச் சிரித்தாள். அருணகிரி வேறு ஏதோ சிந்தனையில் லயித்தவனாய்ப் பசி ஆவலுடன் கவளம் கவளமாகச் சோற்றை அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தான். பிறகு சட்டென்று தலைநிமிர்ந்து, ''நான் நினைச்சேன், எதுனாச்சும் வீட்டுச் செலவுக்கு என் முதலாளிகிட்ட காசு கீசு கேட்க வந்தியோன்னு!'' என்றவாறு தண்ணீரை எடுத்து மடக் மடக்கெனக் குடித்தான்.

''அதெல்லாம் இல்லேப்பா!'' என்று உள்ளடங்கிய பெருமூச்சுடன் சொன்னாள் முத்தம்மா. ''வேகாத வெய்யில்லே சாப்பாட்டுத் தூக்கை எடுத்துக்கிட்டு ஓடியாந்த என்னை அந்தப் பெண் அப்படி முகம் முறிச்சுப் பேசிட்டதைக் கேட்டு எனக்கு ரொம்பவும் மனம் கைச்சுப் போச்சு! என்ன பொழைப்பு இது. நாய் பொழைப்புன்னு நினைச்சு அந்த வேலையையே விட்டுப் போடவும் தீர்மானிச்சேன். யார் யார் மேலோ கோபம் குமுறிக்கிட்டு வந்திச்சு. அப்பாவையும் அம்மாவையும் நினைச்சுத் திட்டினேன், அழுதேன். அப்பா நினைப்பு வந்ததும் உன்னை — உன் முகத்தை — பார்க்கணும்போல ஆயிப் போச்சு; அதான் நேரே அங்கே வந்தேன்'' என்று கம்மிய குரலில் தலை குனிந்தபடியே முணுமுணுத்தாள்.

வெற்றுத் தட்டத்தில் கட்டு விரலால் கோலம் போட்டபடி மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் அருணகிரி.

முன்றானையால் மூக்கையும் கண்ணையும் துடைத்து விட்டுக் கொண்டு நிமிர்ந்தாள் முத்தம்மா. அருணகிரியின் முகத்தை ஒரு கணம் கூர்ந்து பார்த்து விட்டு, ''ஏன்டா, தம்பி! என்னமோபோல இருக்கிறே? அழறியா? அந்த ஆளு அடிச்சுட்டானா?'' என்று கனிவும் கவலையும் கலந்த குரலில் கேட்டாள்.

''இல்லேக்கா! அதெல்லாம் இல்லை'' என்று ஒரு போலியான புன்முறுவலுடன் சொல்லிக்

ஆசை பலிக்குமா?



இந்த ஸ்கூட்டர் ஆசாமிக்கு ஸ்கூட்டரில் ஏறியே ஆற்றைக் கடக்க வேண்டும் என்ற ஆசை. அவரது ஆசை நிறைவேறுமா?

(34ம் பக்கம் பார்க்க)

கொண்டே எழுந்தான் அருணகிரி. எதையோ திடுமென நினைத்துக் கொண்டவன் போல் திரும்பி, ''ஏங்கா! என்னோட பள்ளிக்கூடப் புத்தகமெல்லாம் எங்கே இருக்குது? பெட்டியிலா, இல்லே, பரணைமேல் கட்டிப் போட்டுட்டியா?'' என்று வெகு அக்கறையாக விசாரித்தான்.

ஒருகணம் யோசித்த முத்தம்மா, ''உன் பெட்டியிலேதான் இருக்கும்; அதையெல்லாம் யார் எடுக்கப் போறாங்க?'' என்றவள் மீண்டும், ''எதுக்குடா கேட்கிறே ?'' என்றாள் உள்ளூறக் கலவரமடைந்த குரலில்.

''ஒண்ணுமில்லேக்கா! சும்மாதான் கேட்டேன்'' என்று அலட்சியமாகச் சொல்லிக் கொண்டே கை கழுவக் குழாயடிக்குப் போய் விட்டான் அருணகிரி.

விடியற்காலை நான்கு மணிக்கே எழுந்து பிள்ளைகளுக்கும் கணவனுக்கும் சமைத்து வைத்து விட்டு ஆறு மணிக்கெல்லாம் தான் வேலை செய்யும் வீட்டுக்குப் புறப்பட்டு விடுவது முத்தம்மாவின் வழக்கம்.

அன்றும் அப்படித்தான் எழுந்தாள். அவளுக்கு ஒரே ஆச்சரியம் !

அருணகிரி ஒரு பழைய அலமாரியின் மறைவில் உட்கார்ந்து அரிக்கேன் விளக்கொளியில் படித்துக் கொண்டிருந்தான். அது பத்திரிகையோ, கதைப் புத்தகமோ அல்ல; பதினோராம் வகுப்புப் பாட புத்தகம்! இரவு முழுக்கப் படித்துக் கொண்டிருந்தானா? அல்லது இப்போதுதான் எழுந்து படிக்கிறானா? சோர்ந்து சிவந்திருந்த அவன் கண்களைப் பார்த்தால் இரவெல்லாம் படித்துக் கொண்டிருந்தான் என்றே தோன்றியது.

''என்னடா தம்பி! இந்த நேரத்திலே எழுந்து படிக்கிறே?'' என்று கேட்டாள் முத்தம்மா.

''எஸ். எஸ். எல். சி.க்குப் படிக்கிறேங்கா! போன வருஷம் ஃபெயிலாகிப் போன பாடங்களைப் படிச்சு இந்த வருஷம் செப்டம்பர்லே பரீட்சை எழுதப் போறேன்.''

வியப்புடன் அவனை உற்றுப் பார்த்த முத்தம்மா அவன் சொன்னதை உடனே புரிந்து கொள்ள முடியவில்லை. அதை விவரமாகக் கேட்டறியவும் இப்போது அவளுக்கு நேரமில்லை. ஆனால் பிள்ளையாண்டான் நேற்றிலிருந்து ஏதோ ஒரு தினுசாக மாறியிருக்கிறான் என்பதையும், என்னமோ ஒரு தீர்மானத்துக்கு அவன் வந்திருக்கிறான் என்பதையும் மட்டும் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. இனம் புரியாத கலவரத்துடன் அவள் வேலைக்குப் புறப்பட்டுச் சென்றாள்.

அருணகிரியும் அத்துடன் புத்தகங்களை மூடி வைத்து விட்டுக் கொஞ்ச நேரம் படுத்து எழுந்து, குளித்துக் காலை உணவை முடித்துக் கொண்டு வழக்கம் போல் எட்டு மணிக்கெல்லாம் சைக்கிள் கடைக்கு வந்து சேர்ந்தான்.

''டேய், சோங்கு! ஓடிப் போய் ஒரு பைன்ட் கசப்புத் தண்ணி வாங்கிட்டு வாடா! காலங் கார்த்தாலே உடம்பு என்னமோ கிரிகிரி பண்ணுது!'' என்றவாறு பாட்டிலைக் கொடுத்து விரட்டினான் ஏழுமலை.

வேலைக்கு வந்த உடனேயே தான் செய்யப் போகும் முதல் வேலையை எண்ணி உள்ளூறச் சிரித்துக் கொண்டவனாய், பாட்டிலை எடுத்துக் கொண்டு பீர் கடையை நோக்கி விரைந்தான் அருணகிரி.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் 'கதி' கூடிப் போன நிலையிலே சுவரோரம் உட்கார்ந்து சாய்ந்து, குத்த வைத்த இடது முட்டிக்கால் மேல் வலது முழங்காலை மடித்துப் போட்டு ஆட்டியவாறு அரைக் கண் மூடியபடி 'ஆனந்த சாகரத்தில்' ஆழ்ந்து போனான் ஏழுமலை.

கடைக்குள் இருந்த சைக்கிள்களை வெளியே கொண்டு வந்து வரிசையாக நிறுத்திவிட்டு, பிறகு சைக்கிள் வண்டியின் தனித்தனி பாகங்களான ரிம்கள், டயர்கள், டியூப்கள், பெடல் வீல்கள், பியர் கேசுகள், சீட்டுகள் முதலியவற்றை ஆங்காங்கே 'ஷோ'படுத்தி மாட்டித் தொங்கவிட்டு

விட்டு, நேற்று அரைகுறையாகப் பழுது பார்த்து வைத்திருந்த ஒரு சைக்கிளைத் தூக்கி வந்து தெருவோரம் மங்கி — டாப்பின் நிழலில் வைத்துக் கொண்டு தன் வேலையைத் தொடங்கினான் அருணகிரி.

'கிணிங், கிணிங்' என்ற மணி ஒலி, அதைத் தொடர்ந்து ஒரு லேடீஸ் சைக்கிள் அவன் அருகில் வந்து நின்றது. திரும்பிப் பார்த்தான்.

''இந்தாங்க, மிஸ்டர்! இந்த பேக் வீல்லே காற்று இறங்கிப் போச்சு; சீக்கிரமா அடிச்சுக் கொடுங்க! ஸ்கூலுக்கு நேரமாயிடுச்சு; சீக்கிரம்!'' — என்று செருக்கும் மிடுக்குமான ஜலதரங்கக் குரலில் கூறிக் கொண்டே சைக்கிளை விட்டு இறங்கினாள் அந்தச் சல்வார் — கம்மீஸ் சிங்காரி. ஆனால் இன்று அவள் பட்டுப் பாவாடையும், ஹகோபா தாவணியுமாகக் காட்சியளித்தாள்.

பரபரப்புடன் நிமிர்ந்து பார்த்த அருணகிரி, 'ஓ, நீயா?' என்பது போல் புன்முறுவல் பூத்தான். அவளும் அவனை ஒரு மின்வெட்டுப் பார்வையால் பார்த்து விட்டு முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

இடுப்பு மூட்டில் இறங்கியிருந்த தன் கால்சராயை மேலே இழுத்து விட்டுக் கொண்டு, ஒரு டாக்டர் நோயாளியின் நாடியைப் பிடித்துப் பரிசோதிப்பது போல் அந்தச் சைக்கிளின் பின் சக்கர டயரைப் பெருவிரலால் அழுத்திப் பார்த்தான் அருணகிரி. அப்படி ஒன்றும் ஒரேயடியாக அதில் காற்று இறங்கி விட்டிருக்கவில்லை. கொஞ்சம் தளர்ச்சி; அவ்வளவே.

''நேத்துகூட இந்த வீலுக்குத்தான் காத்து அடிச்சதாக ஞாபகம்; அதுக்குள்ளாற இறங்கிப் போச்சே! டியூப் வீக்காயிடுச்சோ என்னமோ! இல்லேன்னு வால்வ் — ஸ்குரு லூசாகிக் காத்து லீக்காகும்!'' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டான். நாய்க் குட்டியை வாலைப் பிடித்துத் தூக்குவது மாதிரி இடது கையால் சைக்கிளின் பின் பக்கத்தைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, வலது கையால் சக்கரத்தை வேகமாக ஒரு சுழற்றுச் சுழற்றி டக்கென்று கீழே விட்டான். தெருப் புழுதி கிளம்பக் 'கிளுக்' கென்ற ஒலியுடன் நின்றது சக்கரம்.

''சரி; இப்ப அதை யெல்லாம் டெஸ்ட் பண்ணிப் பார்க்க நேரமில்லே! நீங்க ஸ்கூலுக்குப் போகணும் இல்லையா?'' என்றவாறு சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி விட்டுப் போய் 'பம்ப்'பை எடுத்துக் கொண்டு வந்தான்.

ஏதோ ஒரு விந்தையான, விசித்திரமான, ரசிக்கத் தக்க அபூர்வப் பொருளைப் பார்ப்பது போல் அவனையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள் அந்தப் பெண். இடது கையை இடுப்பின் மேல் ஊன்றிக் கொண்டு வலது கையால் தன் முகத்துக்கு நேரே கைக் குட்டையால் சுழற்றியபடி ஒயிலும் ஒய்யாரமுமாக நின்ற அவளைப் பார்க்க வெகு அழகாயிருந்தது.

வழக்கம் போல் ஒற்றைக் காலில் நின்று தோப்புக்கரணம் போடுவது போல் எம்பிக் குதித்துக் காற்றடிக்கலானான் அருணகிரி.

'ப்சிக்! ப்சிக்! ப்சிக்!'

சைக்கிள் சக்கரத்தின் டயர் கும்கும்மென்று வீங்கிப் புடைத்தது. அருணகிரியின் கால்சராய் வயிற்றை விட்டு இறங்கி இடுப்பு மூட்டில் தொங்கலாடியது. அந்நிலையில் அவனைப் பார்க்க ரொம்பவும் வேடிக்கையாயிருந்தது.

'களுக்!'

இந்தச் சிரிப்பொலி கேட்டு, காற்றடிப்பதை நிறுத்தி விட்டுச் சட்டென்று திரும்பிப் பார்த்தான். அந்தக் குறும்புக்காரப் பெண்தான் அப்படிச் சிரிப்பை அடக்க மாட்டாமல் கைக்குட்டையால் வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.

''என்ன சிரிக்கிறீங்க'' என்று அசட்டுச் சிரிப்புடன் கேட்டான் அருணகிரி.



மேற்கு ஜெர்மனிக்குப் போனால் 32-ம் பக்கத்துக் காரரின் ஆசை நிறைவேறலாம்.
மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பிரான்ஸ் கார்ட்ஸ் என்பவர் நீரில் செல்லும் ஸ்கூட்டர் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். ஆனால், இந்த ஸ்கூட்டர் தரையில் ஓடாது!
— யூ. பி. எஸ்.

அவள் உடனே தன் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு பதிலேதும் சொல்லாமல் வேறெங்கோ பார்க்கலானாள்.

காற்று அடித்தாகி விட்டது. அவன் பம்ப்பைக் கடையில் வைத்து விட்டுத் திரும்பி வருவதற்குள், அந்தப் பெண் ஒரு நாலணாவைப் போட்டு விட்டுத் தன் வண்டியை எடுத்துக் கொண்டு சிட்டாய்ப் பறந்து விட்டாள்.

வியப்பும் திகைப்புமாக அவளையே சில விநாடி நேரம் பார்த்துக் கொண்டிருந்த அருணகிரி தனக்குள் சிரித்தவாறு தன் வேலையில் கவனமானான்.

இரண்டு மணிவாக்கில் முடியும் என்று எதிர்பார்த்த அந்தச் சைக்கிள் ரிப்பேர் வேலையை அவன் பதினொன்றரை மணிக்கெல்லாம் முடித்து விட்டதைக் கண்ட ஏழுமலைக்கு உள்ளூற ஆச்சரியம்! 'பையன், என்ன, இன்னைக்கு ரொம்பச் சுறுசுறுப்பாயிருக்கிறான்! என்னைப் போல் காலங் கார்த்தாலே சுதிகிதி ஏத்திக்கிட்டு வந்திட்டானோ?' என்றும் எண்ணினான். அவனுக்கு இப்போதுதான் காலையில் ஏற்றிக் கொண்ட 'சுதி' இறங்கியிருந்தது.

"டேய் சோங்கு! இங்கே வாடா!"

"என்னப்பா?" என்றவாறு நூல் கருணையால் கைகளைத் துடைத்துக் கொண்டு வந்தான் அருணகிரி.

அவனை ஒரு கணம் ஏற இறங்கப் பார்த்த ஏழுமலை, "பிளாக் பன்னி கிருஷ்ணப்பா ஸ்டோர்லே நாலு டயருக்கு நேத்து சொல்லிட்டு வந்திருக்கிறேன்; போய் வாங்கிக்கிட்டு வாடா!" என்று உத்தரவிட்டான்.

"ஆகட்டும்பா!" என்று தலையாட்டிய அருணகிரி சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு, அப்போதுதான் 'ஹயரு'க்குப் போய் வந்த ஒரு சைக்கிளில் ஏறிக் கிளம்பினான்.

"தயவு பண்ணி இதைத் தூக்கி விடறீங்களா?"


அந்த மேட்டுச் சாலையில் முதுகை வளைத்து மூச்சைப் பிடித்துச் சைக்கிளை மிதித்தபடி ஏறிப் போய்க்கொண்டிருந்த அருணகிரி, இந்தக் குரல் கேட்டுச் சட்டென்று பிரேக் போட்டவாறு நிமிர்ந்து பக்கவாட்டில் பார்வையைச் செலுத்தினான்.

என்ன ஆச்சரியம்! நேற்று இதே இடத்தில், இதே நேரத்தில் சந்தித்த அதே சோற்றுக் கூடைக்காரப் பெண்தான் அவனை அவ்வாறு கூப்பிட்டாள். அவளுடைய சோற்றுக் கூடை பார்சி கோயில் மதில் சுவரின் மேல் இறக்கி வைக்கப்பட்டிருந்தது. அதன் அருகில் பீதி கலந்த வெட்கத்துடன் ஒடுங்கி நின்று கொண்டிருந்தாள் அவள்.

பிரேக் பிடியைத் தளர்த்தி விட்டுக் கீழே இறங்குவதற்குள் சைக்கிள் பின்புறமாகச் சரிந்து போகவே சட்டென்று இடது காலைத் தரையில் ஊன்றிச் சமாளித்துக் கொண்டு இறங்கிய அருணகிரி, சாலையின் வலதுபுறத்தை நோக்கிச் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு நடந்தான். அவனுடைய பார்வை அப்பெண்ணின் முகத்தையே மொய்த்தபடி இருந்தது.

நேற்றைவிட இன்று அவள் சற்று நன்றாக உடை உடுத்தியிருந்தாள். தலை வாரிப் பூவும் வைத்திருந்தாள். எனினும் அவளது முகத்தில் நேற்றைப் போலவே இன்றும் ஒருவித மிரட்சி கலந்த சோகக் கறை இலேசாகப் பூசியே காணப்பட்டது. இது இயற்கையாகவே அவளிடம் குடிகொண்டுவிட்ட தோற்றமாயிருக்கலாம்.

"என்னையா கூப்பிட்டே?" என்று அசடு வழியச் சிரித்துக் கேட்டுக் கொண்டே தன் சைக்கிளை ஸ்டாண்டு போட்டு நிறுத்தி விட்டு அவளருகில் சென்றான் அருணகிரி. (தொடரும்)



ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

29

ஆண்டவனுக்கு பூஜை செலுத்த எந்த நேரம் எந்தக் காலம் என்று திட்டம் வேண்டியதில்லை. அப்படித் திட்டம் போட முடியாது. அவரவருடைய உள்ளத்தின் இயல்பைப் பொறுத்தது. தினசரித் திட்டத்தில் பிரார்த்தனை நேரம் மிக முக்கியமான பகுதி. உள்ளத்தில் உள்ள அழுக்கு நீங்குவதற்கு வேண்டிய காரியக் கிரமமாகும். அடக்கம் தரும் சாதனமாகும். ஆண்டவனுடைய சித்தமின்றி ஏதும் நடைபெறாது என்று உணர்வதற்குப் பயன்படும் அப்பியாசமாகும். நாம் எல்லாம் அந்தக் குயவன் கையில் களிமண் என்பதை உணர்வதற்குப் பிரார்த்தனையே வழி. பிரார்த்தனை செய்யும்போது நாம் செய்துவிட்ட குற்றங்களைக் காண்கிறோம். நம்முடைய குறைகளைக் கண்டு கொள்ளுகிறோம். தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம். குற்றங்களும் குறைகளும் தீர்ந்து நல் வழியில் நடக்கச் சக்தி அடைய வேண்டிக் கொள்கிறோம்.


சிலருக்கு ஒரு நிமிஷமே போதும். சிலருக்கு இருபத்து நாலு மணி நேரமும் போதாது. சிலர் மனத்தில் எப்போதுமே ஆண்டவன் நினைவு வருகிறது. அத்தகையோருக்கு உடல் உழைப்பே பிரார்த்தனையும் ஆகிவிடும். அவர்கள் வாழ்க்கை முழுவதுமே இடையறாத ஒரு ஜபம். வேறு சிலர் வாழ்க்கை யெல்லாம் சிற்றின்பத்தில் கழிப்பார்கள். பாவங்கள் செய்வார்கள். சுய நன்மைக்கே பாடுபடுவார்கள். அவர்கள் ஆண்டவனைத் தியானித்துப் பிரார்த்தனை செலுத்த வேண்டுமானால் நீண்ட நேரம் வேண்டும். பொறுமையோடும் பக்தியோடும் ஆண்டவனைத் தங்கள் உள்ளத்துக்குள் காணும் வரையில், இறைஞ்சி இறைஞ்சி மாசு நீங்குவதற்கு வேண்டிக் கொள்ள வேண்டும். இரண்டும் இல்லாத நம்மைப் போன்ற சாதாரண மக்கள் இவ்விரண்டுக்கும் இடையில் நிற்போம். வாழ்க்கையே பூஜையாகும் என்று நம்பி யிருப்பதற்கும் இல்லை. கதியற்ற மகா பாபிகளும் ஆகமாட்டோம். ஆனபடியால் எல்லா மார்க்கங்களிலும் பிரார்த்தனைக்கு என்று சில நேரங்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய துரதிருஷ்ட வசத்தினால் திட்டப்படி செலுத்தும் பிரார்த்தனைகள் வெறும் சடங்காகவும், வேஷமாகவும் போய் விட்டன. உள்ளத்தைச் செலுத்தாத பிரார்த்தனையில் பயனில்லை.

"எனக்கு ஒன்று தா" என்று குறிப்பிட்டு ஆண்டவனைக் கேட்க வேண்டுமானால், அது தாய் தகப்பனோடு பேசும் பாஷையிலேதான் இருக்கவேண்டும். இதைப் பற்றிச் சந்தேகமில்லை. 'தருமம் ஓங்க வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அறம் பிறழாமல் நான் நடந்து கொள்ள வேண்டும்' என்று ஒருவன் பிரார்த்தனை செய்தால், அதுவே மிகச் சிறந்த பிரார்த்தனையாகும்.

(யங் இந்தியா 10-6-26)

'ஆஸ்ப்ரோ'

மட்டுமே மைக்ரோஃபைண்ட் செய்யப்படுகிறது அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக



கீழ்க் கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்:
நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளு • ஜுர வேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி.

புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலி நிவாரணியாகும்.



புதிய மைக்ரோஃபைண்ட்
'ஆஸ்ப்ரோ' அதிவேகமாக
வலியை வெளியே இழுத்துவிடுகிறது.

நிகோலஸ் (N) தயாரிப்பு

AG.37.TAM



அத்தியாயம் 18

ரமாவின் கடிதத்தை இரைந்து படித்து வந்தான் ஆனந்த். படித்து முடித்ததுமே கடிதத்தை உறையுள் போட்டு விட்டுக் கண்களை மூடியபடி அமர்ந்து யோசிக்கலானன். சீதாபதியும் பேசவில்லை. ரமாவின் உருவம் தான் இருவர் கண்கள் முன்னும் தோன்றி நின்றது. தன் காதலனின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தன் வாழ்க்கைப் பாதையையே மாற்றிக் கொண்டவள் ரமா. இன்னமும் அந்தக் காதலனின் நல் வாழ்வுக்காக ஆனந்திடம் யாசிக்கிறள். எவ்வளவு தாழ்மையான யாசகம்!

இத்தனைக்கும் நடுவில் ஆனந்துக்கு வேறு ஒரு சந்தேகம்: 'வாசு உண்மையாகவே ரமாவை மறந்து காந்தியை மணக்கச் சம்மதிப்பானு?'

''காந்தி வாசுவை விரும்புவதாகத் தெரிகிறது. ரமா எவ்வளவு கனிவுடன் எழுதியிருக்கிறள், பார்! ரமாவின் விருப்பமும், காந்தியின் காதலும் நிறைவேற வேண்டுமென்ருல், வாசுவின் விவாகம் நடந்தே தீர வேண்டும்!'' என்றார் சீதாபதி.

அவர் கூறி முடிப்பதற்கும் வாசு வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

''வாசு! நீ காந்தியை மணக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன் !'' எவ்வித உபசார வார்த்தையும் இன்றி ஆனந்த் நேரிடைக் கேள்வியில் இறங்கினன்.

''ஆமாம். அம்மா சொன்னுல் கேட்க வேண்டியதுதானே?'' என்ருன் வாசு.

ஆனந்துக்கு மனத்தில் நிம்மதி பிறப்பது போல் இருந்தது. 'அம்மா சொல்வதற்காகவல்லவோ இவன் தலையாட்டியிருக்கிறன்! நாம் தப்புக் கணக்குப் போட்டு விட்டோமே?'

''அப்படியானுல் அம்மாவுக்காகத் தான்....நீ...''

அவன் முடிக்கு முன் சீதாபதி இடையில் குறுக்கிட்டார். ''அம்மா சொல்வதைக் கேட்பதில் என்ன தவறு? வாழ்க்கை நல்ல முறையில் அமைய வேண்டுமென்பதைத்தானே தாயார் விரும்புவாள்?'' என்ருர்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வாசு புறப்பட்டான். ஆனந்தும் அவனேடு புறப்பட்டான்.

''வாம்மா, வாம்மா, கல்யாணப் பெண்ணே!'' சீதாபதி குதூகலத்துடன் காந்தியை வரவேற்ருர். ''வாசுவின் நினைவிலேயே இருந்திருக்கிருய். அதனுல் இந்தக் கிழவனை மறந்து விட்டாய்!'' என்று குற்றம் சாட்டாமல் சாட்டினுர்.

''அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை!''

''இந்த விவாகத்தில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. விரும்பிய மணுளனையே மணப்பது என்பது எவ்வளவு இனிமையான நிகழ்ச்சி, தெரியுமா?''

காந்தி தழுதழுக்கக் கூறினுள்: ''இந்த நிகழ்ச்சி என்னை வந்தடையும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. ரமாவுக்கு வழி விட்டு விலகித்தான் இருந்தேன். வாசுவும் ரமாவையே விரும்புவது புரிந்தது. இருவரையும் பிணைத்து அதிலேயே நிம்மதி கண்டு விட முனைந்தேன். ஆனுல்...''

''......அதே ரமா, அதே வாசுவுடன் உனக்கு விவாகத்தை ஏற்பாடு செய்யும்படி நேர்ந்து விட்டது. இல்லையா? விவாகம் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்பது எவ்வளவு உண்மை! இப்போது தான் அவ்வுண்மை புலனுகிறது!''

சீதாபதியின் இந்தச் சொற்களை அசை போட்டுக் கொண்டே காந்தி வீடு திரும்பினுள்.

விவாக ஏற்பாடுகள் மும்முரமாக நடக்க ஆரம்பித்து விட்டன. விவாக ஏற்பாடுகளைக் கவனிக்க ரமா இரண்டொரு முறை வந்தாள். அப்புறம் நிறுத்திக் கொண்டு விட்டாள்.



காந்திக்கு இது மனத்தை உறுத்தியது. 'ரமா ஏன் அடிக்கடி வரவில்லை? ரமாவாகத்தானே அவள் காதலை அறிந்து விவாகத்தை முடிப்பதாகக் கூறி ஏற்பாடும் செய்தவள்? அப்படி இருக்கும்போது அவள் ஏன் இந்த விவாகத்தில் தன் பங்கை நிறைவேற்ற முன்வரவில்லை? ஒருகால்...?

'அப்படித்தான் இருக்கும். விவாகத்தை முடிப்பதாகக் கூறினவள் அது முடிவடையும் தருணம் நெருங்கும் போது தவிப்பில் இருக்கிறாள்! வாசு இந்த ஏற்பாட்டை ஏற்க மாட்டார் என்ற நினைவில் முதலில் இருந்திருக்கலாம். அதனால் விவாகம் நிச்சயிப்பதாகப் போக்குக் காட்டிக் கடைசியில் வாசுவின் மீதே பழி போட்டு விடலாம் என்ற நினைப்பில் இருந்திருக்கலாம். இப்போது வாசுவே சம்மதித்துவிட்டதும் அவள் மனம் தவிப்பில் இறங்கி இருக்கும்...

'ரமாவின் மனம் இப்படியும் இருக்குமா? அவளேதானே ரூபகுமாரை மணந்தாள்? ...அவளாகவா மணந்தாள்? இல்லை; கட்டாயப்படுத்தப்பட்டாள்! ஆம்... அந்த நிர்ப்பந்த விவாகம் காரணமாக அவள் பொறுமையில் தவழும் சந்தர்ப்பம் இருக்கிறது. தனக்குக் கிட்டாத ஓர் இன்பம் தன் சகோதரிக்குக் கிடைக்கிறது. தான் அனுபவிக்க முடியாததைச் சகோதரி அனுபவிக்கிறாள்! இப்படியெல்லாம் அவள் மனத் தவிப்பில் இருக்க வேண்டும். அதனால் தான் இங்கு வருவதைத் தவிர்க்கிறாள்...

'ரமாவைப் பற்றி இப்படி யெல்லாம் நினைக்கலாமா? பாவம்! அவள் துயரம் அனுபவிப்பவள். இப்போது தாய்மை வேறு. ஒருகால் உடல்நலமில்லையோ? உடல் நலமில்லாவிடில் இதைச் சாக்கிட்டாவது ரூபகுமாரை விட்டு விட்டு இங்கு சில நாட்கள் வந்து இருக்கலாமே! தாயாக இருந்து விவாகத்தை முடிப்பதாகக் கூறியவளாயிற்றே!'

மனம் பொறுக்காமல் காந்தி தன் தந்தையிடமே கேட்டு விட்டாள். ''அப்பா! ரமா அடிக்கடி இங்கு வருவதே யில்லையே!''

''வரவில்லையேம்மா! எனக்கும்தான் காரணம் புரியவில்லை.''

''அவள் முன்னின்று இந்த விவாகத்தை நடத்த வேண்டாமா?''

''எனக்கும் புரிகிறது. ரூபகுமாரே நமக்கு உதவுவான் என நினைத்தேன். அவனோ காரியாலயத்திலும் கலகலப்பாக இல்லையாம். ஆனந்தின் உதவியில்லாவிடில் நாம் திணறி விடுவோம்!''

கடைசியில் காந்தி ரமாவுக்கே போன் செய்து விட்டாள். ''என்ன ரமா, நீதான் முன்னின்று விவாக ஏற்பாடுகளைச் செய்யப் போவதாகக் கூறினவளோ?''

முதலில் ரமாவிடமிருந்து பதிலே வரவில்லை.

''ஏ, ரமா! நான் கேட்பது காதில் விழுகிறதா? கல்யாணத்தன்று சம்பந்தியாகத்தான் வந்து இறங்கப் போகிறாயோ?''

''உனக்குத் தெரியாமலேயே நான் விவாக ஏற்பாட்டுக்கு ஒருவரை நியமித் திருக்கிறேனே?'' ரமா இப்படிக் கூறினாலும் அவள் குரலில் தேக்கம் இருப்பதைக் காந்தி உணர்ந்து கொண்டாள்.

''நீ ஒருவரையும் ஏற்பாடு செய்ய வேண்டாம். நீயே நேரில் வந்து சேர்!'' காந்தி அழுத்தமாகக் கூறிவிட்டு போனைக் கீழே வைத்தாள்.


இத்தனை அழுத்தமாகக் கூறியும் ரமா ஒரு முறைதான் வந்தாள். காந்தி அவளோடு சண்டை பிடித்த போதும் சிரித்தபடி மௌனமாக இருந்தவள், உடல் பலவீனத்தினால் வீட்டிலேயே அமைதியான சூழ்நிலையில் இளைப்பாற வேண்டியிருக்கிறது என்று கூறி விட்டாள். கோசல்ராம் ஒரொருமுறை அவள் வீடு சென்று விவாக ஏற்பாடுகளைக் கூறினார். ரமா அவரை அதிக நேரம் தன் வீட்டில் தங்க விடாமலேயே பார்த்துக் கொண்டாள்.

மறு நாள் விவாகம். முதல் நாள் மாலை மாப்பிள்ளை அழைப்பும் நடந்து



'ஆஸ்ப்ரோ'

மட்டுமே மைக்ரோஃபைண்ட் செய்யப்படுகிறது அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக



கீழ்க் கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளு • ஜுர வேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி.

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலி நிவாரணியாகும்.



புதிய மைக்ரோஃபைன்ட்
'ஆஸ்ப்ரோ' அதிவேகமாக
வலியை வெளியே இழுத்துவிடுகிறது.

நிகோலஸ் Ⓝ தயாரிப்பு

AG.37.TAM

விட்டது. சுற்றத்தாரும் நண்பர்களும் கல்யாண மண்டபத்தில் குழுமியிருந்தனர். எங்கும் ஒரே கேள்வி.

''ஏன் ரமாவும் ரூபகுமாரும் வரவில்லை?''

தேவகிகூடத் தவித்து விட்டாள். கோசல்ராம் போன் செய்தபோது. ''இதோ வருகிறேன்'' என்று ரமா தான் பதிலளித்தாள். ஆனால் வரவில்லை.

கடைசியில் அவர்களை அழைத்து வர ஆனந்தை அவர்கள் வீட்டுக்கு அனுப்பினார்கள்.

ஆனந்தைப் பார்த்ததுமே ரமா திகைத்தாள். தன்னை அழைத்துப் போக ஆனந்த் வருவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

''வாருங்கள், ஆனந்த்! உட்காருங்கள்.''

''நான் உட்கார வரவில்லை. இப்போது...''

''எனக்குத் தெரியும். இந்த வீட்டில் நீங்கள் உட்கார விரும்ப மாட்டீர்கள்.''

ஆனந்தின் மனத்தில் வேதனை. ''அப்படியில்லை, ரமா. நீ என் வீட்டுக்கு வந்தபோது நான் உன்னுடன் பேசாதது தவறுதான். ஆனால் எந்த மன நிலையில் நான் இருந்தேன் என்பது உனக்குத் தெரியாது. இதயம் திறந்து என் வேதனையைக் காட்டக் கூடிய சக்தி ஒன்று இருக்குமானால் அதை நான் உபயோகித்து உனக்குக் காட்டுவேன்.''

''வேண்டாம், ஆனந்த். வேதனை என்பது என் ஒருத்திக்கே சொந்தமாக இருக்கட்டும்.

''ரமா! நீ காந்தியின் விவாகத்தை முன்னின்று நடத்த வேண்டாமா?—இந்த வேளைக்கு நீ அங்கிருக்க வேண்டாமா?''

''நான் வருவதாகத்தான் இருக்கிறேன். ரூபகுமார் வருவதற்காகக் காத்திருக்கிறேன்.''

இதே நேரத்தில் ரூபகுமாரும் வந்து விட்டான். ஆனந்தைக் கண்டதும் அவன் ஸ்தம்பித்து நின்று விட்டான். ஒருவிதத்தில் ஆனந்தின் சந்திப்பைத் தவிர்க்கவே விவாகத்துக்கு வர முடியாதென்று அவன் கூறிக் கொண்டிருந்தான்.

''ஆனந்த்! நீங்களா?'' கூவிவிட்டான் ரூபகுமார்.

''ஆமாம். நான்தான். என்னைக் காணும்போதே இப்படி அச்சம் உண்டாவது ஏனோ?'' ஆனந்த் அவன் மீது பாய்ந்து விடுவான் போலிருந்தது.

ரூபகுமாரின் அச்சமும் வெலவெலப்பும் அவன் உணர்ச்சியை வெகுவாகத் தூண்டி விட்டன.

''ஆனந்த்! தயவு செய்து பேசாமலிருங்கள்.'' ரமா இடையே கூறினாள்.

''நீ பேசாமலிரு, ரமா. நான் இரண்டில் ஒன்றைத் தீர்க்கப் போகிறேன். ரூபகுமார்! இப்படி என் எதிரில் வாருங்கள். என் கேள்விக்கு, அன்று கேட்காமல் நான் விட்ட கேள்விக்குப் பதில் கூறுங்கள்.''

ஆனந்த் கூறிக் கொண்டிருக்கும் போதே ரூபகுமார் விர்ரென்று வாசலுக்குச் சென்றான். 'குமார், குமார்!' என்று ரமா கூவியதையும் பொருட்படுத்தாமல், காரைக் கிளப்பிக் கொண்டு வெளியே சென்று விட்டான்.

ரமா கோபத்துடன் ஆனந்தை நோக்கினாள். ''ஆனந்த்! என்ன வேலை இது?''

''உனக்குத் தெரியாது ரமா. இவனைப் பற்றி....''

''இவரைப் பற்றி இனி எனக்கு ஒன்றுமே தெரிய வேண்டாம். இவர் என் கணவர் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். அதுவே போதும். வீட்டுக்கு வந்தவரை அநியாயமாகத் துரத்தி விட்டீர்களே, இது நியாயமா?'' ரமா கர்ஜித்தாள்.

ஆனந்த் விதிர்விதிர்த்து நின்று விட்டான். ரமாவா இப்படிப் பேசுகிறாள்? ''ரமா!'' உரக்கக் கூவி விட்டான்.

''வேண்டாம்! மேலே பேசாதீர்கள். நீங்கள் போய்விடுங்கள்...போங்கள்... 'ஐ ஸே யூ கெட் அவுட்' என்று கூச்சலிட்டுக் கூவிய ரமா அங்கிருந்த கட்டிலில் போய் விழுந்து விட்டாள்.

* * *

முதல் நாள் ரமாவின் வீட்டிலிருந்து திரும்பிய பிறகு ஆனந்த் அந்தக் கல்யாண வீட்டின் எந்தக் காரியத்திலும் பங்கெடுக்க முடியாமல் திணறினான். எந்தப் பக்கம் திரும்பினாலும் அவனுக்கு அந்தக் காட்சியே கண் முன் நின்றது. 'ஐ ஸே யூ கெட் அவுட்' என்று கூறிவிட்டாளே, ரமா! அப்படிச் சொல்லக் கூடியவளா அவள்? ரமாவின் குணம் அவனுக்கு நன்றாகத் தெரியும். தன் சாந்த சுபாவத்தையும் மீறும்படி அவளுக்கு என்ன நடந்திருக்கும்? அவள் கூறிய மற்றொரு விஷயமும் அவன் நெஞ்சில் சுற்றியது.

'இவரைப் பற்றி இனி எனக்கு ஒன்றுமே தெரிய வேண்டாம். இவர் என் கணவர் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறேன், அதுவே போதும்' என்றாளே! கணவனாக இருக்க ரூபகுமார் தகுதி உள்ளவனா? அவனுக்காக ரமா ஏன் பரிந்து பேச வேண்டும்?

சுழன்று சுழன்று தவித்தது அவன் மனம். ரமாவா இப்படிக் கூறினாள்? ரமாவைப் பெண்மைக்கு ஓர் உதாரணமாக நினைத்தானே, அவளா இப்படி அவனை விரட்டினாள்? வாசுவின் உயிருக்காக ரூபகுமாரரை மணந்து கொண்டதாகச் சொன்னாளே? அதெல்லாம் மேற்சொல்லாக இருக்குமோ? ஆஸ்பத்திரியில் ஏதோ நடந்ததாக அவள் மற்றவர்களை நம்ப வைத்திருக்கிறாளே. உண்மை விளக்கம் அவனுக்குத் தெரியாமலா இருக்கும்? ரூபகுமாரரை அவள் விரும்பியே தான் மணம் செய்து கொண்டிருக்க வேண்டும்.

ஐயோ! ரமாவைப் பற்றி அப்படி நினைக்கவும் முடியவில்லையே! அவள் தாய்மைப் பேற்றை அடைந்து விட்டாள் என்னும் செய்தியைக் கேட்டதுமே நம் கோப உணர்ச்சியை அடக்கிச் சண்டை செய்யாமல் வந்தோமே! இன்று ரூபகுமாரரைப் பார்த்ததுமே ஏன் கோபத்துக்கு இடம் கொடுத்தோம்? 'வீட்டிலிருந்து அநியாயமாகத் துரத்திவிட்டீர்களே!' என்று ரமா கர்ஜித்தாளே, அதன் பொருள் என்னவாக இருக்கும்?

தலையை ஒரு முறை ஆட்டி விட்டுக் கொண்டான் ஆனந்த். உடலைச் சிலிர்த்துக்கொண்டான். கண்களை மூடியபடி நாற்காலியில் சாய்ந்து விட்டான்.

"ஆனந்த்! இப்படி உட்கார்ந்து விட்டாயே! தலையை வலிக்கிறதா? முழுப் பொறுப்பை ரமா உன்னிடம் ஒப்படைத்திருந்தாளே, விருந்தினர்களை உபசரிக்காமல் வந்து விட்டாயே!" என்றார் சீதாபதி.

தனக்கு உதவியளித்த காந்தியின் விவாகம் தடையில்லாமல் நடைபெற வேண்டுமென்பது அவர் விருப்பம்.

"அப்பா, ரமாவின் வாழ்வில் திரை மறைவில் ஏதோ நடந்து கொண்டிருக்கிறதென்றே நினைக்கிறேன். சகோதரியின் விவாகத்துக்கு முன்னின்று ஏற்பாடு செய்தவள் அதில் பங்கெடுக்க முடியாமல் இருக்கிறாள். விளக்கம் எப்படிப் பெறுவது என்றுதான் புரியவில்லை!" என்றான் ஆனந்த்.

"எதற்கும் விவாகம் முடியட்டும். அப்புறம் முயன்று பார்ப்போம்!" என்றார் சீதாபதி.

விவாகத்தன்று சுப நேரம் நெருங்கியும் ரமாவும் ரூபகுமாரும் வரவில்லை. சுற்றத்தாரும் ஏனையோரும் ரகசியமாக ஏதேதோ பேசிக் கொண்டனர். கோசல்ராம் இது தாளாமல் தாமே ரமாவின் வீட்டுக்குச் சென்றார்.

அவர் உள்ளே நுழையும்போதே பணியாள் கூறினான்:

"அம்மா இல்லீங்களே!"

"எங்கே போய் விட்டாள்?"—'ஒரு கால் வேறு வழியாகக் கல்யாண மண்டபத்துக்குப் போய் விட்டாளோ?' என்று கோசல்ராமுக்குச் சந்தேகம் எழுந்தது.

"வெளியே போறேன்னு மட்டும் சொன்னாங்க."

"எப்போ திரும்புவாள்?"

"சொல்லலீங்களே!"

"ரூபகுமாரும் இல்லையா? அவனும் கூடப் போய் விட்டானா?"

"இல்லே. அவர் வீட்டிலேயே இல்லே. அம்மா மட்டும் தனியாகத்தான் போனாங்க."

"எப்படிப் போனாள்? புதுப் புடவை நகை....?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க. இருட்டுக் கலையுமின்னே அப்படியே கிளம்பிடுச்சு..."

கோசல்ராம் நலிப்புடன் வீடு திரும்பினார். அவர் வந்ததும், "ரமா எங்கேப்பா?" என்று கேட்டாள் காந்தி.

"வீட்டிலேயே இல்லையே அம்மா. எனக்கு ஒரே கலவரமாக இருக்கிறது. ஏன் இப்படி வராமலேயே இருக்கிறாள்?"

காந்தி கருணைக்குப் பதில் கோபத்தின் பிடியைப் பற்றினாள்.

ரமா விவாகத்துக்கு வராத காரணம் காந்திக்கு நன்றாகப் புரிந்தது. வாசுவோடு தன் விவாகம் நடப்பதை அவளால் சகிக்க முடியவில்லை. அதனால் தான் அவள் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. ரூபகுமார் அவள் வாழ்வைக் கெடுத்து விட்டான் என்றால் அதற்குக் காந்தியா பொறுப்பாளி? இப்போது தாய்மை வேறு அடைந்துவிட்டாள். சகோதரி தன் காதலை நிறைவேற்றிக் கொண்டு விட்டாளே என்ற அசூயை, பொறாமை காரணமாகத்தான் ரமா வரவில்லை. அவளுக்குத் தெரியாத ரகசியமா அது? ரூபகுமாரரையும் ரமா தான் வராமல் தடுத்திருப்பாள்.

ரமா விவாகத்துக்கு வராததை வாசுவும் கவனித்தான். அவன் மனமும் விபரீதப் போக்கில்தான் சென்று கொண்டிருந்தது. ரமா வராததற்குக் காரணம் பணத் திமிர் என்று முடிவு கட்டினான். சகோதரி ஏழையை அல்லவா மணந்து கொள்கிறாள்? சம்பந்திகளை மற்றவர்களுக்குப் பெருமையாக அறிமுகம் செய்து வைக்க முடியாதே! அதன் காரணமாகத்தான் அவள் இங்கு எட்டிப் பார்க்கவில்லை. அல்லது நேரில் வந்தால் அவன் ஏதாவது கேட்டு விடுவானோ என்ற பயமாகவும் இருக்கலாம். அப்படி நினைக்கும்போதே அன்று அவள் கன்னத்தில் தான் அறைந்து விட்டது, அவன் நினைவுக்கு வந்தது.

றூம், அதையும் துடைத்துப் போட்டிருப்பாள்... சே, ரமாவைப் பற்றியா இப்படி நினைப்பது? நினைக்காமல் என்ன செய்வதாம்? அவனைக் காதலித்ததெல்லாம் வெறும் பாசாங்காக இருக்கும். அல்லது கால் உடைந்து இவன் நொண்டியாகி விடுவான், நொண்டியோடும் முடவனோடும் என்ன வாழ்க்கை நடத்துவது? ரூபகுமாரை மணப்பதே சிறந்தது என்று தீர்மானித்திருப்பாள். அதனால்தான் சிகிச்சை நடந்தபோது கூட அவனைப் பார்க்க வரவில்லை.

'...ரமா! நான் பழிக்குப் பழி வாங்குவேன். என் எதிரிலேயே ரூபகுமாருடன் மகிழ்ச்சியாகச் சுற்றி என் வேதனையை நீ கிளறி விட்டது போல் நானும் உன் எதிரில் காந்தியுடன் மகிழ்ச்சியோடு இருப்பதைக் காட்டி உன் வேதனையைத் தூண்டி விடுவேன். காந்தியின் பணத்தை உபயோகிப்பேன். என்ன இருந்தாலும் என்னைக் காதலித்ததை நீ முழுவதும் மறந்து விட முடியாது. நான் காந்தியோடு உன் எதிரில் குலாவும் குலாவலில் வேதனை உன் மனத்தில் பெரிதாக வளர வேண்டும்...

'...ஐயோ ரமா! உன்னை மறக்க முடியவில்லையே! உன்னைப் பார்த்து எத்தனை மாதங்கள் ஆகின்றன! உன்னிடம் பழி தீர்க்க முயலுகிறேனே, இது நியாயமா? ரமா... ர...மா...'

குமுறிக் குமுறி வாசுவின் உள்ளத்தில் போராட்டம் நிகழ்ந்தது. மணையிலிருக்கும்போதே தலையில் கை வைத்துக் கொண்டு விட்டான்.

அவனையே கவனித்துக் கொண்டிருந்த ஆனந்த், அவன் செய்கையைக் கண்டு திடுக்கிட்டான். தேவகியிடம் சென்று, "அம்மா, வாசுவைக் கவனியுங்கள்" என்று கூறினான்.

தேவகி வாசுவின் அருகில் ஓடினாள். "வாசு! என்னப்பா உனக்கு? தலையை வலிக்கிறதா? காப்பி கொண்டு வந்து தரட்டுமா?" என்று பதறியபடி காதோடு கேட்டாள்.

வாசு தன்னைச் சமாளித்துக் கொண்டான். "ஒன்றுமில்லை அம்மா ஹோமப் புகை அவ்வளவுதான்!" என்றான்.

ஆனந்த் அருகில் இருந்தபடியே முகூர்த்தத்தைக் கவனித்தான். காந்தியின் முகத்தில் எவ்வளவு மகிழ்ச்சி? சகோதரி தன் விவாகத்தில் பங்கெடுத்துக் கொள்ளாதது குறித்துக் கூடக் கவலைப்படாமல் என்ன ஆனந்தம்! ஆனால் வாசு...?

மாங்கல்யத்தை அணிவிக்கக் கையில் வாங்கும்போதே தயக்கம்; அதைக் காந்தியின் கழுத்தில் முடியும்போதோ நடுக்கம்! நாற்புறமும் தெளிவில்லாத

போகிற போக்கைப்
பார்த்தால்...



"ஏண்டி! ஆபீசுக்கு நேரமாகிறது. என் இருதாவைப் பின்னிவிடு என்றால் நாவல் படித்துக் கொண்டிருக்கிறயே!"

பார்த்தான். ஆனந்தின் மனத்தில் ஓர் அச்சம். உண்மையாகவே வாழ்க்கையை அனுபவிக்கவா வாசு இந்த விவாகத்துக்குச் சம்மதித்திருக்கிறான்? ஏதேனும் விபரீத அடிப்படைக் காரணம் இருக்குமோ... ஒரு பெண்ணின் வாழ்வு—பாழடைந்து விடுமோ?

விவாகம் முடிந்து விட்டது.

பிற்பகல் தேவகி ஆனந்தைத் தனியாகச் சந்தித்தபோது, "ஆனந்த்! எனக்கு மனத்தில் ஒரே குழப்பம்" என்றாள்.

"என்னம்மா?"

"ரமாவைப் பற்றியே சிந்தனையாக இருக்கிறது. அவள் ஏன் கல்யாணத்துக்கு வரவில்லை?"

"எனக்கும் தெரியவில்லை."

"நீ நேற்று அவர்கள் வீட்டுக்குச் சென்றபோது உண்மையாகவே அவள் வீட்டில் இல்லையா?"

ஆனந்த் வியப்புடன் அவளை நோக்கினான். இத்தனை நேரம் அவனிடம் கேட்காமலே அவள் தவித்திருக்கிறாள். கோசல்ராம் கூட அவன் வார்த்தையை நம்பியிருக்கிறார்.

"நீ மௌனம் சாதிக்கிறாய், ஆனந்த். எனக்கென்னவோ நேற்று நீ சொன்னதில் நம்பிக்கை இல்லை" என்றாள் தேவகி.

ஆனந்த் அவளைக் கூர்ந்து நோக்கினான். 'ரமா கூடத் தேவகியிடம் தன் இரகசியங்களைக் கூறுகிறாள். நானும் கூறினால் என்ன தவறு?' என்று எண்ணினான்.

(தொடரும்)

சமயபுரத்தானின் வருகையைப் பார்த்துத்தான் எங்கள் வீட்டுக் கடிகாரத்துக்குச் சாவி கொடுத்துச் சரி செய்து வைப்பார் என் தாயார்.

என் தாயாருக்கு மட்டும் அல்ல, எங்கள் தெருவிலுள்ள எல்லாருக்குமே அப்படி ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை அந்த மனிதரின் 'பஞ்சக்கவாளிட்டி' மேல் !

இத்தனைக்கும் பஞ்சுவாலிடி - பிஞ்ச்வாலிட்டி என்பதைப் பற்றி யெல்லாம் கொஞ்சம் கூட அறிந்திராத பழைய காலத்து ஆசாமி அவர்.

பொழுது புலர்விலிருந்தே மந்தகதியில் இயங்கத் தொடங்கும் எங்கள் தெருவுக்கு அவரைப் பார்த்தபிறகுதான் கொஞ்சமாவது 'சொரணை' பிறக்கும்.

''அடடா... அதற்குள் மணி ஒன்பதரை ஆயிடுச்சா, எவ்வளவு சீக்கிரமாய் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறது இந்தப் பாழும் நேரம்'' என்று தங்களுக்குள் பரபரப்புடன் முணுமுணுத்துப் பம்பரமாய்ச் சுழல்வார்கள் அவர்கள்.

அரச மரத்துப் பிள்ளையார் கோயில் தெருவில் நுழையும் சமயபுரத்தான் நேராக எங்கள் வீட்டு வாசலில்தான் வந்து நிற்பார் முதலில். காரணம் அந்தத் தெருவின் முதல் வீடு எங்களுடையதுதான் என்பது ஒருபுறம் இருக்க, அவர் சுமந்து வரும் தபால்களில் முக்கால் பங்கு எனக்குரியதாகவே இருக்கும்.

'பேனா நண்பர்கள் சங்கம்' என்ற ஓர் அமைப்பை வைத்துக் கொண்டு, உலகின் பல நாட்டு மனிதர்களுடன் அஞ்சல் தொடர்பு கொண்டிருக்கும் வேலை எனக்கு ஒரு நல்ல பொழுதுபோக்காக இருந்தாலும், இரண்டு பேருக்கு அது பெரும் தலைவலியாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

ஒருவர் என் தாயார். பொழுது விடிந்து பொழுது போனால் தபால் செலவுக்கென்று இரண்டு மூன்று என்று நான் கேட்கும் ரூபாயை எனக்குக் கொட்டி அழ வேண்டும் அவர். விதவையான அவருக்கு, வீட்டின் மூத்தவனும், ஒரே ஆண் பிள்ளையுமான என் மேல் பற்று அதிகம். அதனால், என் செலவுகள் 'தண்டம்' என்று தெரிந்திருந்தும் ஒரு வார்த்தை கடிந்தோ கோபித்தோ சொல்ல மாட்டார் என்னிடம் அவர்.

இன்னொருவர் அஞ்சற்காரர் சமயபுரத்தான். எனது வெளிநாட்டு நண்பர்கள் அனுப்பிக் கொண்டிருக்கும் பொதிக் கணக்கான புத்தகக் கட்டுக்களையும், பார்சல்களையும் தினம் சுமந்துவந்து கொடுப்பதிலேயே கூன் விழுந்து விட்டிருந்தது அவர் முதுகு.

கல்லாகக் கனக்கும் புத்தகக் கட்டுக்களை அந்த மெலிந்த மனிதர் சுமக்க முடியாமல் சுமந்து வருவதைப் பார்க்கும்போது எனக்கே வேதனையாக இருக்கும்.

கட்டுக்களைக் கொண்டு வந்து திண்ணையில் போட்டு விட்டு, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க அப்படியே உட்கார்ந்து விடுவார் அவர்.

என் தாயார் பரிவுடன் அவரிடம் பேச்சுக் கொடுப்பார்.

''....இந்தக் குப்பைகளோடு இன்றையத் தபால் சரியா தபால்காரரே?... வேலைக்கு ஏதும் உத்தரவு வரவில்லையா மகனுக்கு?....''

சமயபுரத்தான் என்னைப் பார்த்து இலேசாகப் புன்னகை புரிவார். பின்னர் பதில் சொல்வார்.

''ஒன்றும் வரலீங்க அம்மா... உத்தரவைப் பற்றி நீங்கள்தான் அக்கறையோடு கேட்கறீங்க... தம்பி அதைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்பட்டதாத் தெரியலீங்களே....!''

''இவனுக்காகத்தானே இத்தனை கட்டுகளைச் சுமக்கறீங்க? இவனையே தபாலாபீஸிலே வந்து வாங்கிக்கச் சொல்றதுதானே ?''

''அதெப்படிம்மா? எங்களுக்குச் சர்க்காரிலே எதுக்காகச் சம்பளம் கொடுத்து வச்சிருக்காங்க? கடமையைச் செய்யத்தானே ?''

''எத்தனை பேர் இருக்கிறாங்க, இந்தக் காலத்திலே?... ஒவ்வொரு ஊரிலே மற்றவங்களுக்கு வருகிற மணியார்டர்களை யெல்லாம் கூடத் தபால்காரங்களே கையெழுத்துப் போட்டு எடுத்துக் கொள்கிறாங்களாமே...''

அம்மாவின் பேச்சு சாதாரணமாகக் கேட்கப்பட்டதாகத்தான் இருக்கும். ஆனால்



அதைக் கேட்டவுடன் சமயபுரத்தானின் முகம் அவமானத்தால் சிறுத்துப் போகும். தணிந்த குரலில் பதில் சொல்வார்.

''அவர்களுக்கெல்லாம் ஆண்டவன் கூலி கொடுக்காமல் போக மாட்டானுங்க....''

இடையில் புகுந்து வேடிக்கையாகக் கேட்பேன் நான்.

''உங்க தபால் தந்தி இலாகாவுக்கு நம்ம அரசாங்கம் கொடுக்கிற சம்பளம் போதாது என்று ஆண்டவன் வேறு கொடுக்க வேணும் என்கிறீர்களா ?....''

உணர்ச்சிப் பிழம்பாகி விடுவார் சமயபுரத்தான்.

''கடவுளை அப்படிக் கேலி செய்யாதீங்க, தம்பி! நம்ம அரசாங்கத்துக்கெல்லாம் பெரிய அரசாங்கத்தை நடத்துகிறவன் அவன். இந்த அரசாங்கத்தை ஏமாற்றி விடலாம். ஆனால் அந்த அரசாங்கத்தை யாராலும் ஏமாற்ற முடியாது. கடவுள் நின்றுதான் கேட்பாரு.''

சமயபுரத்தானின் பேச்சில் பக்தியும் நம்பிக்கையும் கொப்புளிக்கும்.

அம்மா சிறிது நேரத்தில் மோரோ, காப்பியோ கொண்டு வந்து அவரது தாகத்துக்குக் கொடுப்பார். சமயபுரத்தான் சிரம பரிகாரம் செய்து, சற்று நேரம் வீட்டுச் செய்திகளைப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்படத் தயாராவார். அந்த நேரம் பார்த்து நான் வழக்கம் போல் அவரது கையில் நாலணா நாணயத்தை வைத்து அழுத்த, ஒரு நன்றிச் சிரிப்புடன் கிளம்பி விடுவார் அவர்.



சமயபுரத்தான்! சமயபுரத்தான் என்ற புதுமையான பெயரை உடைய அந்த அதிசய மனிதரைக் கடந்த இருபது ஆண்டுகளாகவே எனக்குத் தெரியும். தாசில்தாராயிருந்து ஓய்வுபெற்ற என்னுடைய தந்தை மேல் அவருக்கு நிரம்ப மரியாதை. தந்தைக்கும் அவர்மேல் அளவற்ற அன்பு. இருவரும் நன்கு பழகுவார்கள்.

ஒரு முறை சமயபுரத்தானுக்கு அப்பெயர் வைக்கப்பட்டதன் காரணத்தைக் கேட்ட பொழுது அவர் விவரமாகச் சொன்னார்.

சிறு குழந்தையாக இருந்தபோது பெரிய அம்மை வார்த்து மரணப் படுக்கையில் கிடந்த அவரை அவரது பெற்றோர் சமயபுரம் மாரியம்மன் சந்நிதிக்கு எடுத்துச் சென்று கிடத்தி, குழந்தைக்கு உயிர்ப் பிச்சை அளிக்குமாறு வேண்டிக் கண்ணீர் வடித்தார்களாம். அம்மன் அருளால் குழந்தை பிழைத்து விட்டதாம். அதனால் அதற்கு அம்மன் குடியிருக்கும் தலத்தின் பெயரையே சூட்டி விட்டார்களாம்.

இருபது ஆண்டுகளுக்கு முன் நான் இந்த ஊருக்கு வந்தபோது மூன்றாவது வகுப்பு

படித்துக் கொண்டிருந்தேன். இன்று பட்டப் படிப்பு முடித்துவிட்டு வீட்டில் உட்கார்ந்திருக்கிறேன். இடையே நீண்ட நெடுங்காலம் ஓடி விட்டது. எத்தனையோ மாறுதல்கள், வளர்ச்சிகள்!

ஆனால் சமயபுரத்தானைப் பொறுத்தவரை எந்த வித மாறுதலோ வளர்ச்சியோ இல்லை. பார்க்க ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

அட! வாழ்க்கை நிலை எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும். உடலளவிலாவது சற்று வித்தியாசம் இருக்கக் கூடாதா? ஊஹூம்!

அதே ஒல்லி உடல், குச்சி குச்சியான கைகால்கள், எலும்பு துருத்திக் கொண்டிருக்கும் முகம், நீண்டு பிதுக்கும் பல் வரிசை, குழி விழுந்த கன்னங்கள், வழுக்கை விழுந்த பின் தலை இந்த உருவத்தை, அழுக்கேறிப் போன, தொளதொளத்த காக்கி உடைகளுக்குள் நுழைத்துக் கொண்டு, கையில் குடையோ, காலில் செருப்போ கூட இல்லாமல் சாவி கொடுக்கப்பட்ட பொம்மை போல் விசுக்விசுக்கென்று அவர் நடந்து செல்லும் அழகே தனி.

எந்தப் பனியும், எந்த மழையும், எந்தக் கோடையும், எந்தக் குளிரும் அவரை அவரது கடமைகளிலிருந்து தடுத்துவிட முடியாது.

பொங்கல், தீபாவளி என்று நோன்பு நாட்கள் வந்து விட்டால் சமயபுரத்தானுக்கும் அவர் குடும்பத்தாருக்கும் புத்தாடைகள் வாங்கித் தந்து விருந்தும் வைப்பார் என் தந்தை.

அந்த அன்பையெல்லாம் சமயபுரத்தான் என்றுமே மறந்ததில்லை. என் தந்தை மரணமடைந்தபோது அந்தத் தபால்காரர் வடித்த கண்ணீரைப் பார்த்து என் தாயாரே வியந்து போனார்.

அப்பாவுக்குப் பின் சமயபுரத்தானுக்கு எங்கள் வீட்டு அன்பளிப்புகள் கிடைக்காது போயின. என்றாலும் எங்களிடம் அவருக்கிருந்த பற்று சிறிதளவும் குறையவில்லை. தபால் டெலிவரிக்கு வந்தால் வழக்கம்போல் சற்று நேரம் என் தாயாருடன் ஆறுதலாகப் பேசிக் கொண்டிருப்பார். அப்போதெல்லாம் வீட்டுக் கவலைகளைச் சமயபுரத்தானிடம் சொல்லி மன பாரத்தைக் குறைத்துக் கொள்வார் தாயார்.

உயிரோடு இருக்கும்போது நன்றாக வாழ்ந்து விட்டாரே ஒழிய இந்த உலகை விட்டுப் போகும்போது வெறுங் கையோடு தான் போய்ச் சேர்ந்தார் என் தந்தை.

அவரது சேமிப்பு நிதியிலிருந்து கிடைத்த குறைந்த தொகையை வைத்துக் கொண்டு இரண்டு பெண்களுக்குத் திருமணம் செய்து வைத்தார் தாயார். என் கடைசித் தங்கையும் திருமணத்துக்கு விரைந்து தயாராகிக் கொண்டு வந்தாள். இந்த நிலையில் என் தாயார் என்னை வீட்டுக்கு மூத்த பிள்ளையான எனது சம்பாத்தியத்தை எதிர்பார்த்தது இயற்கைதானே!

ஆனால் சூழ்நிலையோ வேறு விதமாக இருந்தது. நான் எழுதிப் போட்ட விண்ணப்பங்களெல்லாம் பயனற்றுப் போயின. செய்த வேலை முயற்சிகள் எல்லாம் வெற்றி பெறாமல் நின்றன. இதனால் என் தாயாருக்கு ஏற்கனவே தங்கையைப் பற்றியிருந்த கவலையுடன் என் கவலையும் சேர்ந்து கொண்டது.

என்னுடன் படித்தவர்களுக்கெல்லாம் வேலை கிடைத்து எனக்கு மட்டும் கிடைக்காதிருந்தது எனக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது. அது தாயார் மனத்தில் வேறுவித சந்தேகத்தையும் உண்டாக்கியது. 'உருப்படியில்லாத கண்ட கண்ட வேலைகளையெல்லாம் தலைமேல் தூக்கிப் போட்டுக் கொண்டு உத்தியோகம் பெறுவதற்கு வேண்டிய முயற்சியில் நான் சரியாக, பொறுப்பாக ஈடுபடவில்லை என்பதே அந்தச் சந்தேகம்.

அம்மாவின் மனக் குமுறலை ஒரு நாள் சமயபுரத்தான் வாயிலாக அறிந்த நான் உண்மையில் திடுக்கிட்டுப் போனேன்.

பெற்ற தாயே தன் மகனைப் பொறுப்பற்ற பிள்ளை என்று நினைத்துக் கொண்டிருப்பது எவ்வளவு பெரிய துன்பம்! தன் மனக் கவலைகளைச் சொல்லி ஆறுதல் தேடுவதற்குத் தன் மகன் அருகதையற்றவன் என்று எண்ணி, மூன்றாவது மனிதனிடம் சொல்லிக் கண்ணீர் விடுவது எத்தனை பெரிய அவமானம்!

அதற்கு மேலும் வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்க முடியவில்லை என்னால். வேலை தேடும் படலத்தில் தீவிரமாக ஈடுபட்டேன். பல இடங்களில் அலைந்த பின் சென்னையில் உள்ள ஒரு வெள்ளைக்காரக் கம்பெனியில் ஊர்சுற்றும் பிரதிநிதி வேலையைத் தேடிக் கண்டுபிடித்தேன்.

மாதச் சம்பளம் நானூறு ரூபாய். உடனே வேலைக்குச் சேர்ந்து கொள்ளலாம். ஆனால் முன்பணம் 900 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொன்னார்கள்.


இரண்டு நாட்களில் மீண்டும் வந்து முன் பணம் கட்டி விட்டு வேலையில் சேர்ந்து கொள்வதாகக் கம்பெனியில் சொல்லி விட்டு ஊர் திரும்பினேன்.

செய்தியை அம்மாவிடம் கூறியபோது அவர்கள் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார்கள். வீட்டிலிருந்த நகைகளையெல்லாம் வட்டிக் கடையில் அடகு வைத்து ஆயிரம் ரூபாய் தயாரித்து என் கையில் கொடுத்துவிட்டார்.

அன்று சனிக்கிழமை. அடுத்த நாளும் ஞாயிற்றுக் கிழமையாக இருப்பதால் இரண்டு நாட்களும் ஊரில் இருந்து விட்டுத் திங்கட்கிழமை காலை சென்னை புறப்படுவதென்று தீர்மானித்தேன். பெட்டி படுக்கை முதலியவற்றைத் தயாராகக் கட்டி வைத்துக் கொண்டேன்.

மாலை சுமார் நாலரை மணி இருக்கும். வாசலிலிருந்து என்னை அழைக்கும் குரல் ஒன்று கேட்டது. வெளியே சென்று பார்த்தேன். அஞ்சற்காரர் சமயபுரத்தான் சோகம் படிந்த முகத்துடன் நின்றிருந்தார். காலையில் கூட வந்திருந்தார். அப்போது பார்த்ததற்கும் இப்போது பார்ப்பதற்கும் நிறைய வேற்றுமை இருந்தது. இந்த ஆறு மணி நேரத்தில் ஆறு நாட்கள் படுக்கையில் படுத்திருந்தவரைப் போல் குடுக்கென்று இளைத்துத் தோற்றமளித்தார். கண்களில் கலக்கம் வீசிக் கொண்டிருந்தது. பேச்சில் வழக்கமான உற்சாகம் இல்லை.

அப்படி அவர் எப்போதும் தோற்றமளித்தது இல்லை. அந்த நேரத்தில் எங்கள் வீட்டுக்கு



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414, மதராஸ்-5

தந்தி: 'EVERMANS' போன்: 85834

மதராஸ் சிட்பண்டு 1961 ஆக்ட்படி இப்பொழுதும் சீட்டுகள் நடத்தப்படுகின்றன
(மதராஸ் ஆக்ட் நெ. 24 of 1961)

25 மாதங்கள் — குறுகிய காலச் சீட்டுகள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200	ரூ. 5000	D	ரூ. 25	ரூ. 625
B	ரூ. 100	ரூ. 2500	E	ரூ. 20	ரூ. 500
C	ரூ. 50	ரூ. 1250	F	ரூ. 15	ரூ. 375

40 மாதங்கள் — நீண்ட காலச் சீட்டுகள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500	ரூ. 20000
LTB	ரூ. 250	ரூ. 10000
LTC	ரூ. 125	ரூ. 5000

சேரும் குரூப்பை விவரித்து எங்கள் விதிகளுக்கு எழுதவும்

கிளைகள்: புது டில்லி — பம்பாய் — பெங்களூர் — கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

பண்டித டி. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்
ஆரோக்கியத்திற்கும் பலத்திற்கும்

அருணா
மாதர்களின் ஆரோக்கியத்திற்கு

பாலப்ராஸ
குழந்தைகள் டானிக்


ரக்தசோதகா
சிறந்த ரத்தசுத்தி ஔஷதம்

ச்யவனப்ராசனம்

ஆயுர்வேதாச்ரமம்
பிரைவேட் லிமிடெட்

கால் அரிப்பு சரும அரிப்பு

அரிப்பு, எரிச்சல் முதலிய உபாதைகளை உங்களால் தாங்க முடியாமல் வைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? உங்கள் சருமத்தில் வெடிப்புகள் தோன்றி தோல் உரிந்து ரத்தம் கசிகிறதா? பாதங்களிலும் கால் விரல்களுக்கிடையிலும் புண்கள் தோன்றி உபத்திரவம் செய்கின்றனவா? இவைகள் வெடித்துக் கசிந்து மேலும் புண்களை உண்டாக்குகின்றனவா? இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் சிங்கப்பூர் சொறி, வண்ணாரப்படை என்று பல பெயர்களில் வழங்கப்படும் ஒருவகைக் கிருமி. மூல காரணமான இந்தக் கிருமியை ஒழிக்கும்வரை இவ்வுபாதைகளிலிருந்து நிவாரணமடைய முடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நிக்ஸோடெர்ம் (Nixoderm) முதல் தடவை போட்டவுடனேயே அரிப்பை நிறுத்தி கிருமிகளைக் கொன்று சருமத்தின் புண்ணை ஆற்றி மிருதுவாக்கி சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) அரிப்பை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. மேலும் பாதத்தின் மேலிருக்கும் புண்கள் மேல்மரு பருக்கள், முகப்பருக்கள், கட்டிகள் முகத்திலோ அல்லது தேகத்திலோ பரவிய படர்தாமரை முதலிய உபாதைகளைக் குணமாக்குகிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். பூரண திருப்தியை அது நிச்சயமாக அளிக்கும்.



பாதுகாப்பிற்கு
ஒரு பூட்டு உள்ள
தெனில் அது
நவ-தால் ஒன்றே
ஒன்றுதான் !

நவ-தால்

நம்பிக்கையானது. அதனால்தான் பாங்குகளும் தொழிற்சாலைகளும், கிடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோகிக்கின்றனர். அதிருஷ்டமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப்பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற்கேற்ற முறையில் செய்யப்பட்டது நவ-தால். பித்தளை, எஃகினாலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்குகிறது. தயாரிப்பவர்கள்: கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்பதில் 70 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுடையவர்கள்.

4 அளவுகள்:
40 mm (5 லீவர்கள்)
60 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
86 mm (8 லீவர்கள்)

Godrej கோத்ரெஜ் — எப்போதும் நம்பகரமான பூட்டுகளையே கேட்டு வாங்குங்கள்

வந்ததுமில்லை. எனவே சற்று வியப்போடு கேட்டேன்.

''என்னங்க தபால்காரரே... கூப்பிட்டீங்களா என்னை?....''

உடைந்த குரலில் பதிலளித்தார் அவர்.

''ஆமாங்க, தம்பி! அம்மா இருக்கிறாங்களா?''

''சமையலறையில் இருக்கிறாங்க... வாங்களேன் உள்ளே...''

சமயபுரத்தான் வீட்டுக்குள் வந்தார். அதற்குள் எங்கள் பேச்சுக் குரல் கேட்டு அம்மாவும் சமையலறையிலிருந்து வெளியே வந்தார். சமயபுரத்தானைப் பார்த்து விசாரித்தார்.

''என்னங்க தபால்காரரே? என்னைத் தேடி வந்திருக்கிறாப்போல் இருக்குது: என்ன சேதி?''

தபால்காரர் குரலிலிருந்த நடுக்கம் மேலும் மிகுந்தது.

''என்னத்தைச் சொல்லுவேனுங்க அம்மா? குடியே கவிழ்ந்து போயிட்டுதுங்க அம்மா.''

அம்மா திடுக்கிட்டார்.

''என்ன?... என்ன சொல்றீங்க?...''

''ஆமாங்கம்மா... மணியார்டர் பணத்திலே அறுநூறு ரூபாயைத் தொலைத்து விட்டேனுங்க...''

''ஆ! அறுநூறு?... நல்லாக் கணக்குப் பார்த்தீங்களா?''...

''நல்லாப் பார்த்துட்டேனுங்க. கிடைக்கல்லே. எங்கே தொலைச்சேன்னு எனக்கே தெரியல்லே...''

''என்ன போதாத காலங்க இது!....இப்போது என்ன செய்யப் போறீங்க?...''

''அதுதான் புரியல்லேங்க. இன்னும் ஒரு மணி நேரத்திலே பணத்தைக் கொண்டு வந்து கட்டலேன்னு என்னைப் போலீஸிலே பிடிச்சு ஒப்புவித்து விடறதாகச் சொல்லி விட்டார் போஸ்ட் மாஸ்டர்.... ஐயோ! நான் என்னம்மா செய்யறது? என் புள்ளை குட்டிகள் போகிற கதி என்னம்மா?... நான் ஜெயிலுக்குப் போயிட்டேன்னு குடும்பத்தை யாரம்மா காப்பாத்துவாங்க?... ஐயோ... ஆண்டவனே!... சமயபுரம் மாரியாத்தாளே!''

தபால்காரர் சிறு குழந்தையைப் போல் வாய் விட்டு அழலானார். அம்மா அவருக்காக மிக வருந்தினார். ஆனால் அந்த வருத்தம், ''அடப் பாவமே! என்கிட்டே கூட இப்போது பணம் இல்லையே... இருந்தால் கொடுத்து விடுவேன்... என்ன செய்யறது?'' என்றபரிவுவார்த்தைகளோடு நின்றுவிட்டது.

சமயபுரத்தான் செயலற்றுநின்றுவிட்டார். அவர் நம்பிக்கையோடு எதிர்பார்த்து வந்த ஒரே இடம் எங்கள் வீடாகத்தானிருக்க முடியும். இங்கும் கை விரிக்கப்பட்டு விட்டது. என்ன செய்வார்?

சற்று நேரம் பேசாமல் நின்று கொண்டிருந்து விட்டு அமைதியாக வெளியேறினார்.

என் மனம் கலங்கித் தவித்தது.

''ஐயோ பாவம்! அந்தக் கள்ளங் கபடற்ற நல்ல மனிதனுக்கா இப்படி ஒரு துன்பம்?...''

என் மனக் கண்ணில் அவரது பரிதாபமான உருவம் தோற்றமளித்தது. அவரது



பெண்டு பிள்ளைகள் வந்து நின்றனர். சட்டம் நின்றது. போலீஸ் நின்றது. சிறைக் கம்பிகள் தோற்றமளித்தன.

ஆம்! இன்னும் சற்று நேரத்தில் அவர் அறுநூறு ரூபாயைக் கட்டா விட்டால் அந்தக் கம்பிகளுக்குப் பின்னால் தள்ளப்படுவார்!

மறு கணம் சமயபுரத்தானைத் தேடிக் கொண்டு ஓடினேன்.

திங்கட்கிழமை காலை நான் சென்னை புறப்படாமல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து விட்டு அம்மா ''ஏன் தம்பி... சென்னைக்குப் புறப்படவில்லையா?....'' என்று கேட்டாள்.

''இல்லையம்மா...''

''ஏன்?...''

''போய் என்ன செய்வது? டெபாஸிட் கட்டப் போதுமான பணம் இல்லையே...''

அம்மா திடுக்கிட்டார்.

''என்ன? பணமில்லையா? என்னடா உளறுகிறாய்? மூந்தாநாள் உன்னிடம் கொடுத்த ஆயிரம் ரூபாய் என்ன ஆச்சு?''

''அதில் நானூறு ரூபாய்தான் பாக்கி இருக்கிறது. இதோ வாங்கிக்கொள்ளுங்கள்.''

''அறுநூறு ரூபாய் என்னடா ஆச்சு?...''

''சமயபுரத்தான் தொலைத்த அவருடைய ஆபீஸ் பணத்துக்கு ஈடாகக் கட்டிவிட்டேன்....''

அம்மா மதுரையை எரித்த கண்ணகியாக மாறிவிட்டார்.

''அடப் பைத்தியக்காரப் பயலே! நீயே வேலை கிடைக்காமல் திண்டாடும்போது இன்னொருவருக்குப் போய் உதவி செய்வது எவ்வளவு பெரிய மடத்தனம்!...''

கெஞ்சும் குரலில் நான் சொன்னேன்.

''கோபித்துக் கொள்ளாதீர்கள் அம்மா... சமயபுரத்தான் பாவம் ஏழையாக இருந்தாலும் நல்ல மனிதர். நன்றி மறக்காதவர். சமயத்தில் நான் உதவியிருக்காவிட்டால் அவருடைய வேலை பறி போய் வாழ்க்கையே நாசமாகியிருக்கும். எனக்கு அந்த வேலை இல்லாவிட்டால் வேறு வேலை கிடைக்கும். ஆனால் அவருக்கு...?''

நான் பேசிக் கொண்டே இருந்தேன். மறு வார்த்தையின்றிக் கேட்டுக் கொண்டிருந்த அம்மா அமைதியாக உள்ளே சென்றாள்.

ஒன்பதரை மணிக்குத் தபால்களைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்த சமயபுரத்தான் என்னிடம் நன்றிப் பெருக்குடன் கூறினார்.

''தம்பி உங்க உதவிக்கு நான் சாகுமளவும் கடமைப்பட்டிருக்கிறேன். நேத்து அந்தப் பணத்தை எனக்காக நீங்க கட்டலேன்னு இன்னைக்கு என்னை இந்தக் கோலத்திலே பார்த்திருக்க முடியாது. என்னைப் பிரிஞ்சு என் மனைவி மக்களும் தற்கொலை செய்து கிட்டிருப்பாங்க... நீங்க நீடூழி வாழணும்.''

இவ்வாறு கூறிக் கண்ணீரைத் துடைத்துக் கொண்ட அவர் சட்டென்று இயல்பான நிலைக்குத் திரும்பினார். பின் கேட்டார்:

''...ஆமாம்.. இன்னும் ஏன் இங்கு உட்கார்ந்திருக்கிங்க? வேலையை ஏற்றுக்கொள்ளச் சென்னைக்குப் போகலிங்களா?...''

நான் பதிலளித்தேன்:

''இல்லிங்க...!''

''ஏன் தம்பி?''

''அந்த வேலை பிடிக்கலே...''

''பிடிக்கலையா? என்னங்க தம்பி இது! பைத்தியக்காரப் பிள்ளையாக இருக்கிங்களே! கை நிறையச் சம்பளம்... கம்பெனிச் செலவிலேயே ஜாலியாக ஊர்களை யெல்லாம் சுற்றிப் பார்க்க வசதி... இத்தனையும் இருக்கும் போது ஏன் வேண்டாங்கறீங்க?''

இவ்வாறு கூறிய அவர் சமையற்கட்டிலிருந்த என் அம்மாவையும் கூவி அழைத்தார். அம்மா வந்தவுடன் சொன்னார்:

''தம்பியைப் பொறுப்பில்லாத பிள்ளை. பிழைக்கத் தெரியாத பிள்ளைன்னெல்லாம் அடிக்கடி நீங்க சொல்லுவிங்களே அம்மா. அது சரியாத்தான் இருக்கு! வந்த வேலையை வேண்டாம்னு உதறித் தள்ளறாங்களே.... ஏன்னென்று கேளுங்கம்மா...''

அம்மாவின் குரலில் உயிர் இல்லை. பேச வேண்டும் என்பதற்காக, ''...நீங்களே கேளுங்க... உள்ளே எனக்கு வேலை இருக்கு'' என்று வேண்டா வெறுப்பாகக் கூறிவிட்டுப் போய்விட்டாள்.

சமயபுரத்தான் என்னை வேதனையோடு ஒரு விநாடி உற்றுப் பார்த்தார். பின்னர், ''நீங்க செய்யறது கொஞ்சம் கூடச் சரியில்லைங்க தம்பி....'' என்று கூறிவிட்டு எழுந்தார்.

எனக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை, அந்த அப்பாவி மனிதரைப் பார்த்து!

அவருக்காக நான் அவர் ஆபிஸில் கட்டிய அறுநூறு ரூபாய் என் வேலைக்கு டெபாஸிட் கட்டுவதற்காக அம்மா என்னிடம் கொடுத்திருந்த பணத்திலிருந்து எடுத்ததுதான் என்பதும், அப்படி எடுக்காதிருந்தால் இந்நேரம் வேலையை ஏற்றுக்கொள்ளச் சென்னைக்குப் போய்க் கொண்டிருப்பேன் என்பதும் எப்படித் தெரியும் அவருக்கு?

அட்டைப்பட விளக்கம்

தத்தம்மா, சொல்லம்மா!

வசந்த காலம் பிறந்து விட்டது. பச்சை மரங்களெல்லாம் வண்ணப் பூக்களாய் உதிர்கின்றன. ஆலயங்களில் எல்லாம் திருவிழாக்கள் ஆரம்பமாகி விட்டன. பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் விடுமுறை. சிறுவர் சிறுமியர்கள் இனி மேல் சந்தோஷமாக விளையாடலாம். நகர்ப்புறத்துச் சிறுவர் சிறுமியர் கிராமங்களுக்குப் போய் அத்தை, மாமா, மாமி, தாத்தா, பாட்டி முதலிய உறவினர்களைப் பார்த்துச் சந்தோஷப்படலாம்; கிராமப்புறங்களிலிருந்து வரும் சிறுவர் சிறுமியர்கள் நகர்ப்புறத்து அதிசயங்களைக் கண்டு மகிழலாம்.

வசந்த காலம் தாவர வர்க்கங்களுக்கு மட்டும் புது வாழ்வையும், புத்துணர்ச்சியையும் தருவதில்லை; பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கும் தருகிறது. கோடை விடுமுறை முடிந்து பள்ளிக்கூடம் மீண்டும் திறக்கும் போது அவர்களுக்கு ஒரே அதிசயம் காத்துக் கிடக்கும்; அவர்கள் புது வகுப்புக்கு மாற்றப் பட்டிருப்பார்கள்; புது உபாத்தியாயர் இருப்பார்; புதிய தோழர்களையும், தோழிகளையும் சந்திப்பார்கள்.

வரப் போகும் புது வாழ்வையும், புது சந்திப்புகளையும் எண்ணிப் பார்க்கும் போது கோடை வெப்பத்தின் கடுமைகூடக் குழந்தைகளுக்குத் தெரிவதில்லை.

இதோ படத்தில் இருக்கும் இந்தச் சிறுமி தன் கையில் வில் மாதிரி ஒன்றை வைத்திருக்கிறாள். அதில் ஒரு பச்சைக் கிளி அமர்ந்து அவளையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பெண் கிளியிடம் என்னவோ சொல்ல நினைக்கிறாள்.

கிளிகளுக்குத்தான் அழகாகப் பேசத் தெரியுமே! நம்கள் அழகான பேச்சினால் 'கிளி மொழி' என்று ஒரு தனி மொழியையே ஏற்படுத்திக் கொண்டு தங்கள் இனத்தின் மொழிப் பிரச்னையையே வெகு சுலபமாகத் தீர்த்துக் கொண்டு விட்டனவே. இந்தப் பெண் கிளி அந்தப் பச்சைக் கிளியிடம் என்ன கேட்டிருப்பாள் என்பதைக் கவிமணி சொல்லுகிறார், கேளுங்கள்!

'' கவலையெல்லாம் நீங்கவே
களிப்பெழுந்து பொங்கவே
பழமுமாய் இருந்து நீ
பாடுவாயோ தத்தம்மா?
பட்டு மாயுன் கழுத்திலே
வானவில்லை ஆரமாய்
இட்டமன்னர் யாரம்மா
பாணறியக் கூறம்மா!''.

வண்ணப் படம்: ஆர். வி. எஸ். மணி.

3 ஸ்விஷ் பிளேடுகள்

மற்ற 5 பிளேடுகளுக்கு ஈடாக உழைக்கின்றன

ஏன்?

1 சர்வதேச தரநிர்ணயங்களுக்கேற்ப, இறக்குமதியான டங்ஸ்டன் கார்பைட் கொண்டு செய்யப்படுகின்றன.

2 மூக்கிற்குக் கீழே வெட்டுகள் ஏற்படாமலிருப்பதற்கென மூலைகள் ரவுண்டாக்கப்பட்டுள்ளன.

3 ஒவ்வொரு பாட்சும், சுகமான க்ஷவரத்திற்கென, சோதனைக்குள்ளாகிறது.

4 மயிர்க்கால்களை ஊடுருவிச் செயல் புரிவதற்கென அல்ட்ரா கூர்மை.


5 அபிமானத்தை எதிர்ப்பதற்கும் நீடித்து நிற்கும் கூர்மைக்குமென, 1100° செ. உஷ்ணத்தில் பதப்படுத்தப்படுகின்றன.

6 அதிக மழமழப்பிற்கென, பிரத்யேகமான ஃபார்முலா TR-7, ஹை டென்ஸிடி பாலி டெட்ரா ஃப்ளோரோ எதிலீன் பூச்சு கொண்டவை.

7 இறக்குமதியான ஸ்டெயின்லெஸ் ஸ்டீலில் செய்யப்படுகின்றன.

8 தரக்கட்டுப்பாட்டையும், சீரான தரத்தையும் உறுதி செய்வதற்கென உற்பத்தியின் எல்லா நிலைகளிலும் பரிசீலிக்கப்படுகின்றன.

9 அதிக கூர்மைக்கு மல்டி-ஃபேஸெட் ஓரம்.



எனவே தான்... உங்களுக்கு
பாக்கெட்டிற்கு 3 ஸ்விஷ் பிளேடுகள் மட்டும் அளிக்கிறோம்.

CTC* டஸ்ட் டீ தரமான தேநீரின் சுவையையும் அழுத்தமான தேநீர் சத்தையும் அளிக்கிறது

சூப்பர் டஸ்ட் கிடைப்பவற்றுள் மிகச்சிறந்த CTC டஸ்ட் டீ


ப்ரூக் பாண்ட் நிபுணர்களால் பக்குவம் செய்யப்பட்டிருப்பதே அது சிறந்து விளங்கக்காரணம்






* க்ரஷ், டியர், கர்ல் — இந்த தனிப்பட்ட டீ தயாரிக்கும் முறையானது விரைவில் கரையவும், மிகுந்த தேயிலைச்சத்துக்கிடைக்கவும் உறுதியளிக்கிறது.

புகாரும் புதையலும்




● காளியாபாத் ரயில் நிலையத்தில் உள்ள புகார்ப் பெட்டி கடந்த இரண்டு வருடங்களாகத் திறந்து பார்க்கப்படவில்லை என்றும் அதற்குள் பல பழைய புகார்கள் பைசல் செய்யப்படாமல் இருந்ததாகவும் ரயில்வே மந்திரி குல்ஸாரிலால் நந்தா சமீபத்தில் குறிப்பிட்டார்.



● ஒன்பது லட்சத்துத் தொண்ணூற்றி ஓராயிரத்துச் சொச்சம் ரூபாய்கள் இருந்த ரயில்வே கூட்டுறவு வங்கியின் பணப் பெட்டி பம்பாயில் காணாமற் போய் விட்டிருக்கிறது.

● பெட்டிகளில் ஏழை பணக்கார வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது!.. இதற்கு எந்த விதமான சோஷலிச வாய்பாடு பொருந்தும்?



டாக்ஸியைப் பார்த்துக் கையை ஆட்டினாள் அந்த மாது. டாக்ஸி ஓட்டி காரை நிறுத்திப் பின் பக்கமாகக் கொண்டு வந்து அந்த வீட்டின் முன் நிறுத்தினான். உடனே அந்த மாது வீட்டுக்குள் போய்ச் சில விநாடிகளில் நான்கு குழந்தைகளுடன் திரும்பி வந்தாள். டாக்ஸியின் பின்பக்கக் கதவைத் திறந்து அந்த நான்கு குழந்தைகளையும் உள்ளே தள்ளி அமரச் செய்து மீண்டும் கதவைச் சாத்தி விட்டு 'இதோ வந்து விட்டேன்' என்று டாக்ஸி ஓட்டி

டாக்ஸியில் ஒரு நர்ஸரி

யிடம் சொல்லிவிட்டு வீட்டுக்குள்ளே போனாள். பதினைந்து நிமிடங்கள் கழித்து வெளியே வந்த அவள், டாக்ஸியின் கதவைத் திறந்து குழந்தைகளை வெளியே வரச் செய்துவிட்டு டாக்ஸி ஓட்டியைப் பார்த்து, ''உனக்கு எவ்வளவு பணம் தர வேண்டும்?'' என்று கேட்டாள். டாக்ஸி ஓட்டி ஒன்றும் புரியாமல் விழித்தான்.

''எனக்கு டெலிபோனில் சிநேகிதியுடன் சில முக்கியமான விஷயங்கள் பேச வேண்டியிருந்தது. இந்தக் குழந்தைகள் அடிக்கும் கூட்டியில் என்றால் பேச முடியாது போலிருந்தது. அதற்காகத்தான் டாக்ஸி ஆசை காட்டி உட்கார வைத்தேன்'' என்றாள்!

கொரிக்கவும் சிரிக்கவும்

கோமதி சுவாமிநாதன்

உலகப் பிரசித்தி பெற்ற துப்பறியும் நவீனங்கள் எழுதும் அகதா கிரிஸ்டி அம்மையாரின் கணவர் பழம்பொருள் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டிருப்பவர். ''எப்போதும் புதுப் புதுக் கற்பனைகளைத் தேடிக் கொண்டி

பழமைப் பிரேமை!

ருக்கும் உங்களுக்கும், நினைவிலும் கனவிலும், பழைய நாகரிகத்தின் சின்னங்களைத் தேடிக் கண்டுபிடிக்க விழையும் உங்கள் கணவருக்கும் எப்படித்தான் வாழ்க்கை இணைந்து போகிறதோ?'' என்று கேட்டார் ஒரு நண்பர்.

அகதா கிரிஸ்டி சிரித்துக் கொண்டே, ''மிக நல்ல ஜோடிப் பொருத்தம்தானே. எனக்கு வயது ஆக ஆக என் கணவர் என்பால் வைத்திருக்கும் மதிப்பு உயர்ந்து கொண்டேயிருக்கும்!'' என்றார்.




■ ■ ■ ■ ■ ■

கிட்டே வராது!

பிரசித்திபெற்ற 'மாடர்ன் ஆர்ட்' மன்னன் பிக்காஸோ, தம் வீட்டில் ஒரு சமயம் சில நண்பர்களுக்கு விருந்தளித்தார். விருந்துக்குப் பிறகு அவர் வீட்டுச் சுவர்களைக் கவனித்த ஒரு நண்பர், ''உங்களுக்கே உங்கள் ஓவியங்களைப் பிடிக்காதோ? உங்கள் ஓவியங்களில் ஒன்றைக் கூட உங்கள் வீட்டில் காணோமே?'' என்றார் குத்தலாக.

பிக்காஸோ நிதானமாக முகவாய்க்கட்டையைத் தடவிக் கொண்டார். ''எனக்கு ஆசைதான்! ஆனால் அவ்வளவு விலை கொடுத்து வாங்கக் கட்டுப்படி ஆக வேண்டாமா?'' என்றார்.





எல்லாம் ராமமயம்!

'எத்தனை ராமனடி?' என்ற நிரம்பட இசை திடீரென்று ஒலிக்க ஆரம்பிக்கிறது. அது வரை பந்தலில் சிந்தனையிலும், பேச்சிலும் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், நிமிர்ந்து உட்கார்ந்து ஒருமனதாய் ஒரே இடத்தைப் பார்க்கிறார்கள். இந்தத் தவ நிலை சரியாக இரண்டரை மணி நேர காலம் நீடிக்கிறது. மீண்டும் அதே 'எத்தனை ராமனடி?' இசை ஒலிக்க ஆரம்பிக்கிறது. அத்தனை பேரும் மரத்துப் போன கால்களை உதறித் தாங்கள் தங்கள் வீட்டு நினைவு வந்தவர்களாய்க் கிளம்புகிறார்கள்.

சமீபத்தில் கும்பகோணத்தில் பதினைந்துநாட்கள் இரவு எட்டிலிருந்து பத்தரை வரை ராமாயண பிரசங்கம். நிகழ்த்தியவர் புலவர் கீரன். ஏற்பாடு செய்தவர்கள் ராமன் அண்டு ராமன் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள். 'எத்தனை ராமனடி?' என்று இசைக்கும் இந்த நிறுவனத்துக்கும் நிறைய உறவு உண்டு. பல பாதைகளில் ஓடும் இந்த நிறுவனத்தின் அறுபத்தி ஐந்து பிரயாணி பஸ்களுக்கும் அபிராமன், கோதண்டராமன், ராஜா ராமன் என்று அறுபத்து ஐந்து ராம நாமம் இணைந்த பெயர்களைச் சூட்டியிருக்கிறார் ஸ்தாபகர் காலஞ்சென்ற ஸ்ரீ நாராயணய்யர்.

ஆகாச வெடி

■ "கோவையில் விற்காமல் கஜானாவில் தேங்கிவிட்ட பதின்மூவாயிரத்து ஐந்நூறு லாட்டரி டிக்கெட்டுகள் அழிக்கப்பட்டன." — செய்தி


இது என்ன பிரமாதம்! பரிசு கிடைக்காமல் ஏமாந்தவர்கள் கோடிக்கணக்கில் தாங்கள் வாங்கியிருந்த டிக்கெட்டுகளைக் கிழித்தார்களே!

■ "பட்டுக்கோட்டையை அடுத்த மாரணிபுரத்தில் நாடகம் ஒன்றுக்கு டிக்கெட் வாங்காமல் உள்ளே வந்தவரிடம், டிக்கெட் கேட்க அவர் ஆத்திரமடைந்து நண்பர்கள் துணையுடன் அந்த நாடகக் கொட்டகைக்குத் தீ வைத்துப் பெரும் சேதமுண்டாக்கினார்கள்."

—செய்தி



நாடகத்தில் சூடு பிடிக்கவில்லை என்று யாரும் குறை கூறியிருக்க முடியாது.



பட்டு மாமா சிட்டு மாமி

"என்ன, பிள்ளையாண்டானுக்கு டைம்டேபிள் போட்டுத் தரேளா? இன்னும் பள்ளிக்கூடம்கூடத் திறக்கலியே?"

"அது இல்லேடி! எந்தெந்தக் கல்யாணத்திலே என்னென்னிக்கு எந்தெந்த வேளைச் சாப்பாட்டை வைச்சுக்கலாம்னுதான் டைம்டேபிள் போட்டுண்டிருக்கேன்!"

கரம் மிக்ஸர்

பழங்காலத்து நாவல்களுக்கும் தற்கால நாவல்களுக்கும் என்ன வித்தியாசம்?

அந்தக் காலத்து நவீனங்களில் கதாநாயகன் கதாநாயகியைக் கடைசிப் பக்கத்துக்கு முன் பக்கம் வரை நெருங்கவே மாட்டான். இப்போதோ மேல் அட்டையிலேயே, எடுத்த எடுப்பிலே அவளை அரவணைக்க ஆரம்பித்து விடுகிறான்.



●●●

இரண்டு பெண்மணிகளுக்கு இடையே திடீரென்று தீவிர நட்பு உணர்ச்சி ஏற்பட்டால்?

பாவம்!.... யாரோ ஒரு மூன்றாவது பெண்மணிக்கு இரண்டு விரோதிகள் தோன்றி விட்டனரென கணித்துக் கொள்ளுங்கள்.



அவளா சொன்னாள்?

ஆர். எஸ். மணி


மாம்பலம் பஸ் ஸ்டாப்பை விட்டுப் புறப்பட்டபோது பஸ்ஸில் ஒரே கூட்டம். 'முன்னே போ — புட்போர்டில் நிற்காதே — சில்லறை கொடு' — என்று கண்டக்டரின் அதிகாரம் தான் பறந்தது. இவையொன்றும் மூர்த்தியின் செவிகளில் விழவில்லை. பேப்பரிலிருந்த 'வான்டட்' காலத்திலேயே கவனமாக இருந்தான். 'லேடி டைப்பிஸ்டுகள் தேவை' 'பெண் குமாஸ்தாக்கள் மனுச் செய்யவும்'. 'பெண் பிரதிநிதிகள் விண்ணப்பித்துக் கொள்ளவும்' — வெறுப்படைந்தான் மூர்த்தி.

'இது பெண்களுக்குத்தான் காலம்; எங்கு போனாலும் பெண்களின் போட்டி — எந்த ஆபீஸிலும் அவர்களுக்கு முதலிடம். இப்படிப் போட்டி போட்டால் கடைசியில் ஆண்கள் கதி அதோகதிதான்.' ஏற்கனவே பெண் இனத்தின் மீதிருந்த வெறுப்பு இன்னும் அதிகரித்தது அவனுக்கு.

''ஏ மிஸ்டர், எழுந்திருங்க, லேடீஸ் ஸீட்'' என்றது ஒரு குரல். மூர்த்தியின் கவனம் கலைந்தது. கடைக்கண்ணால் கவனித்தான். பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள் ஒருபெண். கவர்ச்சி உடை, ஆடம்பரத் தோற்றம். அலட்சிய பாவனை — இவை அவள் ஒரு கர்வி என்பதை விளம்பரப்படுத்தின. அவனுடைய வெறுப்பு அதிகரித்தது. காதில் விழாதவன் போல் அமர்ந்திருந்தான் மூர்த்தி.

கையிலிருந்த குடையினால் அவன் தோளில் இலேசாக ஒரு தட்டுத் தட்டினாள் அந்தப் பெண்.

''ப்ளீஸ் கெட் அப், இது லேடீஸ் ஸீட்'' என்றாள் அவள் அதிகாரக் குரலில். சுற்று முற்றும் இருந்தவர்கள் அவனையே பார்த்தனர். கையிலிருந்த பேப்பரை வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்க முடியாமல் எழுந்து நின்று ஏற்கனவே இடிபட்டுக்கொண்டிருக்கும் கும்பலுடன் சேர்ந்து கொண்டான்.



ஹேண்ட் பாக்கையும், குடையையும் மடியில் வைத்துக் கொண்டு கூலிங் கிளாஸைச் சரிப்படுத்திப் போட்டுக் கொண்டு அலட்சியமாக அமர்ந்திருந்தாள் அந்தப் பெண். நிற்க முடியாமல் நின்று உட்கார்ந்திருப்பவர் மீதும் நின்றுகொண்டிருப்பவர் மீதும் முட்டி மோதி. 'டோஸ்' வாங்கிக் கொண்டு பிரயாணம் செய்யும் மூர்த்தியை விஷமக் கண்களினால் பார்த்து உள்ளூறச் சிரித்துக் கொண்டிருந்தாள் அந்தப் பாவை.

படித்துப் பட்டம் பெற்றுவிட்டு வேலையில்லாமல் திண்டாடும் நபர்களில் மூர்த்தியும் ஒருவன். தகப்பனார் இல்லை. தாயார் மட்டும் தான் இருந்தாள். நிரந்தர வருவாய் இல்லாமல் எத்தனை காலம்தான் வாழ முடியும்? நல்ல தகுதிகள் இருந்தும் வேலை கிடைக்காவிட்டால் வெறுப்பு ஏற்படுவது சகஜந்தானே? அத்துடன் எங்கு சென்றாலும் பெண்களுக்குச் சலுகை என்றால்?

சுகேசன் கம்பெனியில் வேலை கிடைக்கும் என்று கேள்விப்பட்டான். அந்தக் கம்பெனியில் வேலை செய்யும் ஏகாம்பரம் மூர்த்தியின் நண்பன். நல்ல சிபாரிசு இருந்தால் கண்டிப்பாக வேலை கிடைக்கும் என்று கூறினான் ஏகாம்பரம். தனக்குத் தெரிந்த ஒரு டாக்டரைப் பிடித்தான். டாக்டர் ஒரு வக்கீலுக்குச் சிபாரிசுக் கடிதம் கொடுத்தார். வக்கீல் ஓர் ஆடிட்டரின் பக்கம் கையைக் காண்பித்தார். அந்த ஆடிட்டரைப் பிடிப்பது பெரும்பாடாக இருந்தது. அன்று அவரை எப்படியாவது பிடித்துச் சிபாரிசுக் கடிதம் வாங்கி விடவேண்டும் என்றுதான் அத்தனை அவசரமாகக் கிளம்பி யிருந்தான் மூர்த்தி.

மவுண்ட் ரோட்டில் இரண்டடுக்குக் கட்டிடம் ஒன்றில் இருந்தது சுகேசன் கம்பெனி. மாடிப் படிக்கட்டுகளில் 'மளமள' வென்று ஏறிய மூர்த்தி ஆபீஸின் ஹாலை அடைந்தவுடன் அசைவற்று நின்றுவிட்டான். பஸ்ஸில் பார்த்த பாவை 'என்குயரி கவுண்டரில்' அலட்சியமாக அமர்ந்திருந்தாள். அவள் பெயர் வனஜா என்று அறிவித்தது கவுண்டரிலிருந்த 'இண்டிகேஷன் போர்டு'.

மூர்த்தி அவளைச் சட்டை செய்யவில்லை; மதிக்கவும் இல்லை. ஹாலின் மற்றொரு புறத்தில் இருந்த மானேஜரின் அறையின் பக்கம் சென்றான். வெளியில் அமர்ந்திருந்த பியூன் அவனை உள்ளே அனுமதிக்கவில்லை. விசாரணைக் கவுண்டரின் பக்கம் கையைக் காண்பித்தான்.

''மானேஜரைப் பார்க்கவேண்டும்.'' அலட்சிய பாவத்துடன் கேட்டான் அவன். வனஜா கையிலிருந்த புத்தகத்திலேயே கவனமாக இருந்தாள். அவனை அவள் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. ஒருமுறை கனைத்தான். — டையைச் சரிப்படுத்தியவாறு மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டான்.

வனஜா படிப்பதை நிறுத்தவில்லை. தலையை நிமிர்த்தவுமில்லை. கவுண்டரின் ஒரு மூலையில்

கிடந்த 'எங்கேஜ்மெண்டு பேடை' எடுத்து அவன் பக்கம் நகர்த்திவிட்டுப் படிப்பிலேயே கவனமாக இருந்தாள். இந்த அலட்சியப் போக்கு மூர்த்தியின் கோபத்தைக் கிளறியது. ஏதேதோ சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் எதையும் சொல்ல முடியவில்லை. பெயர், விலாசம், வந்த காரணம் — இவைகளை எழுதி முடித்தான். மறு கணம் கவுண்டரின் அருகில் கிடந்த 'நோ வேகன்ஸி' போர்டை எடுத்து மேஜையின் மீது வைத்தாள் வனஜா. 'வேலை காலியில்லை, நீ போகலாம்' என்று சொல்வது போலிருந்தது அவள் செயல்.

"இது மாதிரி நான் எத்தனையோ போர்டுகளைப் பார்த்திருக்கிறேன். வெளியிலேதான் இந்தப் போர்டு இருக்கும். உள்ளே ரகசியமாக அப்பாயிண்ட்மெண்ட் நடந்து கொண்டே இருக்கும். இது வெறும் கண் துடைப்பு— நீங்க சாதாரண ஓர் என்குயரி கிளார்க்! இதை உள்ளே அனுப்ப வேண்டியதுதான் உங்க வேலை."

"ஐயாம் ஸாரி. வேலை விஷயமாக யாரையும் உள்ளே அனுப்பக் கூடாதுன்னு கண்டிப்பான உத்தரவு."

"நான்சென்ஸ்! என்னை என்ன சாதாரண அப்ளிகெண்டுன்னு நினைச்சீங்களா? பி.எஸ்ஸி. பஸ்டு கிளாஸ். — டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்டு ஹையர் — பத்து பாஷை தெரியும். அதோட பெரிய சிபாரிசு வேறே இருக்கு. நீங்க எனக்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை. சொல்றவங்க சொல்லட்டும்."

அடித்தாற்போல் பேசிவிட்டு ஆவேசத்தோடு மானேஜரின் அறைக்குள் நுழைந்தான் மூர்த்தி.



பத்து நிமிடங்களுக்குப் பிறகு மூர்த்தி மானேஜரின் அறையை விட்டு வெளியே வந்தான். கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். நெற்றியில் புரண்ட மயிரைத் தள்ளி விட்டுக் கொண்டான். டையைச் சரி செய்தவாறு வழக்கம் போல் கலைந்து விட்டுக் கம்பீரமாக நடந்தான் மூர்த்தி.

"ஏ, மிஸ்டர்!"—

அலட்சியமாக வனஜாவைத் திரும்பிப் பார்த்தான். விரலை அசைத்து அவனைத் தன் அருகில் வருமாறு அழைத்தாள் வனஜா. அலட்சியமாக அவன் அருகில் நடந்தான்.

'என்ன விஷயம்?' என்று கேட்பது போல் புருவத்தை உயர்த்தித் தாழ்த்தினான் மூர்த்தி.

"என்ன ஆச்சு?"

"வேலைதானே? — ஓ. எஸ். கிடைச்சுப் போச்சு. — எனக்கு என்ன படிப்பு இல்லையா? பர்ஸனாலிட்டி இல்லையா? என் அப்ளிகேஷனைப் பார்த்தவுடனே மானேஜர் அசந்து போயிட்டார். அப்ளிகேஷனிலேயே 'அபாயின்டட்'ன்னு எழுதிட்டார். நாளைக்கு ஆர்டர் வரும். இப்போ பெண்களின் கை உயர்ந்திருக்கலாம். ஆனால் இது இப்படியே நீடிக்கும்னு சொல்ல முடியாது. — எதுக்கும் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருங்க."

மூர்த்தி வெளியேற முயன்றான். அவனுடைய கோட்டின் விளிம்பைப் பிடித்து இழுத்து நிறுத்தினாள் வனஜா. உதட்டில் கேலிப் புன்னகை; பார்வையில் விஷமம். கவுண்டரின் ஒரு பக்கத்தில் மடித்து வைத்திருந்த ஒரு காகிதத்தை எடுத்து அவனிடம் காண்பித்தாள்.

"இதுதானே உங்க அப்ளிகேஷன். இங்கே என்ன எழுதியிருக்குன்னு பார்த்தீங்களா? 'நோ வேகன்ஸி — வெயிட்டிங் லிஸ்டு' — அப்படின்னு அவ்வளவுதான்னு அர்த்தம். இதுவே நீங்க ஒரு லேடி அப்ளிகெண்டா இருந்தால் உடனே உங்களுக்கு வேலை கிடைச்சிருக்கும். என்ன செய்யறது? காலம் மாறிப் போச்சு."

அது ஏற்கனவே அவனுக்குத் தெரிந்த விஷயம்தான். வேலை காலி இல்லை என்று சொல்லிவிட்டார் மானேஜர். ஆனால் வனஜாவுக்காக அப்படி நடித்தான். அவன் மானேஜரின் அறையை விட்டு வெளியே வருவதற்கு முன்பு அவனுடைய அப்ளிகேஷன் அவள் கைக்கு வந்திருக்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அந்த ஆபீசில் அவனுக்கு வேலை கிடைக்கப் போவதில்லை. இனி இங்கு வரவேண்டிய அவசியமும் இருக்காது. ஆத்திரம் தீரப் பேசிவிட்டுப் போய்விட்டால் என்ன?

"காலம் மாறிப் போகல்லே. கெட்டுப் போச்சு. — பெண்களினாலே உலகமே கெட்டுப் போச்சு."

"வாயை மூடுங்க. நாங்க எப்பவுமே அடிமையாக இருக்கணுமா?"

"பெண்களினாலேதான் ஆண்களுடைய வாழ்க்கை பாழாயிடறது. நிரந்தரமாக வேலையையே நம்பி வாழற ஆண்கள் எவ்வளவு பாதிக்கப்படறாங்க தெரியுமா?"

"ஆண்கள் பொறுப்பு இல்லாம இருக்கிறதினாலேதானே இந்த நிலைமை ஏற்பட்டது. பெண்களுடைய வருமானத்தை நம்பி எத்தனை குடும்பங்கள் நடக்கின்றன தெரியுமா?"

"ஆயிரத்திலே ஒண்ணு அப்படி இருக்கலாம். அதுக்காக எங்கே போனாலும் இப்படிப் போட்டி போடணுமா? மனைவியின் வருமானத்தை நம்பிக் கணவன் கொஞ்ச நாட்கள் வாழலாம். ஆனால் பொறுப்புள்ள கணவனின் வருமானத்தை நம்பி ஒரு மனைவி வாழ்நாள் முழுதும் நிம்மதியாகக் காலம் கழிக்கலாமே — உதாரணமா உங்களையே எடுத்துக்குங்க. உங்களுக்குக் கல்யாணமானா வேலைக்கு வருவீங்களா?"

வனஜாவின் கண்கள் கோபக் கனலைக் கக்கின. 'பியூன்' என்று கத்தியவாறு சட்டென்று எழுந்தாள். பியூன் பறந்தோடி வந்தான்.

"அம்மாவுக்கு ஐஸ் வாட்டர் வேணுமாம். சீக்கிரம் கொண்டு வா" என்று கூறியவாறு அந்த இடத்திலிருந்து அந்தர்த்தியானமாகி விட்டான் மூர்த்தி.

மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் மூர்த்தியும் ஏகாம்பரமும் சந்தித்துக்கொண்டார்கள்.

"ஏண்டா பழி, அநியாயமா காரியத்தைக் கெடுத்திட்டியேடா. வனஜா மூலமா மானேஜர்கிட்டே சொல்லி சமயம் வரும்போது உன் அப்ளிகேஷனைத் தள்ளி விடலாம்னு நினைச்சா அவளோட சண்டை போட்டுட்டு வந்து நிக்கிறயே."

"போடா, அவள் என்ன மானேஜரின் காரியதரிசியா? மரியாதையா நடந்துக்க? சாதாரண என்குயரி கிளார்க்தானே?"

"போடா மண்டு. மானேஜரின் பெண் அவள். கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சுண்டு வேலையிலே வந்து உட்கார்ந்திருக்கா. அவளுக்காக ஏற்படுத்தின 'போஸ்டு'தான் அது."

அதிசயித்துப் போனான் மூர்த்தி.

'மானேஜரின் பெண்ணா வனஜா? அதனாலேதான் இத்தனை கர்வமா? ஆபீசில் இவ்வளவு சலுகையா?' — அவசரப்பட்டுவிட்டோமே' என்ற எண்ணம் எழுந்தது. இருந்தாலும் அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"எனக்கு வேலை கிடைக்கலேன்னாலும் பரவாயில்லே.. ஒரு பெண் சிபாரிசு செய்து எனக்கு வேலை வாங்கிக் கொடுக்க வேண்டாம்!"

"டேய் மூர்த்தி, உனக்கு இன்னொரு விஷயம் தெரியுமாடா? இத்தனை நாளா வனஜாவினுடைய கல்யாணம் வெயிட்டிங் லிஸ்டிலே இருந்தது. ஆனால் அவளுக்குக் கல்யாணமாகப் போறதுடா."

"அப்படியா?"

"எவனோ கன்னு பின்னுன்னு மொட்டைக் கடுதாசி எழுதறானாம். மூணு கடுதாசி வந்துடுத்தாம். வீட்டிலே ஒரே ரகளைன்னு கேள்விப் பட்டேன். வனஜாவுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கட்டுந்தான் மறு வேலைன்னு மானேஜர் மும்முரமா இருக்கார்."

"அப்போ அவள் கொட்டம் அடங்கிடுச்சுன்னு சொல்லு. இனிமேல் மூக்க பேச்சு காட்ட மாட்டாள். இது அவளுக்குச் சரியான பாடம்."

"ஆமாண்டா. ரொம்ப மாறிப் போயிட்டாள். வரது போறதே தெரியல்லே. அது சரி. உண்மையைச் சொல்லு. இது உன் வேலைதானே? நீ அவளைப் பத்தி விவரமா விசாரிச்சபோதே சந்தேகப்பட்டேன். கடைசியிலே நீயே அப்படிச் செய்துட்டியோ?"

"சேச்சே. எனக்கு என்னடா தலை எழுத்து? யார் எக்கேடு கெட்டுப் போனால் எனக்கு என்ன? நான் ஏண்டா அப்படிச் செய்யறேன்? நேரிலேயே போய்க் கேக்கறேன். எனக்கு என்ன பயம்?"

ராபின் ப்ளூவின் பிரத்யேக திறமை



சொற்ப செலவில் உங்கள் துணிகளை அற்புதமாக வெண்மையாக்குவதே!

ராபின் ப்ளூ தூய வெண்மை அளிக்கவல்லது. அது உங்கள் துணிகளுக்கு மற்ற ப்ளூ வகைகளால் முடியாத கண்கவரும் தூய வெண்மையை ஒரே ரீதியான முறையில் கொடுக்கிறது. சிறிதளவு ராபின் ப்ளூ ஏராளமான துணிகளை வெண்மையாக்குகிறது. மற்றும் விசேஷம் என்னவெனில் அது எந்த விதத்திலும் துணிகளை பாதிக்காது. அது மட்டுமல்ல. உங்கள் துணிகளை எப்பொழுதும் வெள்ளை வெளேரென்று இருக்கச் செய்கிறது.



இயற்கையான கண்கவரும் தூய வெண்மைக்கு ராபின் ப்ளூ

ARBC-30 TAM

அழுத்தம் திருத்தமாய்ப் பேசினான் மூர்த்தி. ஆனால் அது அவனுடைய திருவிளையாடல் தான்! 'உடனே உன்னைத் திருத்திக்கொள், இல்லாவிட்டால் ஊர் சிரிக்கும்' என்று அவளுக்கு ஒன்று; 'உன் பெண்ணை ஆபீசுக்கு அனுப்பாதே, ஆபத்து' என்று அவளுடைய தாயாருக்கு இன்னொன்று. 'ஒரு பெண் சம்பாதித்து வாழ வேண்டுமா? வெட்கமா இல்லையா உனக்கு?' என்று அவளுடைய தகப்பனாருக்கு மற்றொன்று—வாரம் ஒன்றாக எழுதித் தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டான். இப்படி ஏதாவது செய்தால்தான் கர்வம் பிடித்த அவள் ஓரளவாவது திருந்துவாள் என்று அந்தக் காரியத்தைச் செய்தான். அவன் எண்ணம் நிறைவேறிவிட்டது. வனஜா அடங்கி விட்டாள். சாதிக்க முடியாத காரியத்தைச் சாதித்து விட்டது போன்று பெரு மகிழ்ச்சி அடைந்தான் மூர்த்தி.

சில தினங்களுக்குப் பிறகு—

காலை சுமார் பத்து மணி இருக்கும். அப்ளிகேஷன் போட்ட இடங்களிலிருந்து ஆர்டர் ஏதாவது வராதா என்று ஏங்கிக் கொண்டிருந்தான் மூர்த்தி.

வீட்டு வாசலில் 'விர்'ரென ஒரு கார் வந்து நின்றது. வண்டியை விட்டு அலட்சியமாக இறங்கினாள் வனஜா. திகைத்துப் போனான் மூர்த்தி. 'இவள் ஏன் இன்று வருகிறாள்? என்ன வேலை? உண்மை தெரிந்து விட்டதோ? என்னைத் தாக்குவதற்காக வருகிறாளோ? உரக்கப் பேசி ஊரைக் கூட்டிவிடுவாளோ? நல்ல வேளை. அம்மா வீட்டில் இல்லை. அதே நடை, அதே உடை — அதே பாவனை — மாறுதல் ஒன்றுமில்லையே! உண்மையை வரவழைக்க ஏகாம்பரம் இப்படிச் சொல்லியிருப்பானோ?

"ஏ மிஸ்டர்! நானேதான். சந்தேகம் வேண்டாம்."

பிறகுதான் உணர்வு பெற்றான் மூர்த்தி. டம்பப் பையிலிருந்து கலியாணப் பத்திரிகை ஒன்றை எடுத்து அவனுடைய கரத்தில் திணித்தாள்.

"எனக்குத்தான் கல்யாணம். நேரே கூப்பிடணும்னுதான் வந்தேன். மறக்காமல் வந்துடுங்க."

பத்திரிகையைப் படித்தான். அவளுக்குத்தான் கல்யாணம்.

"நான் வேலையை விட்டுடணும், கல்யாணம் பண்ணிக்கணும், சம்சார சாகரத்திலே மூழ்கித் தவியாய்த் தவிக்கணும்—அப்படின்னு ஆசைப்பட்டீங்க. அந்த ஆசையை நான் நிறைவேத்திட்டேன். சந்தோஷம்தானே? இனிமேல் நீங்க அனாவசியமா மொட்டைக் கடுதாசி எழுத வேண்டாம். இதோடு நிறுத்திக்குங்க."

"இல்லே, நான் வந்து... நீங்க என்னைத் தப்பா நினைக்கட்டீங்க."

"எல்லாம் எனக்குத் தெரியும் மிஸ்டர். உங்களுடைய வேலைதான் அது. உங்க பேரில் போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்து உங்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க ரொம்ப நேரமாகி இருக்காது. உங்க நிலைமையை உத்தேசித்து நான் ஒன்றும் செய்யல்லே. பெண் இனத்தின் பேரிலே உங்களுக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்பட வேணுங்கறதுக்காக நான் என் பிடிவாதத்தையும் கொள்கையையும் விட்டுக் கொடுத்துக் கல்யாணம் செய்துக்கச் சம்மதிச்சேன்..."

படபடப்பாகப் பேசிவிட்டு மேலே ஒன்றும் பேச முடியாமல் திணறினாள். பீறிட்டெழுந்த துயரத்தை அடக்க முடியாமல் அடக்கிக் கொண்டு, "ஒரு வேண்டுகோள். மறுபடியும் இப்படி ஏதாவது எழுதி நல்ல பெண்களுடைய வாழ்க்கையை நாசம் பண்ணிடாதீங்க"... என்று கூறிவிட்டு வண்டியில் ஏறிக்கொண்டாள் வனஜா.

அவன் நினைத்தது ஒன்று; ஆனால் நடந்தது வேறொன்று.

'நான் அவளுக்குப் புத்தி சொல்ல நினைத்தேன். ஆனால் அவள் எனக்குப் புத்திசொல்லி விட்டுப் போய்விட்டாளே. சே, பெண்களின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல் என்ன அசட்டுக் காரியம் செய்துவிட்டேன்?'

"சார் போஸ்ட்' — மூர்த்தியின் சிந்தனைத் தொடர் அறுபட்டது. தபால்காரர் வீசி விட்டுப் போன கவரைக் கையில் எடுத்தான். கணேசன் கம்பெனியிலிருந்து அவனுக்கு அப்பாயிண்ட்மெண்டு ஆர்டர் வந்திருந்தது.

அவனால் அதை நம்ப முடியவில்லை. 'எதிர்பாராதது எல்லாம் நடக்கிறது. என்ன காரணத்தாலோ தெரியவில்லை. இதில் ஏதாவது சூது இருக்குமோ? போவதா வேண்டாமா?—உள்ளப் போராட்டங்களை உதறித் தள்ளி விட்டுப் புறப்பட்டான் மூர்த்தி.

"வனஜாவை உனக்கு எத்தனை நாட்களாகத் தெரியும்?" என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டார் மானேஜர் — அதாவது வனஜாவின் தந்தை.

"கொஞ்ச நாட்களாகத்தான்."

"உன் சகோதரியும் அவளும் ஒன்றாகப் படிச்சவங்களாமே."

"என் சகோதரியா?...எனக்கு...!"

"ஆமாம். வனஜா உன் வீட்டுக்கு அடிக்கடி வந்திருக்கிறாளாம். உங்க குடும்பத்தைப் பத்தி நன்றாகத் தெரியுமாமே. இதையெல்லாம் நீ ஏன் என்கிட்டே முன்னே வந்திருந்த போது சொல்லல்லே?"

"அது வந்து... வந்து சார்..."

"வனஜா உன்னைப் பத்தியும் உன் படிப்பைப் பத்தியும் ரொம்பச் சொன்னாள். எல்லாத் தகுதியும் இருக்கும்போது ஏன் இவருக்கு வேலை கொடுக்கக்கூடாது அப்படின்னு ரொம்ப தூரம் என்கிட்டே சண்டை போட்டாள். 'இவருக்கு வேலை கொடுக்கிறதாக பிராமிஸ் பண்ணினால் நீங்க சொல்றபடி நான் வேலையை 'ரிஸைன்' பண்ணிட்டுக் கல்யாணம் பண்ணிக்கிறேன்'னு சொன்னாள். என் உறவினன் ஒருவனுக்கு வேலை கொடுக்கிறதாக இருந்தேன். அதை 'கான்சல்' பண்ணிட்டு உனக்கே ஆர்டர் அனுப்பிட்டேன். அவள் அவ்வளவு தூரம் சொல்லலேன்னு உன் அப்ளிகேஷன் இன்னும் வெயிடிங் லிஸ்டிலேயேதான் இருந்திருக்கும்..."

அதற்கு மேல் மானேஜர் சொன்னது ஒன்றும் அவன் செவிகளில் விழவில்லை. 'இவ்வளவையும் அவளா சொன்னாள்? நான் அவளுக்குக் கெடுதல் செய்தேன். ஆனால் அவள் எனக்கு நல்லது செய்து பெண் இனத்துக்கே பெருமை தேடிக் கொடுத்து விட்டாளே!'

அதுதான் அவர் பெயர்..... கல்....' அதாவது, அவருக்கு மனம் கிடையாது என்று அர்த்தம்.

தாய் தந்தையர் இட்ட பெயர் என்னவோ கோதண்டராமன். மனம் நிறைந்த, வாய் நிறைந்த பெயர். அதைச் சரியாக உச்சரிக்க முடியாமல் வெளிநாட்டினர் திண்டாடுவதைப் பார்த்து, தம் இருபத்தைந்தாம் வயதில், அதைக் கே. ராமன் என்று சுருக்கிக் கொண்டார் அவர்.

இப்போது அவருக்கு ஐம்பத்தைந்து வயதாகிறது. கால ஓட்டத்தில் கே. ராமன் என்ற பெயரிலும் ஒரு புது அர்த்தம் தோன்றிக் கொண்டது.

கே. ராமன் — அதாவது, கல். ராமன்.

அவர் பெயரைச் சொன்னாலே ஆபீஸே நடுங்கும். அப்படிப்பட்ட கறாரப் பேர்வழி. வேலையில் நிபுணர். தாம் எந்த நேர்மையோடு உழைக்கிறாரோ, அதே நேர்மையைத் தமக்குக் கீழ் வேலை செய்பவர்களிடமும் எதிர் பார்த்தார். தெரியாமல் செய்து விடும் தவற்றைச் சுட்டிக் காட்டித் திருத்துவார். ஆனால் சோம்பேறித்தனத்தைக் கண்டால் அவர் ருத்திரமூர்த்தியாகி விடுவார். தவறு செய்தது யாராயிருந்தாலும் சரி, தம் அறைக்கு அழைத்து ஒரு முறை 'வார்னிங்' கொடுத்து அனுப்புவார். அடுத்த தடவை "சார்ஜ் ஷீட்!" அப்போது அவர் மனம் நிஜமாகவே கல்லாகித்தான் விடும். எதிரே இருப்பவன் கதறட்டும், கண்ணீர் சிந்தட்டும். "வேலைதான் எப்படியும் போகப் போகிறதே!" என்ற தைரியத்தில் காறித் துப்பட்டும்.... அந்தக் கல்லின் மீது எதுவுமே படியாது.... கல் கரையாது, உருகாது.

அவருக்கு நண்பர்கள் என்று யாருமே கிடையாது. நிஜமான நட்புக்கு ஓரளவு சகிப்புத் தன்மை வேண்டும். அது அவரிடம் இல்லாத ஒன்று. போட்டியும் பொறாமையும் மண்டிக் கிடக்கும் மனிதர்களின் குணக் குறைகளை மறந்து அவர்களுடன் நட்புக் கொள்ள அவரால் முடிந்ததில்லை..... ஏன், அவரிடம் மட்டும் குறைகள் இல்லையா? எந்த மனிதப் பிறவியிடம்தான் இல்லை? ஆனால் இப்படி யெல்லாம் சிந்தித்து அவர் தம் மனத்தைக் குழப்பிக் கொண்டதில்லை. நண்பர்களின் இல்லத்துக்குச் செல்லவோ, அவர்களைத் தம் இல்லத்துக்கு அழைக்கவோ, அவருக்கு அவகாசம் இல்லை. அலுவலகம் செல்வார். வீட்டுக்கு வருவார். தம் அறையில் ஆயிரக்கணக்கான புத்தகங்களை வரிசை வரிசையாக அடுக்கி வைத்திருக்கிறாரே, ஏதாவதொன்றில் மூழ்கி விட்டால் — சுவர்க்கம்தான்... புதிதாக வெளிவரும் புத்தகங்கள் அவர் பெயருக்கு வருவதும் உண்டு, விமரிசனத்துக்காக. அவர் எழுதி அனுப்பும் விமரிசனமும் தெளிவாக, காரமாக இருக்கும். நன்றாயிருப்பதைப் புகழத் தயங்க மாட்டார். ஆனால் தரமற்றதைப் பிய்த்துப் பிய்த்து எறிந்து விடுவார்.

தசையும், உதிரத்தாலும் ஆன உடலிடம் அவர் காட்டும் ஒரே பரிவு, காலை ஏழு மணியிலிருந்து எட்டு மணி வரை "வாக்கிங்". மறுபடியும் மாலை ஐந்திலிருந்து ஆறு வரை "வாக்கிங்". மற்றபடி, ஜுரம், தலைவலி என்று வந்தால் அது தானாகக் குணமடைய வேண்டியதுதான். மிஞ்சி மிஞ்சிப் போனால் என்ன ஆகும்? உயிர் போகும். எப்படியும் ஒரு நாள் போக வேண்டியது உயிர்தானே! ஸ்ரீதர் இருக்கிறான், கொள்ளி போட்டுக் கரை சேர்க்க....

என்ன! ஸ்ரீதரா! கொள்ளி போடவா? கல்லுக்கு மகனா?

ஆம்! இப்போது அவர் தனித்து வாழும் தனி மரமாய் இருக்கலாம். ஆனால் அவர் இருபத்திரண்டு வயதிலேயே மணம் புரிந்து கொண்டவர்.....

அப்போது அவர் குடும்பத்தில் மூன்று அங்கத்தினர்கள் இருந்தார்கள். அத்தை கமலம்,



கல்

ருக்மிணி பார்த்தசாரதி

மனைவி மைதிலி, அவர். இளம் வயதில் கணவனை இழந்து, அண்ணனின் நிழலில் தங்க வந்தவள் கமலம். அண்ணனின் காலத்துக்குப் பிறகு, அண்ணன் மகனை வளர்த்து ஆளாக்கியதும் அவள்தான். "இது பிறந்தவுடனேயே தாயை வாயிலே போட்டுண்டுடுத்து" என்று அவர் விமரிசனம் செய்தாலும், அவள் அக்குழந்தையிடம் கொண்டிருந்த அன்பு தாய்மையானதுதான். வீட்டில் விளக்கேற்ற மைதிலி வந்ததும் அவள் இன்பத்தை வர்ணிக்க வேண்டுமா? தினம் "சிறுசுகள் இரண்டையும்" அருகருகே நிற்க வைத்துச் சுற்றிப் போடுவாள். "எங்கேயாவது போயிட்டு வாங்களேன்!" என்று இருவரையும் துரத்தாய் வெளியே அனுப்புவாள். மைதிலியை உட்கார வைத்துத் தினம் ஒரு விதமாக அலங்காரம் செய்து பார்ப்பாள்.... "சீக்கிரம் ஒரு குழந்தையைக் கண்ணுலே காட்டும்மா!" என்பாள்.

காலம் ஓடிற்று... கமலத்தின் ஆசை நிறைவேறிற்று..... ஸ்ரீதர் பிறந்தான்.... மகிழ்ச்சி நிறைந்து வழிந்த போது விதி குறுக்கிட்டது. சாவதற்கு வயது இருக்கிறதா? ஒரு மாதக் குழந்தையை விட்டு விட்டு ஒரு தாயார் கண்ணை மூடுவதென்றால்...

அழுது புலம்பியவள் கமலம்தான். கோதண்டராமன் அழவில்லை, புலம்பவில்லை. காலத்தோடு மனப் புண் குணமடையப்பெற்றவளும் கமலம்தான். கோதண்டராமனின் மனப் புண் ஆறவேயில்லை.

மெள்ள மெள்ள விஷயத்தை எடுத்தாள் கமலம். ''ராமா! போனது போகட்டும். நாம் வருத்தப்படறதுனுலே மைதிலி திரும்பி வந்துடவா போறு? மனசைத் தேத்திக்கோ!''

''உம்...''

''ஸ்ரீதரின் முகத்தைப் பார்.... ஒரு தாய்க்காக ஏங்குகிறான்.''

''பாவம்!''

கமலத்துக்குக் கோபம் வந்தது. ''பாவம் என்னடா பாவம், சட்டுப்புட்டுன்னு வேறு ஒருத்திக்குத் தாலியைக் கட்டி இவனுக்கு ஒரு தாயாரைக் கொடுக்காமல்...''

''அத்தை... அது முடியாத காரியம். உன் ஆசைக்காக என்னைச் சம்சார பந்தத்திலே இழுத்துக் கட்டினே. மைதிலி விலகி எனக்குச் சந்நியாசத்தை வழங்கிட்டுப் போயிட்டா. மறுபடியும் என்னை இழுத்துக் கட்டப் பார்க்காதே. பார்க்கப் பார்க்க நான் கட்டாயம் மறுத்துண்டேதான் இருப்பேன். உன் மனசுதான் வேதனைப்படும்...''

''சந்நியாசத்துக்கும் வயசு உண்டுடா!''

''இல்லை. மனப் பக்குவம் மட்டும்தான் வேணும்.''

''உனக்கு இன்னும் துக்கம் ஆறலே... ஆறினுல்.....''

''அந்தக் காலம் வரச்சே பார்க்கலாம்.''

அந்தக் காலம் வரவேயில்லை. கமலம் காத்துக் காத்துப் பார்த்தாள். சொல்லிப் பார்த்தாள். கெஞ்சிக் கேட்டாள். ''எனக்கு வயசாகிறதுடா, தள்ளவேயில்லை...இந்த வயசில் இப்படிச் சமையல் வேலையும் குழந்தை வளர்ப்புமா வாட்டி எடுக்கிறயே! உன்னை வளர்த்தது போதாதா? இன்னுமொரு தாயில்லாப் பிள்ளையை ஏண்டா தலையிலே கட்டறே?'' என்று புலம்பினுள்.

''ஆள் வைக்கட்டுமா?'' என்று கேட்டார் கோதண்டராமன்.

''ஆளும் வேண்டாம், தேளும் வேண்டாம். கல்லுடா நீ, வெறும் கல்!'' என்று கோபமாய்க் கத்தினுள்.

காலம் ஓடிக் கொண்டே யிருந்தது. அத்தைப் பாட்டியின் பராமரிப்பில் ஸ்ரீதர் வளர்ந்தான். அவன் பன்னிரண்டு வயதை எட்டிய போது கமலம் படுத்தாள். ''சாகிற காலத்திலே ஒரு வாய்த் தண்ணி கொடுக்க நாதி இல்லாமல் இப்படி என்னை அநாதையாக் கிட்டியேடா ராமா! தாயில்லாப் பிள்ளையை எடுத்து வளர்த்தேனே, அதுக்குப் பரிசாடா



இது!'' என்று வாய் விட்டு அழுதான். கோதண்டராமன் ஒரு மாத லீவு போட்டு விட்டு இரவும் பகலும் அவனருகே இருந்தார். அவள் காலமும் முடிந்துவிட்டது.

வாழ்க்கை தொடர்ந்தது. ஸ்ரீதர் பள்ளிப் படிப்பை முடித்து விட்டுக் கல்லூரி ஹாஸ்டலுக்குப் போய்ச் சேர்ந்தான்.

வீட்டில் அவர், ஒரு வேலைக்காரன் மட்டுமே இருந்தனர்.

அவனிடமும் அதே கண்டிப்பு. கலீர், காலை ஆறு மணிக்கு வந்து சமைத்து வீட்டைச் சுத்தம் செய்துவிட்டுப் போக வேண்டும் அவன். பிறகு மாலை ஆறு மணிக்கு வந்தால் இரவு எட்டோடு வேலை நிற்கும். சனிக் கிழமைதோறும் மாலையில் லீவு. அன்று அவர் உணவு ஒரு பழம், பால்.

ஆறு மணிக்கு வரவேண்டியவன் ஆறரை மணிக்கு வந்தால் அலுவலக நியதியை இல் லத்திலும் செலுத்திவிடுவார் அவர். ஒரு முறை கூப்பிட்டுக் கண்டிப்பார். அடுத்த தடவை ''கெட் அவுட்.'' இந்த வேலை நீக்கு படலத்தின்போதுகூட அவர் குரல் உயராது. 'கழுதை', 'முட்டாள்' போன்ற வசை மொழிகள் வாயிலிருந்து எழமாட்டா.. ''நேற்று வார்னிங் கொடுத்தேன். இன்றும் அதே தப்பைச் செய்தாய். போய்விடு!'' அவ்வளவுதான்.

அவரை அரக்கனென்று திட்டிவிட்டுப் போன வேலைக்காரர்கள் எத்தனையோ பேர்! ஆனால் ஒருவன் போன உடனேயே மற்றொருவன் வருவான்.

அன்று காலைதான் ஒரு வேலைக்காரனை 'டிஸ்மிஸ்' செய்திருந்தார் கோதண்டராமன். கொஞ்சம் வயதானவன். கடந்த ஓராண்டு காலமாக அவரிடம் வேலை பார்த்து வருபவன். இரண்டாம் முறையாக ஏழு மணிக்கு வரவே சீட்டைக் கிழித்து அனுப்பினார் அவர். பாவம், வீட்டில் என்னென்ன கஷ்டங்களோ! கெஞ்சிக் கெஞ்சிப் பார்த்தான். அத்தனையும் அவர் செவி மீது மோதிப் பயனற்றுத் திரும் பின. கோபத்தில், ''மனுஷ்யனில்லை சார் நீங்கள். மனுஷனே இல்லை... உங்களுக்கு மனமே இல்லை... கல்லு நீங்க, பாருங்கள்!'' என்று திட்டிவிட்டுப் போனான்.

அன்று காலை உணவை ஹோட்டலில் முடித் துக்கொண்டு அலுவலகம் சென்றார் அவர். விஷயத்தை அதோடு மறந்தார். மாலை வீடு வந்த பின்தான் இரவுச் சாப்பாட்டுக்கும் ஹோட்டலை நாட வேண்டும் என்ற நினைவு வந்தது. ''சரி, வாக்கிங் போய்விட்டுத் திரும் பும்போது ஹோட்டலுக்குள் நுழைந்துவிட லாம்!'' என்று நினைத்துக் கொண்டார்.

நாள் முழுவதுமே வெயில் வாட்டி எடுத் திருந்தது. மாலைப் பொழுதில்கூடவா இப்படி யொரு இறுக்கம்! தம் அறையை அடைந் தவர் முதல் காரியமாக மின்விசிறியைச் சுழலவிட்டார். பின் உடை மாற்றிக்கொண்டு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தார்.

திடீரென்று 'பட்' என்று ஏதோ சத்தம் கேட்டது. அடுத்த கணம், கரும் மின் விசிறியில் அடிபட்டுக் குருவி ஒன்று கீழே விழுந்து துடித்து அடங்கிற்று.

குருவி மின் விசிறியின் மேல் பாகத்தில் உள்ள குழியில் கூடு கட்டிக் குஞ்சு பொரித் திருந்தது. அவருக்குத் தெரியும். தன் மக்க ளிடம் பறக்க விரும்பும் தாய்க்காக, அவர் சில நாட்களாக மின் விசிறியைச் சுழல விடுவதில்லை. இன்று வெய்யிலின் கடுமையில் குருவியை மறந்து விட்டார்.

சட்டென்று அந்தக் கல் மனத்தில் வேல் பாய்ந்தது.

பதறியவராய்த் தம் ஆசனத்திலிருந்து எழுந்து குருவிக்கருகே ஓடினார் அவர். குனிந்து அதைக் கையில் எடுத்தார். உயிர் பிரியவில்லை. ஒரு பக்கத்தின் இறகு மட்டுமே அடிபட்டிருந்தது. ரத்தம் கசிந்து அவர் கையை ஈரமாக்கியது.

அவர் தம் இரு கைகளாலும் குருவியை மெத்தென்று அணைத்துக் குளியலறைக்கு எடுத்துச் சென்றார். தம் துவாலையின் நுனியை நனைத்து ரத்தத்தை மிருதுவாக ஒற்றி ஒற்றி எடுத்தார். பின் மின்விசிறியை அணைத்து விட்டு, தம் சாய்வு நாற்காலியில் வந்து உட்கார்ந்து மடியில் குருவியை வைத்து அணைத்தவாறு தவம் இருந்தார்.

நிமிடங்கள் வளர்ந்தன. அறையில் புழுக்கம் ஏறிற்று. அவர் அதைப் பொருட்படுத்தக்கூட இல்லை. மடியில் அசையாமல் கிடந்த குருவி யையே பார்த்தவாறு அமர்ந்திருந்தார்.

எத்தனை நிமிடங்கள் கழிந்தனவோ! குருவி மெள்ளத் தன் இறகை அசைத்துப் பார்த்தது. அவர் தம் கைகளை அகற்றினார். உடலைச் சிலிர்த்துக் கொண்டது குருவி. பின் சற்றுப் பறந்து அவர் முட்டி மேல் அமர்ந்தது; பின் விர்ரென்று தன் குஞ்சுகளிடம் விரைந்தது.

சிறிது நேரம் ''கீச் கீச்'' என்ற சத்தத் தோடு அந்தக் குடும்பம் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியில் மூழ்கிற்று.

இதயத்தில் இன்பம் நிறைய கோதண்ட ராமன் முறுவலித்தார். ''என் இல்லத்தில் குடியிருந்த அந்தத் தாயாரை நான் கொல்ல வில்லை'' என்று வாய் விட்டுச் சொன்னார்.

தாயை இழந்து சேய் படும் பாட்டை அவர் அறிய மாட்டாரா? அன்பைச் சொரிந்து வளர்த்த அத்தையே, ''பிறந்தவுடனேயே தாயை வாயிலே போட்டுண்டுடுத்து'' என்று நாவினால் சுட்டதை அவர் மறந்திருப்பாரா? ஒரு மாதக் குழந்தை ஸ்ரீதர் தன் தாயின் அணைப்புக்காகக் கதறி அழுததைத்தான் அவர் மறக்க முடியுமா?

தாய்மை எய்தியவுடன் சாவைத் தழுவிய இருபது வயது மைதிலி அவர் இதயத்தில் இன்றும் வாழ்கிறாள் — மைதிலியாக அல்ல, மனைவி என்ற ஸ்தானத்திலும் அல்ல; ''தாய்'' என்ற புனிதமாய்...

கல்லுக்குள் கசியும் ஈரம் அதொன்றுதான்.

அந்தக் குருவி ஒரு தாய்.

மணி எழடித்தது. அவர் எழுந்தார். ஒரு முறை குருவியை நெஞ்சம் நிறையப் பார்த்து விட்டு வேர்வை பெருகியோடும் தம் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டார்.

பின், வீட்டைப் பூட்டிக் கொண்டு வாக்கிங் கிளம்பினார் இரு கல். ராமன்.

திரும்பும்போது அனாவசியமாய் ஹோட்ட லுக்குப் போக வேண்டும். வேலைக்காரனைத் தான் டிஸ்மிஸ் செய்துவிட்டாரே!



Sunsilk cares–
with 3 special shampoos

Pick the one that's perfect for you

Sunsilk Lemon Shampoo
For Greasy Hair: Gently washes out excess grease... gives you days of clean, bouncing, silken hair.

Sunsilk Tonic Shampoo
For Dry Hair: Contains Allantoin to nourish your hair...revives that silken lustre, leaves hair softly glowing.

Sunsilk Beauty Shampoo
For Normal Hair: Perfectly balanced to keep your hair in beautiful condition, weaving silk into every strand.



Sunsilk – more than a shampoo, a cosmetic for your hair

Quality Products by HINDUSTAN LEVER

LINTAS-SS. 11-140



பிறந்தநாள் பரிசு..

ஞாயிற்றுக் கிழமை என்னுடைய மனைவியின் சிநேகிதி விமலாவுக்குப் பிறந்த நாள். தன்னுடைய பிறந்த நாள் விழாவுக்கு வரும்படி விமலா என்னையும் என் மனைவியையும் அழைத்திருந்தாள். பிறந்த நாள் பரிசு ஒன்று வாங்குவதற்காக முதல் நாள் சனிக்கிழமை நானும் என் மனைவியும் கடை வீதிக்குச் சென்றோம்.

''இந்தக் காலணிகள் எப்படி இருக்கின்றன?'' என்று காலணிகள் விற்பனைக் கடையினுள் நுழைந்த என் மனைவி என்னைப் பார்த்துக் கேட்டாள்.

''அழகாக இருக்கின்றன! விமலாவின் அழகிய கால்களுக்கு இவை மிகப் பொருத்தமாக இருக்கும்!'' என்று மகிழ்ச்சியுடன் கூறினேன்.

என்னுடைய மனைவியின் முகம் திடீரென்று மாறியது.

''பிறந்த நாள் பரிசாகக் காலணிகள் வழங்குவது முறையல்ல!'' என்றாள் உடனே என்னுடைய மனைவி.

நாங்கள் மேலும் நடந்தோம்.

புடவைக் கடை அருகே வந்ததும், ''அங்கே பாருங்கள், எவ்வளவு அழகான புடவை!'' என்றாள் என் மனைவி.

''விமலாவுக்கு அந்தப் புடவை மிகவும் அழகாக இருக்கும். அவள் உடலுக்கு இது ரொம்ப எடுப்பாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றேன் நான்.

என்னுடைய மனைவியின் முகம் திடீரென்று மாறியது. ''இந்த நிறத்தில் அவளுக்கு ஏற்கனவே ஒரு புடவை இருக்கிறது என்று நினைக்கிறேன்'' என்றாள் என் மனைவி.

நாங்கள் மேலும் நடந்தோம்.

நகைக் கடை ஒன்றின் முன்னால் நின்றோம்.

''நெக்லஸ் ஒன்று வாங்கிப் பரிசளித்தால் என்ன?'' என்று என்னைப் பார்த்துக் கேட்டாள் என்னுடைய மனைவி.

''வாங்கலாமே! விமலாவின் அழகான நீண்ட கழுத்துக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும்!'' என்றேன்.

என் மனைவியின் முகம் திடீரென்று மாறியது. ''ஆனால் விலை அதிகமாயிற்றே! சிநேகிதியானாலும் அவ்வளவு பணம் செலவழிப்பதா? வேண்டாம்!'' என்றாள்.

மேலும் நடந்தோம்.


''மலிவான விலையில் சிறிய புத்தகம் ஒன்று வாங்கிப் பரிசளித்து விட்டால் போகிறது!'' என்று இப்பொழுது நான் ஒரு யோசனை கூறினேன்.

உடனே என்னுடைய மனைவி, ''அடடே! மறந்தே போனேனே! நாளைக்கு அப்பளாம், வடாம் இடும் வேலை எனக்கு இருக்கிறது. தோட்டத்தைக் கொத்திச் சீர்செய்வதாக நீங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள்! பிறந்த நாள் விழாவுக்குப் போக நேரம் எங்கே கிடைக்கப் போகிறது?'' என்றாள்.

நான் சந்தோஷத்துடன் சட்டைப் பையிலிருந்த பர்ஸைத் தட்டிக் கொடுத்தேன்.

'ஸ்புட்னிக்'கில் இடம் பெற்ற துணுக்கை ஆதாரமாகக் கொண்டு எழுதியவர்: காழி ஜெயா.

ஆறு வாரங்கள் கெடாத பால்! □ □ □ □ □ □ □ □ □ □



குளிர் பதனப் பெட்டியில் வைக்காமலேயே ஆறு வாரங்கள் வரையில் கெடாமல் இருக்கக்கூடிய பால் ஜெர்மனி தேசத்தில் பொன்னின் நகரில் விலைக்கு வந்துள்ளது. நவீன விஞ்ஞானம் இதனைச் சாத்தியமாக்குகிறது. பாலை 140 டிகிரி வெப்ப நிலையில் சில வினாடிகள் காய்ச்சி இறக்கி, எவ்வித கிருமிகளுமில்லாத சுத்தமான அரை லிட்டர் பாலித்தீன் பைகளில் அடைத்து விற்கிறார்கள். நாளொன்றுக்கு 36,000 அரை லிட்டர் பைகளில் பாலைத் தயாரித்து அடைக்கும் தானியங்கித் தொழில் நிலையம் பொன்னின் நகரில் இயங்குகிறது.

ஆதாரம்: 'புதிய ஜெர்மனி'
தகவல்: ''செந்தில்''

வட்ட மேஜை

பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.

ஒரு கயவன் எட்வர்டு ஏழாம் மன்னர் சிலையின் தலையில் ஒரு தார் டின்னைக் கவிழ்த்து வைக்க அது வெய்யிலில் உருகிச் சிலையையே அலங்கோலமாக ஆக்கி விட்டது எனச் செய்தியைப் படித்த போது எனக்கு 'ஏனடா இந்தியக் குடிமகனாகப் பிறந்தோம்' என வருத்தமாகப் போயிற்று. எப்படி இருந்தாலும், வேற்று தேச அரசருக்கு மதிப்பு கொடுக்காவிட்டாலும் — இழிவு படுத்தாமலாவது இருக்க வேண்டும்.

ஈரோடு
29-4-70 — எம். ஏ. நஜிமுதீன்

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி ஸபாவின் எழுபதாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி எழுதப்பட்ட கட்டுரையைப் படித்து மகிழ்ந்தோம். விழாவைச் செம்மைப்பட நடத்தியவர்களில் சபையின் தலைவர் பத்மஸ்ரீ திரு எம். ஜே. கோபாலன் அவர்கள் மிகவும் முக்கியமானவர். தமது அறுபது வயதையும் மறந்து இளைஞரைப் போல் அல்லும் பகலும் பாடுபட்டவர். இவ்வாண்டு அவர் சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதே ஒரு பெருமையாகும்.

30-4-70 — கல்கி வாசகர்களாகிய
சென்னை — 5 — சபா அங்கத்தினர்கள்

திருச்செந்தூருக்கு அருகிலுள்ள குலசேகரன்பட்டினத்தில் இராமசாமி என்பவரும் அவருடைய மனைவி குழந்தைகள் ஐந்து பேரும் திடீரென்று ஒரு நாள் தற்கொலை செய்துகொண்டனர். காரணம் வறுமை. ஆனால் அவர் வீட்டிலிருந்ததோ கணக்கிலடங்கா லாட்டரிச் சீட்டுகள். வேறு ஒரு சாமானும் இல்லை. எல்லாவற்றையும் விற்றுத் தமக்குப் பரிசு கிடைக்காதா என்று டிக்கெட்டுகள் வாங்கினார். பரிசு ஒன்றுகூட விழவில்லை. மனம் உடைந்து, மனைவி மக்களுடன் தற்கொலை செய்து கொண்டார். அரசாங்கம் மக்களை வாழ வைக்க வேண்டுமே தவிர சாகடிக்கலாமா? மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மக்களால் நடத்தப்படுகிற மக்களுடைய அரசாங்கம் என்பது இதுதானா?

திருநெல்வேலி.
24-4-70 — குமார்

நாஸ்திகர்கள் ஆஸ்திகத்தையும், ஆஸ்திகர்களையும் அவமதிப்பதைக் காட்டிலும் ஆஸ்திகர்களே ஆஸ்திகத்தை அவமதிப்பது மிகவும் வருந்தப்பட வேண்டிய விஷயம். நல்ல பக்திப் பாடல்களை ஒலிபரப்புவதற்குப் பதிலாக 'ஜிஞ்சிலி பிச்சான்', 'வா வாத்தியாரே வீட்டாண்டே' போன்ற சினிமாப் பாடல்களைப் பல கோயில்களில் ஒலிபரப்புகிறார்கள் என்பது மிகவும் வேதனை அளிக்கிறது.

உதாரணமாக மாம்பலம் ரயிலடியிலுள்ள விநாயகர் கோயிலில் இத்தகைய பாட்டுகள் ஒலிபரப்பப்படுவது தி. நகரிலுள்ள பலருக்குத் தெரிந்த விஷயம். எனவே இனியாகிலும் இத்தகைய போக்கைத் தடுத்து நிறுத்துவார்களானால் நல்லது.

சென்னை-61
2-5-70 — ''உண்மை விளம்பி''

நன்றியின் சின்னமாக விளங்கும் நாயிடம் கொடிய நஞ்சும் இருக்கிறது. நாய்க் கடிக்கு மிகவும் சிறந்த மருந்து நம் சர்க்கார் மருத்துவ மனைகளில் இருந்தும், மக்களில் பலர் நாய் கடித்ததும் மருத்துவ மனையில் தகுந்த சிகிச்சை பெறாத காரணத்தால் மிக்க அவதிக்குள்ளாகிக் கஷ்டத்துடனும், பரிதாபத்துடனும் இறக்க நேரிடுகிறது. இதற்கு மக்களின் அறியாமையும், நாய்க்கடி மருந்து பற்றிப் போதிய விளம்பரம் இல்லாததுமே காரணங்கள்.

பொதுவாக நல்ல நாயோ, வெறி நாயோ கடித்தவுடன் உடனே சர்க்கார் மருத்துவ மனைக்குச் சென்று தினசரி ஓர் ஊசி வீதம் பதினொரு நாட்களுக்குத் தொடர்ச்சியாக ஊசி போட்டுக் கொண்டால், பிற்பாடு எந்த விதத் தொல்லையோ, கஷ்ட மரணமோ இல்லாமல் வாழலாம்.

சேலம்-1 — எம். விசுவநாதன்


உழைத்துவிட்டுச் சோர்வுடன் நிற்கும் பொழுது பஸ் வந்தாலும் ஆண்களே முண்டியடித்துக் கொண்டு ஏறி விடுகிறார்கள். கடைசியில் பெண்கள் ஏறப் போனால் படிகளில் நின்று பயணம் செய்யத்தான் இடம் இருக்கிறது. இந்த ஆபத்துக்குப் பயந்து ஏறாது நின்று பஸ்ஸின் பின்புறம் பார்த்தால் லேடீஸ் ஸீட்களில் ஆண் சிங்கங்கள் அமர்ந்து கொண்டு செல்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

''லேடீஸ் பர்ஸ்ட்'' என்ற பண்பாடு மாறி, ''லேடீஸ் லாஸ்ட்'' என்ற வழக்கம் வந்திருக்கிறது. ஆகையால் காலை,-மாலை வேளைகளில் பெண்களுக்குத் தனி பஸ் விடவோ, அல்லது பஸ்ஸில் பெண்கள் பகுதியை அதிகமாக்கவோ அரசு ஆலோசித்து ஒரு நல்ல முடிவு காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை-5 — எம். லலிதா

(பெண்களுக்குத் தனி பஸ் விடுவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. -ஆர்)

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



Blue Seal TALC
வியர்வை
நாற்றத்திலிருந்து
பூரண பாதுகாப்பு
ப்ளூ ஸீல் டியோடெராண்ட் டால்க்
ஹெக்ஸக்ளோரோபீன் கலந்தது
வலிமை மிக்க ஹெக்ஸக்ளோரோபீன் பாக்டீரியாக்களின் அழிவைத தடுக்க, வியர்வையின் நாற்றம் நீங்கி புத் துணர்ச்சி பெறுவீர். உடலை நறுமணத் துடன் கமழச்செய்யும் அதன் சுகந்தம்.
நினைவிருக்கட்டும்! பாதுகாப்புதரும் புத்துணர்ச்சிதரும் உங்களுக்கு உறுதி யளிப்பதற்கு பட்டுமென்மை ப்ளூ ஸீல் டியோடெராண்ட் டால்கைத் தவிர வேறெதுவுமில்லை.
ப்ளூ ஸீல் டியோடெராண்ட் டால்க் ஹெக்ஸக்ளோரோபீன் கலந்தது.
சீஸ்ப்ரோ பாண்ட்ஸின் இன்னொரு தரமான தயாரிப்பு.
சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்கார்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon